# உதயன்

Uthayan - A lively National Tamil Daily


சுடர்: 30 கதிர்: 023 வள்ளுவர் ஆண்டு: 2045

மார்கழி 04, வெள்ளிக்கிழமை 19.12.2014


**வானிலை**
மேகமூட்டமான வானிலை காணப்படும் மாலை வேளை மழை பெய்யக் கூடும்.

# வடக்கில் இரகசிய சிங்கள குடியேற்றம்

## அம்பலப்படுத்துகின்றார் ரஜீவ விஜேசிங்க எம்.பி.



கொழும்பு, டிசெ.19

"வடக்கில் இடம்பெறும் சட்டவிரோத சிங்களக் குடியேற்றங்கள் மக்களுக்கும், நாடாளுமன்றத்துக்கும் அறிவிக்காமல், மீள்குடியேற்ற அமைச்சுக்கும் தெரியாமல் மிகவும் இரகசியமான முறையில் முன்னெடுக்கப்படுகின்றன" – என்று குற்றஞ்சாட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க, வடக்கில் சிங்கள மக்களை சட்டவிரோதமாகக் கொண்டு வந்து குடியேற்றும் நடவடிக்கைக்கு, அங்கு பூர்வீகமாகவுள்ள சிங்கள மக்களே எதிர்ப்பு வெளியிடுகின்றனர்

பக்.26

## எரிந்த நிலையில் சடலம் மீட்பு

வடமராட்சி முள்ளிப் பகுதியில் குப்பைக் குவியலுக்கு அருகில் மனித எலும்புக் கூடு ஒன்று நேற்றுக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

முள்ளிப் பகுதிக்கும் யார்க்கரு சந்திக்கும் இடையில் உள்ள வீதிக்கு அண்மையில் குவிக்கப்பட்டிருந்த தென்னம் பொச்சுக் குவியலுக்கு அருகில் இந்த எலும்புக் கூடு காணப்பட்டது.

பக்.04

## இனவாத அரசியல் மோசம்; எமக்கு தேவை சகோதர பாசம்

இனவாத அரசியல் மிக மிக மோசம், எமக்கு தேவை சகோதர பாசம். பட்ட கஷ்டம் இனிமேல் வேண்டாம் புத்தியுடன் செயல்படுவோம். – இவ்வாறு அடுக்கு மொழியில் பேசி வடக்கில் தனது பரப்புரையை ஆரம்பித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

பக்.02

## பொலிஸார் இருவர் சாவு

யாழ்ப்பாணம், டிசெ.19

காலை உணவு உட்கொண்டபோது மயங்கிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும், விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் குருநாகலைச் சேர்ந்த எ.இந்திர குமார (வயது 30) என்பவர் நேற்றுக் காலை உணவு உட்கொள்ளும் போது திடீரென

பக்.26

## யாழில் மஹிந்த தேர்தல் ஆலோசனை

யாழ்ப்பாணம், டிசெ. 19

தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்காக வடக்குக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நேற்று இரவு காங்கேசன்துறையிலுள்ளதல்செவன விடுதியில், யாழ்.மாவட்டத்திலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

ஜனவரி மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்காக வடக்கு மாகாணத்தில் நேற்றைய தினம் தனது பரப்புரைகளை ஜனாதிபதி ஆரம்பித்திருந்தார். முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில்

பக்.26

## தீவிரம் அடைகிறது டெங்கு

யாழ்ப்பாணம், டிசெ.19

டெங்குத் தொற்று தீவிரமடைந்து வரும் நிலையில் நேற்று மட்டும் 19 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் 11 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலைத் தரப்புகள் தெரிவித்துள்ளன.

பக்.26

# மைத்திரிபாலவுடன் இரகசிய உடன்படிக்கை எதுவுமில்லை

## அடித்துக் கூறுகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

ஆலையடிவேம்பு, டிசெ.19

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிடும் எதிரணி வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவுடன் தாம் எந்தவிதமான இரகசிய ஒப்பந்தங்களையும் செய்து கொள்ளவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

தமிழ்க் கூட்டமைப்புடன் மைத்திரிபால சிறிசேன இரகசிய ஒப்பந்தம் செய்துள்ளார் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்த

பக்.26

## வடக்கு 'பட்ஜெட்' - 2015

வடக்கு மாகாண சபையின் வரவு – செலவுத் திட்டம் மீதான விவாதம் நேற்று முன்தினம் புதன்கிழமை தொடக்கம் இடம்பெற்று வருகின்றது. அதில் நேற்று மதியம் சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூக சேவைகளும் புனர்வாழ்வளித்தலும், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சு மீதான குழுநிலை விவாதமும், மாலை கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மீதான குழுநிலை விவாதமும் நடைபெற்றன.

**சுகாதார அமைச்சு**

- ★ வவுனியா, சாவகச்சேரியில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஸ்தாபிப்பு.
- ★ மாங்குளத்தில் வடக்கு மாகாண புனர்வாழ்வு வைத்திய சாலை நிர்மாணம்.
- ★ கல்மடுநகர் பிரதேசத்தில் மூலிகைக் கிராமம் அமைக்கப்படும்.

பக்.21

**கல்வி அமைச்சு**

- ★ வறிய பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதியுதவி
- ★ முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 4 ஆயிரம் கொடுப்பனவு
- ★ ஆசிரிய உதவியாளர்களுக்கு மாதாந்தம் 13 ஆயிரம் கொடுப்பனவு

பக்.26

## கூட்டமைப்பு , மு.கா ஆதரவு மைத்திரிக்கே

### ராஜித சேனாரத்ன நம்பிக்கை

கொழும்பு, டிசெ, 19

நாம் ஜனநாயகத்தை வென்றெடுக்கும் புனிதப் போராட்டத்தில் ஒன்று திரண்டுள்ளோம். மக்களையும் நாட்டையும் காப்பாற்ற எமக்குக் கிடைத்துள்ள இறுதிச் சந்தர்ப்பமாகக் கூட இது அமையலாம். இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் எம்முடன் இணைந்துகொள்ளும் என எதிர்பார்க்கின்றோம் என்றும் முன்னாள் அமைச்சரும் பொது எதிரணியின் முக்கிய உறுப்பினருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

பொது எதிரணியின் செயற்பாட்டில் சிறுபான்மை மக்களின் பங்கு தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே

பக்.26

## மைத்திரிபால சிறிசேன மற்றொரு மஹிந்தவே

மைத்திரிபால சிறிசேன இன்னொரு மஹிந்த ராஜபக்ஷவே. பெயரளவிலேயே மாறுபட்டவர். நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் அமைதியாக இருப்பது நல்லது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

பக்.22

## ஜனாதிபதி மாளிகைக்கு அருகிலேயே மைத்திரி திட்டம் தயாரானது

### அரசு கூறுவதெல்லாம் உண்மையில்லை என்கிறார் மங்கள



கொழும்பு, டிசெ.19

எதிரணியின் பொதுவேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவைக் களமிறக்க சிங்கப்பூரிலோ அல்லது வேறெந்த வெளிநாட்டிலோ பேச்சு நடத்தவில்லை என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர. ஜனாதிபதி மாளிகைக்கு அருகிலும், நாடாளுமன்றத்துக்குள்ளேயுமே முழுமையாக திட்டம் வகுப்பட்டது

பக்.26

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# செய்திகள்



இம்முறை இடம்பெற்ற ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சை நேற்று வியாழக்கிழமையுடன் முடிவடைந்தது. பரீட்சை சிறப்பாக முடிந்த சந்தோஷத்தில் மட்டக்களப்பில் மாணவர்கள் வர்ணச் சாயங்களை ஒருவருக்கொருவர் தெளித்துக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.(த-32)

## சிறுமியைக் காணவில்லை

கரணவாய், டிசெ. 19

வடமராட்சி கெருடாவில் பகுதியைச் சேர்ந்த 15 வயதுச் சிறுமி ஒருவரை நேற்றுமுன் தினம் முதல் காணவில்லை என அவரது பேர்த்தியாரால் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கெருடாவில் மாயவனூர் என்னும் இடத்தைச் சேர்ந்த சிறுமியே உடுப்பிட்டியில் உள்ள சமுர்த்தி வங்கிக்குச் சென்று இதுவரை வீடு திரும்பவில்லை என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டை அடுத்து வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-108)

## காணி உரித்துப் பிரச்சினை ஜனவரி 8 க்குப் பின் பேச்சு

### வடக்கு முதல்மைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 19

காணி உரித்துக்கள் தொடர்பான சில பிரச்சினைகளை அரசியல் ரீதியாகவே தீர்க்க வேண்டியுள்ளது. எனவே அதனைப் பற்றி ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின்னர் பேசக்கூடியதாக அமையும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் வரவு -செலவுத் திட்டத்தில், முதலமைச்சர் அமைச்சு மீதான விவாதம் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதன்போது ஆளுங்கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்தனர். இறுதியில் இதற்குப் பதில் உரையாற்றும்போது முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாண வருமான வரித் திணைக்களம் கடந்த நவம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விரைவில் ஏனைய நியதிச் சட்டங்கள் சபையில் சமர்ப்பிக்கப்படும். அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மேலும் பல உறுப்பினர்கள் திண்மக் கழிவு அகற்றல் தொடர்பில் கருத்துத் தெரிவித்தனர். திண்மக் கழிவகற்றல் தொடர்பில் திட்டம் தயாரிப்பதற்கே பெருமளவு பணம் தேவை. தற்போது இரணைமடுக் குடிதண்ணீர் திட்டத்தில் மாற்றியமைக்கப்பட்ட திட்டத்தில் 106 மில்லியன் அமெரிக்க டொலர், இந்தக் கழிவகற்றல் செயற்பாட்டுக்கே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காணி தொடர்பில் பல்வேறு பிரச் சினைகள் இருக்கின்றன. எங் களிடம் இராணுவத்தினர் காணிகள் கேட்கும்போது நாங்கள் அவற்றை வழங்குவதில்லை. அதனால் அவர்கள் கொழும்பு அரசிடமே நேரடியாக அனுமதியைப் பெற்றுக் கொள்கின்றார்கள். எமது மாகாணத்தின் எல்லை தொடர்பில் இங்கு உறுப்பினர்கள் பிரஸ்தாபித்திருந்தார்கள். இங்குதான் மகாவலிச் சட்டத்தின் மூலம் கொழும்பு அரசு எங்கள் உரித்தில் தலையீடு செய்கின்றது. இது அரசியல் ரீதியாகப் பேசப்பட வேண்டிய பிரச்சினை. இதனை ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின்னர் பேசக் கூடிய சூழ்நிலை ஏற்படும் என்று நம்புகின்றேன்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக உள்ளூராட்சிமன்றங்களுக்கான விலை மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குரிய ஆளணி வளங்கள் உருவாக்கிக் கொடுக்கப்படும். இதனூடாக உள்ளூராட்சி மன்றங்கள் விலை மதிப்பீடு செய்து தமது வரியை அறவீடு செய்ய முடியும்.

வடக்கு மாகாணத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது பற்றி உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். இங்கு சட்டம் ஒழுங்கு தொடர்பில் பொலிஸ் அதிகாரம் பற்றி பேசினார்கள். பொலிஸ் அதிகாரம் மாகாணத்துக்கு உரியது எனினும், ஜனாதிபதி 18 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் சுயாதீன ஆணைக்குழுக்களையும் இல்லாமல் செய்து அதனை அவர் வசம் வைத்திருக்கின்றார். இதனால் நாம் இங்கு பொலிஸாருடன் பேசியே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது.

அடுத்த வரவு-செலவுத் திட்டம் சகல உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடனேயே தயாரிக்கப்படும் – என்றார். (த-5)

# எதிர்காலச் சந்ததி பற்றி சிந்தித்து செயற்படுங்கள்

## வடக்குக்கான முதலாவது பரப்புரைக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உருக்கம்

யாழ்ப்பாணம், டிசெ.19

இனவாத அரசியல் மிக மிக மோசம், எமக்கு தேவை சகோதர பாசம். பட்ட கஷ்டம் இனிமேல் வேண்டாம் புத்தியுடன் செயல்படுவோம். இனவாதம் பேசும் தலைவர்களின் பிள்ளைகள் வெளிநாட்டிலே, அப்பாவி மக்களின் பிள்ளைகள் இந்த நாட்டிலே. எனவே உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி நீங்கள் யோசிக்க வேண்டும். எமது நாட்டை மீண்டும் பின்னோக்கி செல்வதற்கு பலர் முயற்சி எடுக்கிறார்கள். – இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வடக்குக்கான முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று முள்ளியவளை விளையாட்டரங்கில் நடைபெற்றது. அதில் உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

முல்லைத்தீவு வைத்தியசாலையின் முன்னாள் அத்தியட்சகர் எஸ்.சண்முகராஜா தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன இந்தக் கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.அஸ்வர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதியமைச்சர் பிரபா கணேசன் உட்பட அரசியல் பிரமுகர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

அதில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி,

சில நாள்கள் முன்பாக சில மதத் தீவிரவாதிகள் பாகிஸ்தானில் 168 பேரைக் கொலை செய்தார்கள். 8 வயதுக்கும் 15 வயதுக்கும் உட்பட்ட மாணவ மாணவிகள் ஆசிரியர்கள், வித்தியாலய அதிபர்கள் என இரத்த வெறியோடு அவர்கள் கொன்று குவித்தார்கள். – என்றும் குறிப்பிட்டார்.

இந்த மாதிரியான நிலைமை மீண்டும் இந்த நாட்டிலே ஏற்படுத்த இடம் கொடுத்திட முடியாது. பழைய சரித்திரத்தை மீண்டும் உருவாக இடம் கொடுத்திடக் கூடாது. நாங்கள் பின்னோக்கிப் போகக் கூடாது. நாங்கள் எல்லோரும் ஒன்றுபட வேண்டும். ஒன்றாக வாழ வேண்டும். அனைத்து இன மக்களும், எல்லா மத மக்களும் ஒன்றாக வாழ வேண்டும். ஒவ்வொருவருடைய கலாச்சாரத்தை, மதத்தை, இனத்தை மதித்து வாழ வேண்டும். – என்றும் அவர் கூறினார்.

தலைவர்கள் இங்கே வந்து ஒவ்வொரு கதையை சொல்லி விட்டு போகலாம். ஆனால் அவர்களை விட அவர்களுடைய பிள்ளைகள் இந்த நாட்டில் வாழ்வதில்லை. அவர்களுடைய பிள்ளைகள் வெளிநாட்டில் தான் எல்லோரும் வாழ்கிறார்கள். படிப்பது வெளிநாட்டுப் பாடசாலைகளிலே. எனவே அவர்கள் ஏதோ வெல்லாம் சொல்லி விட்டுப்போவார்கள். ஆனால் அதிலே கஷ்டப்பட்டுப் போவது அவர்களோ, அவர்களது பிள்ளைகளோ அவர்களுடைய குடும்பத்தாரோ அல்ல நீங்கள் தான் என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.

இந்த நாட்டில் வாழ்கின்ற எல்லா இன மக்களையும் அதே போன்று எல்லாப் பிள்ளைகளையும் பாதுகாக்க வேண்டிய அந்த உரிமையும் எனக்குத் தான் இருக்கிறது. அந்தப் பிள்ளைகளையெல்லாம் பாதுகாகத்துக் கொள்வதற்காகவும் அவர்களுக்கு நல்ல ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் நீங்களும் நாங்களும் ஒன்றாக கைகோர்த்து முன்னோக்கிச் செல்வோம்.

இந்த முறையும் ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டி போடுகிறேன். 30 வருட இருண்ட காலம் இப்போது இல்லை. போன தடவை ஜனாதிபதித் தேர்தலில் இந்த தேசத்தைக் கட்டியெழுப்பினேன். எங்கு போனாலும் உங்கள் எல்லோருக்கும் நாம் செய்த அபிவிருத்தி வேலைகள் எல்லாவற்றையும் நன்றாகப் பார்க்க முடியும். இதே வேகத்தில் போனால் எமது நாடு இன்னும் இன்னும் முன்னேறும். நிச்சயம் வடமாகாணம் அபிவிருத்தி செய்ய நாம் பல பில்லியன் ரூபா செலவு செய்துள்ளோம். பாதைகள் பாடசாலைகள், மீள்குடியேற்ற வசதி, மின்சார வசதி சுகாதார வசதி போன்ற பலவித வசதிகள் வழங்கியுள்ளோம். புனர்வாழ்வு வேலைகள் செய்துள்ளோம். நஷ்ட ஈடு வழங்கியுள்ளோம் உங்கள் தங்கங்களை உங்களுக்கே வழங்கினோம். யாழ். தேவி புகையிரம் மீண்டும் கம்பீரமாகப் போகிறது யாழ்தேவியை மாங்குளத்திலும் நிறுத்தவதற்கு உத்தேசித்திருக்கிறேன். இருண்டயுகம் 30 வருடம், அபிவிருத்தி வேலைகள் 5 வருசம். வடக்கில் வசந்தம் உங்கள் வசந்தம் உங்கள் பிள்ளைகளின் பிரதேசத்தின் வசந்தம். நான் எப்போதும் உங்களைப் பாதுகாப்பேன். நீங்கள் என்னை நம்பலாம். வெற்றிலையின் வெற்றி உங்கள் வெற்றி பிள்ளைகளின் எதிர்காலத் தின் வெற்றி. – என்று அவர் தனது உரையில் தெரிவித்தார்.

**பிரபா கணேசன்**

பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதியமைச்சர் பிரபா கணேசன், முல்லைத்தீவு மாவட்டத்தில் போர்க்காலத்தில் சின்னாபின்னமாக்கப்பட்ட பாடசாலைகள் பல அபிவிருத்தி பெற்றுள்ளன. கடந்த வருடம் இந்த மக்கள் வாக்களிக்கா விட்டாலும் ஜனாதிபதியால் பல அபிவிருத்தித்திட்டங்கள் இந்த மண்ணில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தென்னிலங்கைப்பகுதியில் இல்லாத வசதிகள் யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மக்களுக்கு முன்பின் தெரியாத மைத்திரி போன்றவர்களுக்க நீங்கள் வாக்களிக்க வேண்டுமா? தமிழ் தேசியக்கூட்டமைப்பினர் யாருக்கு ஆதரவு எனத் தெரிவிக்கவில்லை. அவர்கள் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள் மக்கள் யாருக்கு வாக்களிப்பார்கள் – என்று கூறி னார்.

தென்னிலங்கையில் பல இலட்சம் வாக்குகள் ஜனாதிபதிக்கு கிடைக்கும். எங்கள் மக்களது உரிமைகளை வென்றெடுக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது. வடமாகாணத்தில் அதிகாரம் தேவை என அடம் பிடிக்கும் கூட்டமைப்பினருக்கு பிரச்சினை தீர்ந்து விட்டால் ஒன்றும் செய்ய முடியாத நிலை ஏற்படும் என்பதற்காகவே இவ்வாறான நிலையில் உள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு பல சந்தர்ப்பம் கிடைத்தும் கூட விட்டுக் கொடுக்காமல் போரில் தோற்றுப் போய்விட்டார்கள். அதைப்போன்ற சந்தர்ப்பம் தேர்தல் மூலம் கூட்டமைப்பினருக்கு கிடைத்தும் சந்தர்ப்பத்தை இழந்துள்ளார்கள். – என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**

அங்கு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிடுகையில், அரசியல் பயணத்தில் பல்வேறு ஆட்சித் தலைவர்களைப் பார்த்திருக்கின்றேன். அவர்களிடம் அரசியல் உரிமைகளையும் , 13 ஆவது திருத்தத்தையும் கோரியிருக்கிறேன். அப்போது ஆட்சியில் இருந்த பிரேமதாஸ, சந்திரிகா, ரணில் விக்கிரமசிங்க போன்றவர்கள் செய்வதாகக் கூறி ஏமாற்றி விட்டார்கள். ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கேட்டபோது துணிச்சலாக செய்வதற்கு முன்வந்தார். வடமாகாண சபை கூட்டமைப்பினர் கைக்கு போனதால் அரசியல் தீர்வுக்கான சாத்தியமான பயணங்கள் தடைப்பட்டன. ஆடத்தெரியாதவனுக்கு அரங்கு சரியில்லை என்பது போல தீர்வுக்கு அரசு தடையாக இருப்பதாக பொய் கூறி வருகின்றனர். வடமாகாண சபைக்குக் கிடைத்த நிதியை ஆடம்பரச் செலவுக்காக செலவு பண்ணி சுகபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் – என்று கூறினார்.

**அஸ்வர்**

தொடர்ந்து உரையாற்றிய அஸ்வர், 30 ஆண்டுகளாக முல்லைத்தீவு, கிளிநொச்சி என மக்கள் காடுகளுக்குள் நிம்மதி இல்லாமல் சுதந்திரம் பறிபோனவர்களாக பயத்துடன் வாழ்ந்தார்கள். கிழக்கு மாகாண மக்களும் அப்படித்தான். இவ்வாறான நிலை மாற்றி ஒரே இன மக்களாக வாழ வழி செய்தவர் மஹிந்த ராஜபக்ஸ. வடக்கில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. மணமகன் வந்தான் மாகோடி தந்தான் என்ற ரீதியில் மகிந்த ராஜபக்ஷ பல்வேறு திட்டங்களை முன்னெடுத்துள்ளார். மகிந்த சிந்தனை ஊடாக வடக்குக்கும் கிழக்குக்கும் அபிவிருத்திகளைக் கொடுத்துள்ளார் – என்று தெரிவித்தார். (ற-14)

# ஜனரஞ்சகம்



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: குடும்பத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். மற்றவர்கள் மூலம் உதவி கிடைக்கும். வாழ்க்கையில் சந்தோஷம் அதிகரிக்கும்.

**இடபம்**: தடைப்பட்ட காரியங்களில் இருந்த தடைநீங்கி சாதகமாக நடந்து முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலையும் காரிய தாமதத்தையும் சந்திக்க வேண்டி இருக்கும்.

**மிதுனம்**: புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். வெளியூர் பயணங்களின்போது கவனம் தேவை. அடுத்தவர்களுக்காக பொறுப்புக்களை ஏற்கும்போது ஒரு முறைக்கு பலமுறை யோசித்து முடிவு எடுப்பது நல்லது.

**கடகம்**: புதிய நபர்களிடம் எச்சரிக்கை தேவை. வீண் அலைச்சலை குறைத்துக்கொண்டு வேலைகளில் கவனம் செலுத்துவது நல்லது. துணிச்சலுடன் எந்தக் காரியத்திலும் ஈடுபட்டு சாதகமாக செய்து முடிப்பீர்கள்.

**சிங்கம்**: நிம்மதியும், சுகமும் அதிகமாகும். பலவகையிலும் பிறர் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். புத்திசாதுரியம் அதிகரிக்கும். யாருக்கும் வாக்குறுதிகள் கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும்.

**கன்னி**: உறவினர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. எல்லாவிதமான காரியங்களும் சாதகமான பயனைத்தரும். எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். உதவிகளைச் செய்து மனதிருப்தி அடைவீர்கள்.

**துலாம்**: மனதில் இருந்த குழப்பம் நீங்கி, திருப்தி நிலவும். வெளியூர்ப் பயணங்கள் செல்ல நேரிடலாம். வாக்கு வன்மையால் எடுத்த காரியத்தை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். பணியாள்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும்.

**விருச்சிகம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும். குடும்ப உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் செயற்படுவார்கள்.

**தனுசு**: சாமர்த்தியமான பேச்சின் மூலம் எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வாக்கு வன்மையால் காரிய வெற்றி பெறுவார்கள். குடும்பத்தில் வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**மகரம்**: நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். உத்தியோகத்தில் இருந்து வந்த மறைமுக எதிர்ப்புகள் விலகும். நீண்ட நாள்களாக முடிக்க முடியாமல் இருந்த ஒரு காரியத்தை செய்து முடிப்பீர்கள்.

**கும்பம்**: தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். தொழில் விரிவாக்கம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலை பார்க்கும் இடத்தில் இருந்த பிரச்சினை குறையும். குடும்பத்தில் அமைதி உண்டாகும்.

**மீனம்**: முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். அதனால் நன்மைஉண்டாகும். மற்றவர்களுடன்இருந்தமனவருத்தம்நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக நடக்கும்.

# விடியலுக்கு காத்திருக்கும் ஹன்சிகா



தனது வசீகரத்தால் இளைய உள்ளங்களை கொள்ளை கொண்ட ஹன்சிகா 2015 ஆம் ஆண்டின் விடியலுக்காக காத்திருக்கிறார். 'அரண்மனை' திரைப்படத்தின் மாபெரும் வெற்றித் தன்னம்பிக்கையுடன் இருக்கின்றார்.

'அரண்மனை' திரை உலகில் எனக்கு ஒரு விசாலமான இடத்தைத் தந்துள்ளது. என்னுடைய திறமை மேல் நம்பிக்கை கொண்டு பிரமாதமான கதாபாத்திரத்தை வழங்கியமைக்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். பொங்கல் அன்று வெளிவரும் 'ஆம்பள' திரைப்படத்தில் விஷாலுக்கு ஜோடியாக நடித்து உள்ளேன். நட்சத்திர அந்தஸ்தை தக்க வைத்துக் கொள்ள இந்தப் படம் ஏற்ற படமாக இருக்கும்.

அடுத்து நான் மிகவும் எதிர்பார்க்கும் வாலு எனக்கு மிக பொருத்தமான திரைப்படமாகும். மிகவும் துடிப்பான வலிமையான பாத்திரம். இந்தப் படத்தில் நான் இளவரசியாக நடிக்கிறேன். படப்பிடிப்பில் நான் இளவரசியாகத் தான் உணர்கிறேன்.

சிலர் எனக்கு அதிர்ஷ்டம் என்கின்றனர். கடின உழைப்புடன் விடாமுயற்சி இருந்தால் வெற்றி கிட்டும். என்ன நடந்தாலும், நான் என் கடமையில் கண்ணாக இருப்பேன் என்கிறார் அம்சமான பொண்ணு ஹன்சிகா.

## இது நண்டா?



நியூசிலாந்தில் மிகவும் வசீகரமான கடலொன்றான டர்க்கைஸ் கடலுக்கடியில் உலாவிய மாபெரும் மர்ம கடல் உயிரினம் ஒன்றின் ஒளிப்படங்கள் இணையத்தளத்தில் வெளியாகியுள்ளன.

இந்தப் படமானது கூகுள் ஏர்த் வரைபடத்தின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. குறித்த கடலின் ஓக் விரிகுடாவுக்கு அண்மித்த பகுதியிலேயே இந்த கடல் உயிரினம் உலாவியுள்ளது.

பொறியியலாளர் பிட விடேஹிரா என்பவர், தனது விடுமுறை இல்லத்தை கூகுள் ஏர்த் மூலம் தேடிக்கெண்டிருந்துள்ளார்.

இதன்போது சுமார் 12 மீற்றர் நீளத்துக்கு இந்த கடல் உயிரினம் தென்பட்டுள்ளது. இது மிகவும் வேகமாக சென்றது என்றும் வேகமாக தனது உடலை திருப்பக்கூடியதாக இருந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


இது நண்டாக இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

## ரிலாக்ஸா வாசியுங்க

அண்ணாச்சி கடையில்.
டெட்டோல் சோப்பு இருக்கா..?
இருக்குங்க..!!
ஓரிஜினல் தானே..?
ஆமாம்.
உங்களுக்கு எத்தனை சோப்பு வேணும்..??
மினரல் வோட்டர் இருக்கா..??
இருக்குங்க..!!
ஓரிஜினல் தானா..??
ஆமாங்க..!!
அப்போ உங்கள் கையை டெட்டோல் சோப்பு போட்டு மினரல் வோட்டர்லே கழுவிட்டு.
எனக்கு 100 கிராம்
புளி குடுங்கண்ணே...!!!
அடிங்கொய்யால.....!!!

பொண்ணு செட் ஆகுற வரை வாழ்க்கைல எதையோ மிஸ் பண்ற மாதிரி பீலிங் - ஆ இருக்கும்...
பொண்ணு செட் ஆகிருச்சுன்னா வாழ்க்கையே மிஸ் ஆகுற மாதிரி பீலிங்காகவே இருக்கும்...

## facebook






இது ஒரு ஓவியம்



# செய்திகள்

## எரிந்த நிலையில் மனித எலும்புக்கூடு

### வடமராட்சி முள்ளியில் மீட்பு





கரணவாய், டிசெ. 19

வடமராட்சி முள்ளிப் பகுதியில் குப்பைக் குவியலுக்கு அருகில் மனித எலும்புக் கூடு ஒன்று நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முள்ளிப் பகுதிக்கும் யார்க்கரு சந்திக்கும் இடையில் உள்ள வீதிக்கு அண்மையில் குவிக்கப் பட்டிருந்த தென்னம் பொச்சுக் குவியலுக்கு அருகில் இந்த எலும்புக் கூடு காணப்பட்டது.

நேற்றுக் காலை இராணுவ முகாம் அலங்கரிப்பதற்காக அப் பகுதியில் புல் துண்டங்களை வெட்டிக் கொண்டிருந்த போது எரிந்த பொச்சுக்கு அருகில் மனித எலும்புக் கூடும் மண்டை யோடும் இருக்கக் காணப் பட்டன.

உ.1 விரிவு

இது குறித்து நெல்லியடிப் பொலிஸாருக்கு அறிவித் ததை அடுத்து நெல்லி யடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிசுமித்பெரேரா தலைமையில் அப் பகுதிக்கு விரைந்து வந்த பொலிஸார் மண்டையோடு, எலும் புக்கூடு என்பவற்றை சுற்றி எவரும் உட்புகாதவாறு அடையாளப் படுத்தினர். எவரையும் மனித எலும்புக்கூடு கிடந்த இடத்துக்கு செல்ல அனும திக்கவில்லை.

இந்த எலும்புக்கூடு சுமார் 30 வயது மதிக்கத்தக்க பெண்ணுடையது என்றும் இது கடந்த சில நாள்களுக்கு முன்பே எரிக்கப்பட்டிருக்க லாம் எனவும் அங்கு காணப்படும் முள்ளந்தண்டு ஈரத்தன்மையு டன் காணப்பட்டதாகவும் – நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை சுமார் 3 மாதங்களுக்கு முன்னர் முள்ளிப் பகுதியில் நாகர் கோவில் பகுதியில் இருந்து காணாமல் போன பெண் ஒருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நேற்று மாலை சம்பவ இடத்துக்கு விரைந்த பருத்தித்துறை நீதிவான் கஜநிதிபாலன் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தியதோடு எலும்புக்கூட்டை இரசாயனப் பகுப்பாய்வுக்காக யாழ். போதனா வைத்தியசாலை யில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.எலும்புக்கூடு நேற்று மாலை தடயவியல் பரிசோதனையின் பின் யாழ். போதனா வைத்தியசா லை யில் ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (த–108–109)

## தெல்லிப்பழை வைத்தியசாலை தரம் உயர்வது அவசியமானது

### வலி.வடக்குப் பிரதேச சபையில் தீர்மானம்



யாழ்ப்பாணம், டிசெ 19

வடமாகாணத்தில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, உளநலச் சிகிச் சைப் பிரிவு என்று இரு பெரும் அலகுகளைக் கொண்டு இயங் கும்தெல்லிப்பழைஆதார வைத்தி யசாலையைப் பொது வைத்திய சாலையாகத் தரமுயர்த்தவேண் டும் என்று வலி.வடக்குப் பிரதேச சபைக் கூட்டத்தில் நேற்றுத் தீர் மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலை மக்களுக் குப் பல்வேறுபட்ட சேவைகளை வழங்கிக் கொண்டிருப்பதால் வைத்தியர்கள், தாதியர்கள், மருந் தாளர்கள், மருத்துவ ஆய்வுகூ டத் தொழில்நுட்பவியலாளர், சிற்றூழியர்கள் எனப் பல்வேறு பட்ட ஆளணிப் பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றது. அவற்றை நிரப்புவதோடு பொது வைத்திய சாலையாகத் தரமுயர்த்தவேண் டும் என்று கோரப்பட்டுள்ளது.

வலி.வடக்குப் பிரதேச சபை யின் டிசெம்பர் மாதக் கூட்டம் பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் லயன் சோ.சுகிர்தன் தலைமையில் நேற்று நடைபெற் றது. அதில் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினரும் தெல்லிப் பழை ஆதார வைத்தியசாலை நோயாளர்நலன்புரிச்சங்கச்செய லாளருமான லயன் சி.ஹரிகரன் சபை அமர்வின்போது இந்தத் தீர்மானத்தை முன்வைத்தார்.

அதனை உறுப்பினர்களான கதிர மலைப்பிள்ளை முன்மொழிய மணிராஜா வழிமொழிந்தார். பின்னர் அது சபையால் ஏகமன தாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வலி.வடக்கு பிரதேசம் தற்போது துரித கதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வருகிறது. சகல கட்டுமானங்களும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. யாழ். போதனா வைத்தியசாலையில் இல்லாத இரு பெரும் அலகுக ளான உளவளச் சிகிச்சைப் பிரி வும், புற்றுநோய் சிகிச்சைப் பிரி வும் தெல்லிப்பழை ஆதார வைத் தியசாலையில் காணப்படுகின் றன. புற்றுநோய் சிகிச்சைப் பிரி வுக்கான விடுதிகள் யாழ்.போ தனா வைத்தியசாலையில் ஆரம் பத்தில் இருந்தாலும் தற்போது அவை அனைத்தும் தெல்லிப் பழைஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுவிட்டன. அத்துடன் யாழ்.பல்கலைக்கழகத்தின் உள நலச் சிகிச்சைப் பிரிவு, புற்றுநோய் சிகிச்சைப்பிரிவுக்கான விரிவுரை கள் அனைத்தும் தற்போது தெல் லிப்பழைஆதார வைத்தியசாலை யிலேயே நடைபெற்றுவருகின்றன.

மகப்பேற்று விடுதியில் மாதத் துக்கு 90 இற்கும் மேற்பட்ட மகப் பேறுகள் இடம்பெறுகின்றன. தற் போதுள்ள ஊழியர்களை வைத் துக்கொண்டு இரத்த வங்கிச் செயற்பாடுகளும் நடைபெறுகின் றன. புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு செயற்படுவதால் அதன் தேவை அதிகரித்துள்ளது. வெளி நோயாளர் சிகிச் சைப் பிரிவில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது. மக்கள்தொகைஅதிகரிப்புக்கேற்ப வெளிநோயாளர் பிரிவில் அவர் களைப் பார்வையிடும் வைத் தியர்களின், தாதியர்களின், மருந் தாளர்களின் எண்ணிக்கை போதாமலுள்ளது.

புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு நவீ னமுறையில் மஹரகம வுக்கு இணையாக உருவாக் கப்பட்டு வருகின்றது. இனிவரும் காலங்களில் வடக்கு மாகாணத் தைச் சேர்ந்த மக்கள் புற்றுநோய் மேலதிக சிகிச்சைக் காக மஹர கமவுக்குச் செல்ல வேண்டிய தேவை ஏற்படாது. ஆகவே, தெல் லிப்பளை வைத்தியசாலையைப் பொதுவைத் தியசாலை யாகத் தரமுயர்த்த வேண்டும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள் ளது. (த–4)

## மனைவியை தாக்கியவர் மறியலில்

மதுபோதையில் மிருகத்த னமாக மனைவியைத் தாக்கிய சாவகச் சேரி கெருடாவில் வாசியை விளக் கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

கணவனால் தாக்கப்பட்டுச் சாவ கச்சேரி ஆதார மருத்துமனை யில் சிகிச்சைபெற்றுவரும்மனைவி கொடுத்தமுறைப்பாட்டை அடுத்து சாவகச் சேரி பொலிஸார் கைது செய்து நேற்று நீதிமன்றில் முற் படுத்தினர். வழக்கை விசாரித்த பதில் நீதி வான்செ.கணபதிப்பிள்ளை இந்த நபரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு உத்தரவிட்டார். (த–9)

## 38 இந்திய மீனவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

இலங்கைக் கடற்பரப்பில் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்ட மற்றும் படகுபழுதடைந்துகடற்படை யின ரால் மீட்கப்பட்ட 38 இந்திய மீன வர்களுக்கும் ஊர்காவற்றுறை நீதிமன்றம் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடித்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதியும், கடந்த ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதியும் படகு பழுத டைந்த நிலையில் 8 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் மீட்கப்பட்டனர். கடந்த செம்ரெம் பர் மாதம் 30 ஆம் திகதி 16 மீன வர்களும், கடந்த நவம்பர் மாதம் 14 மீனவர்களும் அத்துமீறி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கச்சதீவுக்கு அண்மித்தபகுதியில்வைத்துக்கடற் படையினரால் கைது செய்யப் பட்டனர். படகு பழுதடைந்து காப் பற்றப்பட்ட மீனவர்கள் பொலிஸா ரினாலும், அத்துமீறிய குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட மீனவர்கள் நீரியல் வளத் திணைக் களத்தினா லும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பட்டனர். மீனவர்கள் யாழ்.சிறைச் சாலையில் விளக்கமறியல் வைக் கப் பட்டு நேற்று நீதிமன்றில் முற் படுத்தப்பட்டபோது அவர் களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள் ளது. (த–14–4)

## நோயாளிகளுக்காக விளையாட்டு இடம்

தென்மராட்சி, டிசெ. 18

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுக்கு உள நல சிகிச்சையுடன் உடல் நல சிகிச்சையும் வழங்கப்படுவுள் ளது.

சிகிச்சை பெற்றுவரும் நோயா ளர்கள் பங்குபற்றுவதற்கும் பார் வையிடுதவற்கும் என வைத்திய சாலை வளாகத்தில் விளையாட் டுத் திடல்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வைத்தியசாலை நிர்வாகத்தினர் விடுத்த வேண்டுகோளையடுத்து வேள்ட் விஷன் நிறுவனத்தினர் கரப்பந்து, பூப்பந்து, சதுரங்கம் ஆகியவற்றுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கியுள்ளனர். இதனையடுத்து விளையாட்டு இடங்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (த–9)

## நீலாஞ்சேனை கிராமத்துக்கு வீதி அமைக்கும் பொலிஸார்

மன்னார், டிசெ 19

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நீலாஞ்சேனை கிராமத்துக்குச் செல்லும் பிர தானவீதிபலவருடங்களாகப்போக் குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்படுவதால் அதனைச் செப்பனிடும் பணி யில் மன்னார் பொலிஸார் நேற்று வியாழக்கிழமை முதல் ஈடுபட்டு வருகின்றனர்.

வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கோரிக்கைக்கு அமைவாக மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அஜந்த ரொட்ரிக்கோ தலைமையில் குறித்த பணிகள் இடம் பெற்று வருகின்றன.

குறித்த வீதியூடாக நீலாஞ்சேனை, அளப்பிட்டி,கூங்கன் தாழ்வு ஆகிய மூன்று கிராமத்தையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக் கள் பயணம் செய்வது வழக்கம். சுமார் 4 கிலோ மீற்றர் நீளம் கொண்ட குறித்த வீதி போரினால் கடுமையாகப் பாதிப்படைந்துள் ளது. வீதியின் இரு மருங்கிலும் பற்றைகள் வளர்ந்துள்ளன.

இந்த வீதியைச் செப்பனிட்டுத் தருமாறு அந்தக் கிராம மக்கள் மன் னார்பிரதேச,சபை,அரசஅதிபர், பிரதேச செயலாளர், அரசியல் வாதிகள்ஆகியோரிடம்தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர்.

ஆனால் எந்த அதிகாரிகளும் குறித்த வீதியை புனரமைத்துக் கொடுக்கவில்லை. போரினால் இடம் பெயர்ந்து மீண்டும் மீள் குடியேறி பல வருடங்களைக் கடக்கின்றபோதும் இந்தக் கிராம



மக்கள் குறித்த வீதியில் பய ணம் செய்ய முடியாமல் சிரமப் படுகின்றனர்.

தற்போது மழைக்காலம் என்ப தனால் குறித்த வீதியில் வெள் ளம் தேங்கி குளம் போல் காட் சியளிக்கின்றது. இந்தநிலையில் மன்னார் பொலி ஸார் வடமா காண சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகரின் அனு மதியுடன் குறித்த வீதியைப்புனரமைக்கும்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (த–56)

19 DEC 2014

# கேட்டது 1,499.5 மில்லியன் கிடைத்ததோ 272 மில்லியன்

## அந்த நிதியை வைத்தே 'பட்ஜெட்டை' தயாரித்தோம் என்கிறார் முதலமைச்சர்



யாழ்ப்பாணம், டிசெ. 19

வடக்கு மாகாண முதலமைச்சர் அமைச்சுக்கு ஆயிரத்து 499.5 மில்லியன் ரூபா நிதியைக் கொழும்பு அரசிடம் கேட்ட போதும், 272 மில்லியனையே அவர்கள் வழங்கினார்கள். அந்த நிதியையே நாம் தற்போது பங்கீடு செய்து வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்துள்ளோம்.

– இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டத்தில், முதலமைச்சர் அமைச்சு மீதான குழு நிலை விவாதம் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதன் போது தமது அமைச்சு மீதான வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எனது அமைச்சில் முக்கியமானது உள்ளூராட்சி. உள்ளூராட்சி வீதிகளுக்காக 770 மில் லியன் ரூபா கொழும்பு அரசிடம் கேட்டோம். ஆனால் அவர்கள் 74 மில்லியன் ரூபாவையே தந்துள்ளார்கள். உள்ளூராட்சி சேவைக்காக 120 மில்லியன் ரூபா கேட்டபோதும் எந்தவொரு நிதியும் வழங்கப்படவில்லை.

திண்மக் கழிவகற்றலுக்காக நாங்கள் 20 மில்லியன் ரூபா கேட்டதற்கு 22 மில்லியன் ரூபா தந்துள்ளார்கள்.

கிராமிய பிரதி மின்சக்திக்கு நாங்கள் ஒரு மில்லியன் கொழும்பு அரசிடம் கேட்க 6 மில்லியன் வழங்கியுள்ளார்கள். வாராந்தச் சந்தைக்காக 23 மில்லியனும், சமூக நீர்வழங்கலுக்கு 5 மில்லியனும், மயானத்துக்கு 15 மில்லியனும், தகைமை விருத்திக்கு ஒரு மில்லியனும் கொழும்பு அரசு நாங்கள் கேட்காமலேயே வழங்கியுள்ளது. இதேவேளை இதற்காகக் கடந்த வருடம் 97 மில்லியன் ரூபா வழங்கப்பட்டிருந்தது.

வீடமைப்புக்காக நாம் 10 மில்லியன் ரூபாவை கொழும்பு அரசிடம் கேட்க அவர்கள் 5 மில்லியனை வழங்கியுள்ளனர். கடந்த வருடம் இதற்காக 3 மில்லியனை வழங்கியிருந்தனர். சுற்றுலாத்துறைக்காக 50 மில்லியன் கேட்டதற்கு 36 மில்லியன் வழங்கியுள்ளனர். கடந்த ஆண்டு 26 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. சமூக சேவைக்காக 92 மில்லியன் கேட்டதற்கு, 22 மில்லியனையே கொழும்பு அரசு வழங்கியுள்ளது. கடந்த ஆண்டு இதற்காக 16 மில்லியனை வழங்கியிருந்தது.

கூட்டுறவு அபிவிருத்திக்காக நாம் கொழும்பு அரசிடம் 144 மில்லியனைக் கேட்டிருந்தோம். அவர்கள் 6 மில்லியனையே வழங்கியுள்ளார்கள். கடந்த ஆண்டு 4 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. கிராமிய கைத்தொழிலுக்காக 91.6 மில்லியன் கேட்க, 16 மில்லியனை வழங்கியுள்ளனர். கடந்த ஆண்டு 10 மில்லியனே தரப்பட்டிருந்தது.

காணி நிர்வாகத்துக்காக 5.7 மில்லியன் கேட்டதற்கு, 5 மில்லியன் ரூபா வழங்கியுள்ளனர். இதற்குக் கடந்த ஆண்டு 3 மில்லியன் ஒதுக்கியிருந்தனர். சிறுவர் நன்னடத்தைக்காக 195.2 மில்லியன் கோரியிருந்தோம். கொழும்பு அரசு 28 மில்லியனையே வழங்கியது. கடந்த ஆண்டு 20 மில்லியனை வழங்கியிருந்தது.

இவ்வாறு நாம் கேட்டதற்குக் குறைவான தொகையையே கொழும்பு அரசு எமக்கு வழங்கியுள்ளது – என்றார். (த-5)

## சமூக விரோத செயல்களை கட்டுப்படுத்துக



வவுனியா, டிசெ.19

வவுனியாவில் கிராமப் புறங்களில் இடம்பெறும் கோஷ்டி மோதல்கள் மற்றும் நள்ளிரவில் அதிகரிக்கும் திருட்டுகளைக் கட்டுப்படுத்தப் பொலிஸாரும் சிவில் பாதுகாப்புக் குழுக்களும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட கிராமப் புற மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வவுனியா தாண்டிக்குளம், ஓமந்தை, கோவில்குளம், தெற்கிலுப்பைகுளம் உட்பட பல்வேறு இடங்களில் இந்த ஆண்டு 15க்கும் மேற்பட்ட கோஷ்டி மோதல்கள் இடம்பெற்றன. அவற்றில் 10க்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் ஒருவர் உயிரிழந்தும் உள்ளனர். 19க்கும் மேற்பட்ட திருட்டுகளும் இடம்பெற்றுள்ளன. இந்தச் சம்பவங்களால் இந்தப் பகுதி மக்கள் அச்சத்துடன் இரவைக் கழிக்கின்றனர்.

திருட்டுகளுடன் தொடர்புடைய ஒருவர் அண்மையில் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டபோதும் பலர் தப்பித்துச் சமூகத்தின் மத்தியில் வாழ்ந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

வவுனியாவில் கிராமம் தோறும் பொலிஸாரால் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றின் செயற்பாட்டில் மந்த நிலை ஏற்பட்டுள்ளதாகப் பலரும் குற்றஞ்சுமத்தி வருகின்றனர்.

கலாசாரத்தைப் பேணல், போதைப்பொருள் பாவனையைத் தடுத்தல், குழு மோதல்களைக் கட்டுப்படுத்தல், திருட்டுக்களைத் தடுத்தல் உட்படப் பல்வேறு காரியங்களை முன்னெடுக்க சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அக்கறையுடன் செயற்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-402)

## மன்னாரில் முப்பெரும் வெளியீட்டு விழா

மன்னார், டிசெ.19

மன்னார் மறை மாவட்ட சமூக தொடர்பு அருட்பணி மையம் (கலையருவி) ஏற்பாடு செய்துள்ள முப்பெரும் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் காலை 9:30 மணியளவில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை கலந்து கொள்வார். (த)



பூநகரி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் நாச்சிக்குடா கடற்கரைப் பிரதேசத்தில் உள்ள 8 மீனவர் சங்கங்கள் ஒன்றிணைந்து நாச்சிக்குடா யாகப்பர்துறைமுகத்தில் பொது மீன் சந்தையொன்றை உருவாக்கியுள்ளன. இந்த மீன் சந்தையில் நுகர்வோர் நியாய விலையில் கடலுணவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# வல்வை நகர சபை குறித்து விரைவில் திடமான முடிவு

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

வல்வெட்டித்துறை நகர சபை தொடர்பில், விரைவில் திடமான தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று வடக்கு மாகாண முதலமைச்சரும், உள்ளூராட்சி அமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன் நேற்றுச் சபையில் தெரிவித்தார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் மீதான விவாதம் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட ஆளுங்கட்சி உறுப்பினர்களான பா.கஜதீபன், க.சர்வேஸ்வரன், எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் வல்வெட்டித்துறை நகர சபை தொடர்பில் கருத்துத் தெரிவித்தனர்.

'மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்துள்ளனர். அதற்கமைய நாம் பணியாற்ற வேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் திடமான தீர்மானம் மேற்கொள்ள வேண்டும். சரியான தீர்ப்பு வழங்க வேண்டும். நீதியரசராக இருந்த உங்களுக்கு அதனை நான் சொல்லத் தேவையில்லை. விவாகரத்து வழக்கில் இழுத்தடிப்பு செய்து தீர்ப்பு வழங்கப்படும். அதன்போதாவது அவர்கள் ஒன்று சேர்வார்கள் என்ற அடிப்படையில்தான் அவ்வாறு வழங்கப்படும். எனவே நீங்கள் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் தீர்ப்பை எழுதுங்கள். நீதிபதிகள் எழுதும் எல்லாத் தீர்ப்பும் சரியாக இருப்பதில்லை.

ஆனாலும், நீங்கள் உள்ளூராட்சி மன்றம் தொடர்பில் சரியான தீர்ப்பை எழுதுங்கள்' என்று ஆளுங்கட்சி உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார். 'வல்வெட்டித்துறை நகரசபை தொடர்பில் விரைவில் தீர்மானம் எடுங்கள். அங்கு இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணை பக்கச்சார்பாக நடத்தப்பட்டதாக அறிகின்றேன். விரைவில் அது தொடர்பில் சரியான முடிவை எடுங்கள். தலைவரை மாற்றிச் சபையை இயங்கச் செய்யுங்கள் என்றார் ஆளுங்கட்சி உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கம் குறிப்பிட்டார். இதனையடுத்து ஆளுங்கட்சி மற்றொரு உறுப்பினரான க.சர்வேஸ்வரன், 'சிவாஜிலிங்கம் சபைக்குத் தவறான தகவல்களைக் கொடுக்க முயல்கின்றார்' என்று குறிப்பிட்டார். இதன்போது இறுதியில் பதிலுரை வழங்கிய முதலமைச்சர், குறிப்பிட்ட விசாரணையை நடத்திய நீதிபதி பற்றித் தவறாகச் சொல்ல வேண்டாம். மேலும், குறித்த விசாரணை அறிக்கையில், பல விடயங்களைக் குறிப் பிட்டு இறுதியில் என்னைத் தீர்மா னம் மேற்கொள்ளுமாறு சொல்லியுள்ளார். அதனால்தான் முடி வெடுப்பதில் தாமதம். ஆனால் விரைவில் திடமான முடிவு எடுக்கப்படும் – என்றார். (த-5)

செய்திகள்

# கால்நடை வைத்திய நிலையம் தொடர்ந்தும் அதே இடத்தில்

**வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் அங்கீகாரம்**

வலி.தென்மேற்கு, டிசெ.19

வலி.தென்மேற்கு பிரதேசசபை வளாகத்தில் இயங்கி வரும் கால்நடை வைத்திய நிலையம் தொடர்ந்தும் அந்த இடத்திலேயே இயங்குவதற்கு வசதியாக ஒப்பந்தம் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக் கப்படவுள்ளது. இதற்கான அங்கீகாரத்தை உறுப்பினர்கள் வழங்கியுள்ளார்கள்.

மானிப்பாய்கோவில்பற்றிலுள்ள ஆனைக்கோட்டை, நவாலி, சண்டிலிப்பாய், சுதுமலை, மானிப்பாய் ஆகிய 5 கிராமங்களில் உள்ள கோழிப் பண்ணையாளர்கள், கால்நடை வளர்ப்பவர்கள் ஆகியோரின் நலன் கருதி வலி. தென்மேற்கு பிரதேச சபை யின் தலைமை அலுவலக வளாகத்தில் மானிப்பாய் பட்டின அலுவலகத்துக்கு அருகிலுள்ள சிறிய கட்டடத்தில் இயங்கி வரும் கால்நடை மருத்துவ நிலையத்தை பிரதேச சபையின் பாதுகாப்புக் கருதியும், அங்குள்ள முன்பள்ளி மாணவர்களின் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டும் மூடுவதற்கான நடவடிக்கையைப் பிரதேசசபை மேற் கொண்டது.

பிரதேச சபையின் அந்த முடிவு குறித்துப் பொதுமக்கள் பிரதேச சபை உறுப்பினர்களின் கவனத்துக்குத் தெரியப்படுத் தியதை அடுத்து பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் அது குறித்து ஆராயப்பட்டபோது பிரதேச சபையின் முடிவுக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்த உறுப்பினர்கள் மக்களின் நலன் கருதி கால்நடை வைத்திய நிலையம் தொடர்ந்தும் அதே கட்டடத்தில் இயங்க வேண்டும் என்று வற்புறுத்தியதுடன் அதற்கான தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளனர்.

அதையடுத்து கால்நடை மருத்துவநிலையம்மேலும்தொடர்ந்து ஒரு வடத்துக்கு இயங்குவதற்கான ஒப்பந்தம் பிரதேச சபையால் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ–115)

## 90 லட்சம் ரூபா செலவில் கற்றல்கூடம் திறந்து வைப்பு

**பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில்**

வடமராட்சி, டிசெ. 19

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் சுமார் 90 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய மாடிக்கட்டடகற்றல்கூடமும்நவீன சிற்றுண்டிச்சாலையும் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.

திறப்பு விழா நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக்கலந்து கொண்ட வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், நவீன சிற்றுண்டிச் சாலையையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கற்றல் கூடத்தையும் திறந்து வைத்தனர். அதிபர் செல்வி கிறேஸ் தேவதயாளினி தேவராசா தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த பாடசாலையின் பழைய மாணவரான ஜேர்மன் நாட்டுச் செனட்டர் எஸ்.அயன்ஹரன் இம்மாடிக்கட்டடத்தை நிர்மாணிக்க 90 லட்சம் ரூபாவை வழங்கியிருந்தார். அவர் ஏற்கனவே பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் போரால் அழிந்துபோன மாணவர் விடுதியை நிர்மாணிக்க 6 கோடி ரூபாவை வழங்கியிருந்தார்.

இரண்டு மாடிக்கட்டடத் தொகுதியைக் கொண்ட இந்தப் புதிய மாணவர் விடுதி எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பமாகும் கல்வி ஆண்டு முதல் செயற்பட ஆரம்பிக்கும் என்று ஹாட்லிக் கல்லூரி அதிபர் தர்மலிங்கம் முகுந்தன் தெரிவித்தார். (வ–173)



*இலங்கை வங்கி காரைநகர் கிளை முகாமையாளர் வி.விஜயகுமார் மரக்கன்று நடுகின்றார்.*

## இலங்கை வங்கியின் காரைநகர் கிளை முன்னெடுத்த மர நடுகை

காரைநகர், டிசெ.19

காரைநகர் இலங்கை வங்கிக் கிளையினர் அண்மையில் காரைநகர் பாடசாலைகள், பொது இடங்களில் மரநடுகைத் திட்டத்தை முன்னெடுத்தனர்.

இலங்கை வங்கி காரைநகர் கிளை முகாமையாளர் வி.விஜயகுமார் தலைமையில் பாடசாலைகள், பொது நிறுவனங்களுக்குச் சென்ற வங்கி அலுவலர்கள் அலுவலக உத்தியோகத்தர்கள், பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுடன் இணைந்து மரநடுகை நிகழ்வை முன்னெடுத்தனர்.

பாடசாலைகள், தபாற் கந்தோர், காரைநகர் அபிவிருத் திச் சபை, மாணவர் நூலகம், பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மர நடுகை நிகழ்வை முன்னெடுத்தனர். காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில்பாடசாலைஅதிபர் வேல்முருகமூர்த்தியுடன்இணைந்து இலங்கை வங்கி காரைநகர் கிளை முகாமையாளர் வி.விஜயகுமார் மரக்கன்றைநட்டுவைத்தார். (வ–250)

## 'தீம் தனனா - 3' பரதநாட்டிய நிகழ்வு மன்னாரில் ஞாயிறன்று

மன்னார், டிசெ, 19

யாழ் இந்திய துணைத் தூதரகமும் திருமறைக் கலாமன்றமும் இணைந்து நடத்தும் 'தீம் தனனா – 3' என்ற பரத நாட்டிய நிகழ்வு மன்னார் நகர மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணி தொடக்கம் 7 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் ராயப்பு ஜோசப் அடிகளார் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண மீன்பிடி அமைச்சர் பி.டெனீஸ்வரன், மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.தேசப்பிரிய ஆகியோரும் யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதரகத்தின் பதில் துணைத் தூதர் எஸ்.டி. மூர்த்தியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மன்னார் திருமறைக் கலா மன்றம், யாழ்ப்பாண திரு மறைக் கலாமன்றம், முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் இணைந்து ஆறு நடனநிகழ்வுகளை வழங்கவுள்ளனர்.

இதில் ஒரு ஆற்றுகை சுனாமி இடரின் 10ஆவது வருடத்தை நினைவுகூரும் முகமாக அமையவுள்ளதாகவும், இந்த நிகழ்வில் வாத்திய கருவியின் உதவியுடன் மீனவர்களின் வாழ்க்கை முறையை வெளிப்படுத்தவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திய கலாசார அமைச்சின் அனுசரணையுடன் வட மாகாணத்தில்உள்ளகலாசார அமைப்புக்களின் திறமையை உயர்வடையச் செய்வதற்காகவே இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் நிகழ்வைப் பார்வையிட ஆர்வமுள்ளவர்கள் வருகை தரலாம் என்றும் இந்திய துணைத் தூதரகம் தெரிவித்துள்ளது. (வ–10)

## ரயில் எஞ்ஜினுடன் பிக்கப் மோதியதில் இருவர் காயம்

யாழ்ப்பாணம்.டிசெ.19

ரயில் சேவையில் ஈடுபட்டிருந்தபோது ரயில் கடவையை கடக்க முற்பட்ட பிக்கப் ரக வாகனம் ரயில் எஞ்ஜினுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்ததுடன், பிக்கப்பும் ரயிலின் சமிக்ஞை பெட்டியும் சேதமடைந்தது.

இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6.15மணியளவில் கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி– யாழ்ப்பாணத்துக்கான மாலை நேர சேவையில் ஈடுபடும் காரியாலய ரயில் சேவையாழ்ப்பாணத்தில்இருந்து மாலை 4 மணிக்கு கிளிநொச்சி ரயில் நிலையம் வரை சேவையில் ஈடுபட்டு மீள 6.15 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கி சேவையில் ஈடுபட்டிருந்தது.

இதன்போது கரடிப்போக்கு சந்தியில் ரயில் கடவை மூடப்படாமல் இருந்துள்ளது. இதனை அவதானிக்காது பிக்கப்பில் பயணித்தவர்கள் ரயில் கடவையைக் கடக்க முற்பட்டனர்.

எனினும் ரயில் கடவைக்கு அண்மித்த மோது சமிக்ஞை மற்றும் அபாய ஒலியை எழுப்பியவாறு பயணித்த போதும் பிக்கப் கடவையைக் கடக்க முற்பட்டுள்ளது.



ரயிலின் எஞ்ஜினுடன் பிக்கப் மோதியதில் காயமடைந்த இருவரும் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள் ளதுடன் விபத்து தொடர்பான விசாரணைகளைகிளிநொச்சிபொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (வ–14)

## நன்னீர் பொதுக்கிணறுகள் பராமரிப்புக்கு நிதி ஒதுக்கீடு

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் குடிதண்ணீரை தடங்கலின்றியும் சுத்தமாகவும் வழங்குவதற்கு பாவனையிலுள்ள 4 கிணறுகளைப் புனரமைத்துப் பாதுகாப்பதற்கு வசதியாக இடர் முகாமைத்துவ அமைச்சு இரண்டரை இலட்சம் ரூபாவை வலி. தென்மேற்குப் பிரதேச சபைக்கு வழங்கியுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் காக்கைதீவு, மாதகல், கட்டுடை ஆகிய இடங்களில் வசிக்கும் நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்குப் பிரதேச சபையால் பவுசர் மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி மக்களுக்கு வழங்கப்படும் குடிதண்ணீரை தடங்கலின்றியும் சுத்தமாகவும் வழங்குவதற்கு வசதியாக குடிதண்ணீர் எடுக்கப் பயன்படுத்தப்படும் பண்டத்தரிப்பு பாத்திமா கோயில், மாதகல் சிவன் கோயில், இளவாலைஉயரப்புலம்,மானிப்பாய் தலைமை அலுவலகம் ஆகிய இடங்களிலுள்ள பொதுக் கிணறுகளை புனரமைப்பதற்கே குறித்த நிதி வழங்கப்பட்டுள்ளது. (வ–115)

## தொழில்நுட்ப உற்பத்திப் பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ.19

இரசாயனத்தோடு தொடர்புடைய தொழில்நுட்ப உற்பத்திப் பயிற்சி நெறி ஒன்றை யாழ். மாவட்டத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சவர்க்காரம் சலவைத்தூள், நிலப்பூச்சு, சுவர் நிரப்பி, சிரட்டைக்கரி ஆகியவற்றை உற்பத்தி செய்ய விரும்பமுடைய தொழில் முயற்சியாளருக்கே இந்தப் பயிற்சி நெறி வழங்கப்படவுள்ளது. இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வு எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. (வ–ரி)

# அம்மாடியோவ்!

## இவ்வளவு போட்டிகளும் பரிசுகளும் எமக்கா?



| இல | போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு ரூ. | 2ஆம் பரிசு ரூ. | 3ஆம் பரிசு ரூ. | மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| | | C | தரம் 3, 4, 5 | 5,000 | 4,000 | 3,000 | மாகாணம் |
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | C | தரம் 3, 4, 5 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |

# 30

அகவையில் உதயன்

## தமிழ் வளர்ப்போம் தமிழால் இணைவோம்!

### கவிதை! கவிதை!!

### வெற்றியிலும் பரிசு மழையிலும் திளைத்திடுங்கள்

## உங்களால் முடியும் மாணவர்களே!

**தமிழ்க் கவிதை மேம்பாட்டில் தீவிர கரிசனைகாட்டிவரும் உதயனின் உதயன் 30ஆவது ஆண்டு மாபெரும் கவிதைப் போட்டி**

### தரம் 10, 11, 12, 13 இல் கற்கும் மாணவர்களே!

**கவிதைத் தேர்வில் கலந்துகொண்டு பரிசில்களை வெல்லுங்கள்**

### கவிதைக்கான தலைப்புக்கள் இதோ!

- 'ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்'
- 'கற்றதன் வழி உயர்வு காண்போம்'

கவிதை ஒவ்வொன்றும் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். கவிதைகள் மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.

அனுப்பப்படும் கவிதைகள் முன் எப்பொழுதும் வெளியிடப்படாதது என்பதனையும், சொந்த ஆக்கம் என்பதனையும் ஆசிரியர்/ அதிபர் உறுதி செய்தல் வேண்டும்.

தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம், அழகிய கையெழுத்தில் அல்லது கணினியில் அச்சிடப்பட்டதாக கவிதை அமைதல் வேண்டும்.

**கவிதையை 2015.02.28 இற்கு முன்னர்**

**30 அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்தி கவிதைகளை ஆக்குங்கள்.
உடன் உதயனுக்கு அனுப்பி வையுங்கள்.
உதயன் விண்ணப்பப் படிவத்தில் வேறாக உங்கள்
விவரங்களை இணைக்க மறந்து விடாதீர்கள்.

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..........................................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..........................................
கற்கும் பாடசாலை: ..........................................
தரம்: ...............

பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..........................................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..........................................
ஆசிரியரின் பாடத்துறை: ..........................................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ ..இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .......................................... அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

உதயன் பத்திரிகையுடன் நாளாந்தம் இணைந்திருங்கள்!

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## 13ஐ தாண்டி இனியாவது இந்தியா நகர வேண்டும்

இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தம் வடக்கு - கிழக்குத் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வாக ஒருபோதும் அமையாது என்பதை மீண்டும் ஒரு தடவை வடக்கு மாகாண முதலமைச்சர் ஆணித் தரமாகத் தெரிவித்திருக்கிறார். அண்மையில் இந்தியாவிற்குச் சென்றிருந்த முதலமைச்சர் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசும் போதும் இந்த விடயத்தைத் தெளிவாக - அழுத்தம் திருத்தமாக - வலியுறுத்தியிருந்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம், இலங்கை - இந்திய உடன்படிக்கையின் அடிப்படையிலேயே உருவானது. எனினும் உடன்படிக்கையில் சொல்லப்பட்டிருந்த காத்திரமான விடயங்கள் அனைத்தையும் தவிர்த்துவிட்டு, வெறும் கோதாக, அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் 13ஆவது திருத்தம் தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்திய - இலங்கை உடன்படிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அனைத்தையும் அப்படியே - அந்த வடிவத்திலேயே - நடைமுறைப்படுத்தினால் அடிப்படைவாத சிங்களவர்களிடம் இருந்து தனக்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பும் என்றும் அத்தகைய நிலையில் தன்னால் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த முடியாமலேயே போய்விடும் என்றும் புதுடில்லியை ஜே.ஆர். அப்போதைக்குச் சமாதானப்படுத்தியிருந்தார்.


எனவே உடன்படிக்கையின் நீர்த்துப்போன வடிவமான 13ஆவது திருத்தத்தை இந்தியா அனுமதித்தது. அதன் மூலம் அதிகாரங்கள் பகிரப்படவில்லை என்பது இந்தியாவுக்கும் தெரிந்தே இருந்தது. இருந்தாலும், காலப்போக்கில் மாகாணங்களுக்கு மெல்ல மெல்ல அதிகாரங்கள் வழங்கப்படும் என்ற கொழும்பின் உறுதிமொழியை ராஜீவ்காந்தியும், சவுத் புளொக்கில் இருந்தவர்களும் (தெற்காசிய விவகாரங்களைக் கையாளும் இந்திய அயலுறவுத் துறையின் பிரிவு) நம்பினர். பின்னர் ஏமாந்தனர்.

உண்மை இப்படி இருந்தபோதும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதற்கும் மேலாக அதிகாரங்களைக் கொழும்பு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற தமது கோஷத்தை புதுடில்லி இன்னும்தான் கைவிடுவதாக இல்லை. இலங்கையின் இனப் பிரச்சினை விடயத்தில் தனது குரல் ஓங்கி ஒலிப்பதற்கு இருக்கக்கூடிய ஒரே பிடி இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான 13ஆவது திருத்தம் மட்டுமே என்று புதுடில்லி எண்ணுவதால் இது நிகழ்வதாகச் சொல்லப்படுகிறது.

ஆனால், ஜே.ஆர். அறிமுகப்படுத்திய 13ஆவது திருத்தத்தில் இருந்த பல முன்னேற்றகரமான விடயங்கள்கூட (அவற்றை அதிகாரங்கள் என்று கொள்ள முடியாது) 18ஆவது திருத்தத்தின் மூலமும் நீதிமன்றத் தீர்ப்புகள் மூலமும் பறிக்கப்பட்டு விட்டன. அல்லது முடக்கப்பட்டு விட்டன.

அதற்கும் மேலாக 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட பொலிஸ் மற்றும் காணிகள் விவகாரங்களைக் கையாள்வதற்கான அனுமதியையும்கூடக் கொழும்பு வழங்குவதற்குத் தயாராக இல்லை.

இந்த நிலையில் வடக்கு மாகாணத்தின் ஆட்சியைப் பொறுப்பெடுத்து, ஒரு வருடத்திற்கும் மேலான காலத்திற்கு அதனைக் கொண்டு நடத்திப் பார்த்து, பட்டறிவுப் பகிர்வாக முதலமைச்சர் முன்வைத்திருக்கும் முடிவையாவது இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும். 13 என்ற பிடியில் தொங்கிக் கொண்டிருப்பதைவிட்டு, தமிழர் தீர்வுக்கு புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதற்கான அழுத்தத்தையும் நெருக்கடியையும் புதுடில்லி வழங்கவேண்டும். அதுவே காலத் தேவையானது.



# பள்ளிக் குழந்தைகள் செய்த பாவம் என்ன?

ராஜ்

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் உள்ள பெஷாவர் நகரின் வாரஸாக் வீதியில் இராணுவத்தால் நடத்தப்பட்டுவரும் பாடசாலையில் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வந்தனர். அந்தப் பாடசாலை யில் கடந்த திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணி யளவில் புகுந்த தெஹ்ரிக் இ தலிபான் அமைப்பைச் சேர்ந்த 6 தீவிரவாதிகள், மாணவர்களை நோக்கித் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர். மேலும் உடலில் கட்டிவைத்திருந்த வெடி குண்டை வெடிக்கச் செய்து மனித வெடிகுண்டுத் தாக்குதலையும் நடத்தினர். இதில், 132 குழந்தைகள் உட்பட 141 பேர் சாவடைந்தனர். 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இராணுவத்தினர் நடத்திய பதில் தாக்குதலில் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். மேலும் பல மாணவர்களையும், ஆசிரியர்களையும் பணயக் கைதிகளாகத் தலிபான் தீவிரவாதிகள் பிடித்து வைத்திருந்தனர். தாக்குதல் சம்பவம் நடைபெற்றதும், பாடசாலையைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர், தீவிரவாதிகள் மீது கடும் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதல் 7 மணி நேரம் தொடர்ந்து நடைபெற்றது. 3 தீவிரவாதிகள் தங்கள் உடலில் இருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்து தாக்குதல் நடத்தினர். ஏனைய தீவிரவாதிகளை இராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர்.

தாக்குதலுக்கு தெஹ் ரிக் இ தலிபான்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர், குழந்தைகள் மீதான தீவிரவாதிகளின் இந் தக் கொடூர வெறியாட்ட துயரச் சம்பவமானது கண்டங்களையும் நாடுகளையும் இனங்களையும் மொழிகளையும் தாண்டிப் பல்வேறு தரப்பட்டவர்களையும் சோகத்தில் ஆழ்த்திவிட்டுள்ளது:

ஆப்கானிஸ்தானின் எல்லையையொட்டி அமைந்துள்ள கைபர் பகுதியிலும் வடக்கு வாரிஸ்தான் பகுதியிலும் பாகிஸ்தான் இராணுவத்தினால் அண்மைக் காலத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் நடவடிக்கைகளில் நூற்றுக்கணக்கான தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டமைக்குப் பழி வாங்கும் நடவடிக்கையாகவே தீவிரவாதிகள் இராணுவப் பாடசாலையை இலக்கு வைத்து இந்த மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானிய தலிபான்கள் இவ்வாறு வெறியாட்டம் ஆடியிருக்கும் நிலையில், ஆப்கானிஸ்தானிலுள்ள உள்ளூர் தலிபான் இயக்கத்தினரோ பாடசாலைத் தாக்குதலானது இஸ்லாமிய மார்க்கத்துக்கு விரோதமானதெனத் தெரிவித்துள்ளதுடன், கொல்லப்பட்ட, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர்களுக்குத் தமது அனுதாபங்களையும் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானில் அண்மைக்காலமாக இடம் பெற்று வருகின்ற சம்பவங்கள் அந் நாட்டை திறந்த வெளிக் கொலைக்களமாக உலகம் நோக்குவதற்கு வழி கோலிவிட்டுள்ளது. பொது மக்களைக் கொத்துக் கொத்தாகக் கொல்வதை அங்குள்ள தீவிரவாதக் குழுக்கள் வழமையாக்கிக் கொண்டுவிட்ட நிலையில், உயிர்களுக்கு எவ்வித மதிப்பும் இல்லாத துர்ப்பாக்கிய நிலைமை காணப்படுகின்றது.

உலகையே அதிர்ச்சியில் ஆழ்த்திய இந்தப் பாடசாலை மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டித்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப், தீவிரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை தொடரும் என்றும் தீவிர வாதத்துக்கு எதிராக மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும் கைபர் பக்துன்கவா மாகாண முதல்வர் பெரவைஸ் , தாக்குதலில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாகாண அரசு சார்பில் 3 நாள் துக்கம் அனுசரிக்கப்படும் என்றார்.

அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, இந்தியப் பிரதமர் மோடி மற்றும் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ–மூன் ஆகியோர் தமது இரங்கலையும் கண்டனங்களையும் தெரிவித்துள்ளனர். இந்தியா டுவிட்டர் முலம் ஆறுதல் தெரிவித்துள்ளமை உலகை நெகிழ வைத்துள்ளது. காலையில் குழந்தைகளைத் தயார்படுத்தி பாடசாலைக்கு அனுப்பி வைத்த பெற்றோர்கள் மறுநாள் அவர்களின் சவப்பெட்டியைச் சுமந்து கொண்டு அடக்கம் செய்யச் சென்றமை அனைவரினதும் மனங்களையும் உலுக்கி விட்டுள்ளது . உயிர் தப்பிய மாணவர்கள் அனைவரும் பிரமை பிடித்தவர்களாகினர். அந்தக் கொடூரக் காட்சியை மறக்க முடியாது தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

அந்தக் கொடூரத் தாக்குதலால் பெஷாவர் நகரில் எந்தத் தெருவில் பார்த்தாலும் இறுதி ஊர்வலம் நடந்தது. குழந்தைகளை இழந்தவர்கள், அவர்களின் உறவினர்கள், நண்பர்கள், பொதுமக்கள் என அனைவரின் கதறல்களும் அந்த நகரத்தையே உலுக்கியது.

பெஷாவர் நகரில் முன்பும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக் கது. கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி கிறிஸ்தவ ஆலயமொன்றில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஆகக்குறைந்தது 80 பேர் கொல்லப் பட்டிருந்தனர். இது கிறிஸ்தவர்கள் மீது பாகிஸ் தானில் நடத்தப்பட்ட மோசமான தாக்குதல்களிலொன்றாகப் பதிவாகியுள்ளது. இதற்கும் தலிபான்களுடன்தொடர்புபட்ட தீவிரவாத அமைப்பே பொறுப்பேற்றது.

இதுபோன்றே குவேட்டா நகரில் கடந்தாண்டு ஜனவரி 10ஆம் திகதி ஹஸாரா ஸியா முஸ்லிம்சிறுபான்மையினத்தவரை இலக்கு வைத்து ஆயுததாரிகள் 120பேரைப்படுகொலைசெய்திருந்தனர்.இவை பாகிஸ்தானில் அரங் கேறிக்கொண்டிருக்கும் கொலைவெறியாட்டம் குறித்த ஒருசில பதிவுகளே எனும்போது ஒட்டுமொத்த பரிணாமம் மனிதம் குறித்த ஆழ்ந்த கவலைகளுக்கு வழி கோலுகின்றன.

எந்தவொரு காரணத்துக்காகவும் பொதுமக்களை இலக்குவைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.அதிலும் அரசியலோடு அறவே சம்பந்தமற்ற பாடசாலை மாணவர்களை இலக்குவைப்பதை ஒருபோதுமே நியாயப் படுத்திவிடமுடியாது.

# அமைதிக்கு வேட்டு வைக்கப்போகும் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல்

மூனாத்தானா

ஜனவரி 2015இல் நடைபெறப் போகின்ற 7ஆவது ஜனாதிபதித் தேர்தல் அமைதியாக நடைபெறும் என்பதை எதிர்பார்க்க முடியாது. போட்டியிலும் போட்டியாகவும், இரண்டில் ஒன்று பார்த்து விடுவோம் நீயா? நானா? என்ற பெரும் சவால்களுக்கு மத்தியிலும் இடம்பெறும் தேர்தலாகவும் அமையப் போகின்றது என்பது திண்ணம்.

மூன்றாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற மஹிந்த ராஜபக்ஷ 1970ஆம் ஆண்டிலும், முதன் முதலாக ஜனாதிபதி மஹிந்தவை எதிர்த்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடு கின்ற எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன 1979ஆம் ஆண்டும் அரசியலில் பிரவேசித்தனர்.

நவம்பர் 21ஆம் திகதி எதிர்க்கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டமை இலங்கை அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

அரச தரப்பிலிருந்து, அதிலும் குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பொதுச் செயலாளரான மைத்திரிபால சிறிசேனவை எதிரணித் தரப்பினர் தம்பக்கம் இழுத்தெடுத்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வைத்தது மஹிந்த ராஜபக்ஷவுக்கும், சகோதரர்களுக்கும் பெரியதொரு அதிர்ச்சியாகவே இருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. சுகாதார அமைச்சராக இருந்த மைத்தி ரிபாலசிறிசேனவுடன் மீன்பிடித் துறை அமைச்சராகவிருந்த ராஜித சேனாரத்ன, கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த சேனநாயக்க ஆகியோர் தமது பதவிகளைத் துறந்து விட்ட நிலையில் எதிரணிக்குத் தாவியிருந்தனர். அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்கவும் முதற் பிரதமராக பதவி வகித்தவரான டி. எஸ்.சேனநாயக்கவின் பேரனுமான வசந்த சேனநாயக்காவும் விலகியிருந்தனர். அதைத் தொடர்ந்து அரச தரப்பிலிருந்து பல நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உட்படப் பலர் விலகுவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அது பெரிய அளவில் இடம் பெறவில்லை.

கைச்சாத்திட்டார். அதேபோல் ஜனாதிபதித் தேர்தலும் ஜனவரி எட்டாம் திகதி நடத்தப்படுவது சோதி டர்களின் கணிப்பின்படி அது மஹிந்தவுக்கு வெற்றி வாய்ப் பைக் கொண்டுவரும் என்பதன் அடிப்படையிலேயே



ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ சோதிடத்தில் நம்பிக்கை கொண்டவராவார். ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பில்கூட சோதிடர் வழங்கிய நேரத்துக்கமைய கடந்த மாதம் 20ஆம் திகதி அன்று பிற்பகல் 1.37 மணிக்கு ஆகும்.

எதிரணி சார்பில் உறுதியானதொரு ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை உள்வாங்கி போட்டியிட வைத்ததில் முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகாவும், மங்கள சமரவீரவும் சேர்ந்து அரசியல் சதுரங்கத் தில் மிக இரகசியமாக காய்நகர்த்தி அரசை உலுப்பியிருக்கின்றனர்.

இது எதிரணிக் கட்சிகளுக்கு கிடைத்த மாபெரும் 'வெற்றியாகும். ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க அல்லது கருஜெய சூரியா ஆகியோர் களில் ஒருவரே பொது வேட்பாளராகப் போட்டியிடுவார் என்ற செய்தியே ஜனாதிபதி மஹிந்தவுக்கு தமது வெற்றி குறித்து நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கலாம்.

பிரதமர் பதவியை மைத்திரிபால சிறி சேனவுக்கு வழங்குவதற்கு மஹிந்த ராஜபக்ஷ இழுத்தடித் திருந்தார். அந்தப் பதவியை மைத்திரிக்கு வழங்கினாலென்ன; வழங்கா விட்டாலென்ன அவர் தனக்கெதிராக ஜனாதிபதி தேர்தலில் தமது பக்கமிருந்து வெளியேறி சந்திரிகாவுடன் சேர்ந்து தனக்கெதிராக இயங்குவார் என்ற கணிப்பும் மஹிந்தவுக்கு இல்லாமற் போயிருந்திருக்க முடியாது. இரண்டு ஆண்டுகள் வரையில் மஹிந்தவுக்கும் மைத்திரிபால சிறிசேனவுக்கும் அரசியல் பனிப்போர் நடந்து வந்தது என்பது அரசிய லில் பேசப்பட்ட விடயமாகும். பிரதமர் பதவிக்காக அமைச்சரான நிமால் சிறிபால டி சில்வாவும் ஏங்கிக் கொண்டிருந்தவர். இருவரும் அரசியலில் எதிரும் புதிருமாகவே செயற்பட்டனர். இருவருக்கும் பிரதமர் பதவியை மஹிந்த வழங்கவேயில்லை.

மஹிந்த, மைத்திரிபால சிறினேவுக்கு பிரதமர் பதவியை வழங்கிச் சமாளிக்க எத்தனித்திருக்கலாம். ஆனால் அவர் தங்களை விட்டு விலகியதுடன் எதிரணி சார்பில் பொது வேட்பாளராகப் போட்டியிட முன்வந்தமை ஜனாதிபதி உட்பட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கலையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளதை மறுக்க முடியாது. இருபதுக்கு மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியிலிருந்து விலக முடிவெடுத்திருந்தாலும் கூட தற்போது மஹிந்தவினால் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கலாம்? ஆனாலும் விலக இருந்த நா ர் ளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் அரசினால் ஓரம் கட்டப்படவே செய்வர். அப்படியான நிலையில் தேர்தல் நெருங்கும் வேளையில் அல்லது டிசெம்பர் எட்டாம் திகதிக்குப் பின்னர் படிப்படியாக அவர்கள் எதிரணியினருடன் இணைந்து கொள்ளலாம்.

ஜனாதிபதித் தேர்தல் நாள் நெருங்க நெருங்க யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை அரச தரப்பினரினதும் எதிர்க் கட்சியினரினதும் தேர்தல் பரப்புரைகளை உற்று நோக்குபவர்களாகவே வாக்காளர்கள் இருப்பார்கள்

இலங்கையில் அமைதியான தேர்தல் பரப்புரைகள் நடை பெறும் என்று இம்மியளவேனும் எதிர்பார்க்க முடியாது. அது சாத்தியப்படப் போவதுமில்லை.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளியாகியவுடன் தென் இலங்கையில் வன்முறை ஆரம்பமாகியிருக்கின்றது. தேர்தல் நாள் நெருங்க நெருங்க வன்முறைகளும் உச்சத்தைத்தொடும். மூவினவாக்காளர்களுமே கடுமையாக ஆளும் தரப்பு-எதிர்த்தரப்பு ஜனாதிபதி வேட்பாளர்களாலும், படைத் தரப்பினராலும் இனிவரும் நாள்களில் கடுமையாக பாதிக்கப் படப் போகின்றனர்.

உறுதியான தொரு ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை உள்வாங்கி போட்டியிட வைத்ததில் முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகாவும், மங்கள சமர வீரவும் சேர்ந்து அரசியல் சதுரங்கத்தில் மிக இரகசியமாக காய்நகர்த்தி அரசை உலுப்பியிருக்கின்றனர்.

“ மஹிந்த, மைத்திரிபால சிறினே வுக்கு பிரதமர் பதவியை வழங் கிச் சமாளிக்க எத்தனித்திருக் கலாம். ஆனால் அவர் தங்களை விட்டு விலகிய துடன் எதிரணிச் சார்பில் பொது வேட்பாளராகப் போட்டியிட முன்வந்தமை ஜனாதிபதி உட்பட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப் பினர்களையும் அதிர்ச்சி யடைய வைத்துள்ளதை மறுக்க முடியாது. இருபதுக்கு மேற் பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கள் ஆளும் கட்சியி லிருந்து விலக முடிவெடுத் திருந்தாலும் கூட தற்போது மஹிந்தவினால் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கலாம்?



# கருத்து

## வாசகர் திருமுகம்

### ஆய்வு கூடப் பரிசோதனைகளும் ஆயுள் காக்கும் மருத்துவமனையும்

போர்க் காலம் தொட்டு இந்தக் காலம் வரை எமது குடாநாட்டு மக்களின் ஆயுளைக் குறைக்காது நீடித்து வாழச் செய்கின்ற பங்களிப்பில் போதனா மருத்துவமனையின் பங்கு மதிப்பிட முடியாதளவு உன்னதமானது. எம்முத்தான மருத்துவர்களையும், பணியாளர்களையும் பதவி நேரத்தில் பறி கொடுத்ததைப் பார்த்த கணங்கள்... வலிக்கிறது நெஞ்சு, பனிக்கின்றன கண்கள். அது தியாக சரித்திரம். அக்காலத்தில் போக்குவரத்து வசதிகள் இல்லை. ஆனால் பெரும்பாலும் எல்லாம் இருந்தன. அதிக பட்சம் அருமையாய் நடந்தன.

ஆனால் இந்தக் காலம் எதனையும், எங்கிருந்தும் ஆறு மணி நேரத்தினுள் பெற்று விடலாம். மாடிக் கட்டடங்கள், ஏ.சி. அறைகள், ஆனால் ஆறு மாதமாகியும், இதய நோயாளிகளாகிய நாம் முக்கியமான மருந்துவில்லைகளையும் வெளியில்தான் வாங்குகிறோம். இரத்தம் தொடக்கம் – இதயம் வரை T.S.H உட்பட சகலதும் இப்போ எமது மருத்துவமனையில் செய்யலாமாம். ஆனால் இரத்தம் பரிசோதித்தால் அறிக்கை தொலைந்து விடுகிறது. இரண்டாவதுமுறை இரத்தம் கொடுத்த சந்தர்ப்பங்களும் உண்டு. இன்னும்அறிக்கை வரவில்லை, ஆய்வு கூடத்துக்குப் போங்கோ என்று விரட்டப்படுவதும் உண்டு. பரிசோதிக்கும் ஊழியர்களின் உபசரிப்போ... அப்பப்பா! ஆக, பல்லிளித்து பெற்ற பரிசோதனை ஆய்வுகூடம் தொட்டு உபகரணங்கள் வரை இருக்க, பல்லாயிரம் உழைக்கும் பல ஆய்வு கூடங்கள் மருத்துவமனைக்குச் சமாந்தரமாக உழைப்பதை அவர்களின் பதிவுகள் காட்டி நிற்கும். "இவர்களுக்கு ஏதும் கொமிசனோ" என சில தரகர்கள் கதைக்கின்றார்கள். ஏனெனில் எந்த மருத்துவர் அனுப்பினவை என்ற கேள்வியுடன் தான் பரிசோதனை வெளியில் நடக்கிறது. எங்கே பிழை? எப்படிச் சீர்செய்வது? பாவம் எம் வயோதிப நோயாளிகள்.

*வயவையூரான்.*

### தெருவிளக்கு ஒளிபெறுமா?

ஆனைப்பந்திச்சந்தி (பருத்தித்துறைசாலை)யில் கைலாயபிள்ளையார் கோயில் பக்கம் செல்லும் நாவலர் வீதியில் முதல் வரும் முச்சந்தியில் உள்ள தெருவிளக்கு கடந்த வெள்ளிக்கிழமை இரவு முதல் எரியவில்லை. இந்தச் சந்தியில் உள்ளவர்கள் இருவர் எனக்குத் தெரிவித்ததன் காரணமாக சனி, ஞாயிறு விடுதலை என்பதனால் திங்கட்கிழமை தொலைபேசி மூலம் தெரிவித்தேன். ஒரு பெண்மணி எனது தொலைபேசி முதல் சகல விவரங்களையும் கேட்டுப் பதிந்து கொண்டார். நம்பிக்கையுடன் இருக்க செவ்வாய்க்கிழமை வரை திருத்தப்படவில்லை.

ஆனால் செவ்வாய் உயர் பீடத்துடன் தொடர்பு கொண்ட போது அங்கிருந்தவர் எனது தொலைபேசி உரையை வலு அக்கறையுடன் செவிமடுத்தார். தனது உரையாடலின் போது நீங்கள் இன்னாரா? என்று பெயரைச் சொன்ன போது எனது முறைப்பாடு சிறப்பாகப் பதியப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்து கொண்டேன்.


இந்தச் சந்தியில் உள்ள கடையில் இரு தடவையும், அருகில் உள்ள கஷ்டப்பட்ட பெண் நடத்தும் தையல் கடையிலும் பெறுமதியான தையல் இயந்திரம், பெறுமதியான பொருள்களும் களவுபோன படியால் இரவில் களவு இடம்பெறும் என்று அஞ்சுகிறோம். தயவு செய்து இன்றே திருத்திவிடவும் என அன்பாகவும், பண்பாகவும் கேட்டதற்கு உடன் நடவடிக்கை எடுப்பதாக உறுதி மொழி தந்தார்.

ஆனால் இந்தக் கடிதம் எழுதும் நேரம் மாலை 5.45 மணி வரை திருத்தப்படவில்லை. இதற்கு முன்னரும் ஒரு சந்தர்ப்பத்தில் இது எரியாமல் இருக்க, இந்தச் சந்தியில் இருப்பவர் தனது செலவில் குழாய் விளக்கையும் அதற்குரிய ஆளியையும் பூட்டினார்.

மக்கள் செலுத்தும் வரிப் பணத்தில்தான் சகல அரச நிறுவனங்களும் இயங்குகின்றன. ஆகவே மக்களின் தேவைகளை நிறைவேற்றுவது அவற்றின் தலையாய கடமையாகும்.

*மக்கள் சார்பாக,*
*சோமு சொக்கலிங்கம் ஜே.பி,*
*நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

கேலிச் சித்திரம்




நன்றி: டெய்லிமிரர்

### வேகமாக ஓடு வீமா

சில தலைமுறைகளுக்கு முந்திய தலைமுறையினருக்கு முதலாம் தரத்தில் வழங்கப்படும் இலவசப் பாடப் புத்தகத்தில் இந்தக் கதை இடம்பெற்றிருக்கும். 'தாடியறுந்த வேடன்' இந்தத் தலைப்பிட்ட கதையில் படங்களுக்குக் கீழ், வேகமாக ஓடு வீமா.. அணிலைப் பிடி என்ற வசனங்கள் எழுதப்பட்டிருக்கும். நடக்கவிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தல் குறித்து இணைய ஊடகங்கள் நடத்தும் கருத்துக் கணிப்புக்களை அவதானித்தால் இந்த வசனம் அதிகமாக நினைவுக்கு வருகின்றது.


இந்தத் தடவை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இணைய ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களின் பங்கு கணிசமானதாக இருக்கப் போகின்றது. அதனைத் தெளிவாகப் புரிந்துகொண்டபடியினால்தான் மைத்திரிபால சிறிசேன கட்சி மாறிய உடனேயே சமூக வலைத்தளங்களில் அவர் பெயரில் பக்கங்கள் உருவாக்கப்பட்டன. அவரின் பரப்புரைகள் குறித்து தொடர்ச்சியாக செய்திகள் வெளியிடப்படுகின்றன. இவ்வாறு சமூக வலைத்தளத்தில் நடத்தப்படும் இலவச விளம்பரம், இளைய தலைமுறையினரை, மத்தியதர மற்றும் நகர்ப்புற மக்களை இலவசமாகவே சென்றடைகின்றது. ஒரு பத்திரிகையில் மில்லியன் கணக்கில் பணம் செலவிட்டு விளம்பரம் கொடுப்பதற்கும், சமூக வலைத்தளத்தில் தனது பரப்புரையை மேற்கொள்வதற்குமிடையில் அதலபாதாளமளவிற்கான வித்தியாசம் உண்டு.

சமூக வலைத்தளங்களில் நுகர்வாளர்களாக ஓரளவு கல்வி கற்றவர்கள், அதிகார உருவாக்கங்களில் முக்கிய முடிவுகளை எடுக்கக்கூடிய மத்தியதர வர்க்கத்தினரே இருக்கின்றனர். எனவே இவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் பரப்புரைகளில், சமூக மட்டத்தில் இவர்களுக்கு அடுத்தநிலையில் இருக்கின்ற வர்க்கத்தினரது தெரிவிலும் சிந்தனையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அது எவ்வாறெனில், தேர்தல் பரப்புரை ஆரம்பித்த காலத்திலிருந்து இன்று வரை பல்வேறு இணையங்களும், தம் இணையங்களில் அடுத்த ஜனாதிபதி யார் என்ற கருத்துக் கணிப்பை நடத்தியிருக்கின்றன. நடத்தப்பட்ட அனைத்திலும் மைத்திரியே முன்னிலையில் இருக்கிறார். எனவே இணைய உலாவிகள் மத்தியில் அடுத்த ஜனாதிபதி மைத்திரிதான் என்ற அசையாத நம்பிக்கை உருவாகிவிட்டது. அல்லது கருத்துக் கணிப்பை அவதானித்தவர்கள் மனதில் அப்படியொரு சிந்தனை கட்டாயம் எழுந்திருக்கும். எனவே அந்த செய்தியும் எண்ணமும் அப்படியே வாய்மொழி மூலமாகப் பரவலடையும். செய்தி தீயாகவே பரவும் தன்மை கொண்டதால், இணையங்களின் கருத்துக் கணிப்பும் விரைவாகவே சகல மட்டத்தினரையும்– இணையப் பாவனை மற்றும் சமூக வலைத்தள பாவனை அற்றவர்களையும் சென்றடையும். அது வாக்களிப்பில் கூடியளவு தாக்கத்தை உண்டுபண்ணும். இதுவே இணையப் பரப்புரைகளினதும் கருத்துக் கணிப்புகளினதும் பின்னாலிருக்கின்ற அரசியல்.

ஆனால் அதனை சரியான விதத்தில் பேணாதவிடத்து வேகமாக ஓடு வீமா.. கதையின் இறுதியில் தாடியறுந்த வேடனாக மாறவேண்டிய நிலையும் உருவாகும். மைத்திரிக்கு அறுந்துபோக தாடியுமில்லை.

பத்தி எழுத்து



# முத்திரை
## (அஞ்சல் தலை)

உலக மக்களால் விரும்பப்படும் சிறந்த பொழுதுபோக்கு, முத்திரை (அஞ்சல் தலை) சேகரித்தலாகும். முத்திரை சேகரித்தல் உலகிலே சிறந்த பொழுது போக்குக் கலையாக வளர்ந்திருக்கின்றது. முத்திரை சேகரித்தலால் அழகுணர்ச்சி வளர்க்கப்படுகின்றது. அலங்காரம் செய்யும் ஆற்றல் விருத்தியாகின்றது. வகைப்படுத்தி வரிசைப்படுத்தும் ஆற்றல் வளர்க்கப்படுகின்றது. ஒழுங்குபடுத்துதல், தூய்மையாக்குதல் போன்ற நற்பண்புகளும் வளர்க்கப்படுகின்றன. முத்திரைகள் மூலம் பொதுஅறிவு வளருகின்றது. அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், அரசியல் நிகழ்வுகள், விஞ்ஞானிகள், விளையாட்டு வீரர்கள், கண்டுபிடிப்புக்கள், விலங்குகள், பறவைகள், கடல் வாழ் உயிரினங்கள், கலைகள், பண்பாடுகள், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள், கலாசார நிகழ்வுகள், நினைவுச் சின்னங்கள், முக்கிய நிகழ்வுகள் என்பவற்றையெல்லாம் படம் பிடித்துக்காட்டும் கருவூலங்களாக முத்திரைகள் விளங்குகின்றன.

## உலகிலேயே.....

1 .உலகிலேயே பரப்பளவில் மிகச் சிறிய நாடு எது?
வத்திக்கான்

2. உலகிலேயே பரப்பளவில் மிகப் பெரிய நாடு எது?
ரஷ்யா

3 .உலகிலேயே மிகப் பெரிய தீவு எது?
கிறீன்லாந்து

4. உலகிலேயே மிக உயர்ந்த பீட பூமி எது?
தீபெத் பீடபூமி

5. உலகிலேயே மிக உயரத்தில் அமைந்துள்ள நாடு எது?
சுவிற்ஸர்லாந்து






# தேர்தல்கள் திணைக்களத்தின் ஓர் அறிவித்தல்
## சனாதிபதித் தேர்தல் - 08.01.2015
## 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல் சட்டம்
## தேர்தல் சட்ட மீறல்களைத் தவிர்ந்து கொள்ளவேண்டியதன் தேவைப்பாடு

(1) போட்டியிடுகின்ற வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக கொடிகள், பதாகைகள், அறிவித்தல் பலகைகள், ஸ்ரிக்கர்கள், வேட்பாளர்களின் உருவப்படங்கள், தேர்தல் சின்னங்கள், ஏனைய குறியீடுகள், பிரசாரத் தொனிப்பொருள் வாக்கியங்கள் அல்லது சித்திரங்கள் என்பவற்றை அனுமதிபெறாத இடங்களில் காட்சிப்படுத்தல் தடுக்கப்பட்டுள்ளமை.

சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கட்சிகள் / வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்காக கொடிகள், பதாகைகள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், அறிவித்தல்கள், வேட்பாளர்களின் உருவப்படங்கள், தேர்தல் சின்னங்கள், தொனிப்பொருள் வாக்கியங்கள், உரிய குறியீடுகள் அல்லது சித்திரங்கள் என்பவற்றை காட்சிப்படுத்த முடிவது வேட்பாளர்களின் பிரசாரக்கூட்டம் நடைபெறுகின்ற தினத்தன்று அக்கூட்டம் நடைபெறுகின்ற வளவுக்குள் மாத்திரமேயாகும்.

எனினும், 2005 ஆம் ஆண்டில் போட்டியிட்ட வேட்பாளர்கள், கட்சிகளின் செயலாளர்கள், பொலிஸ்மா அதிபர் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோரிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கிணங்க வேட்பாளர்களின் அனுமதிபெறப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களில் மாத்திரம் பிரசாரப் பலகைகளைக் காட்சிப்படுத்த இடமளிக்கப்படுவதோடு, 2010 ஆம் ஆண்டில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடடொன்றிற்கமைய போட்டியிடுகின்ற கட்சியின் தலைவர், சனாதிபதி வேட்பாளர் கலந்துகொள்கின்ற கூட்டங்களில் கூட்ட வளவுக்கு வெளியே நியாயபூர்வமான தூரமொன்றிற்கு சோடனைகளை மேற்கொள்ளவதற்கும் அனுமதி வழங்கப்படுகின்றது. அத்தகைய சோடனைகள் கூட்டம் நடைபெறுகின்ற தினத்திற்கு முந்திய தினம் பிற்பகலில் மேற்கொள்ளப்பட்டு கூட்டத்திற்கு அடுத்த நாள் முற்பகலில் அகற்றப்படல் வேண்டும்.

பொது மக்களுக்கு புலப்படத்தக்க விதத்தில் பொது வீதிகளுக்கு அணித்தாக அமைந்துள்ள தனியார் வீடுகளில் வேட்பாளர் பிரசாரப் பலகைகளைக் காட்சிப்படுத்தல் உள்ளிட்ட ஏனைய அனைத்து பொது இடங்களிலும் மேற்கொள்ளப்படுகின்ற பிரசாரப் பலகைகளின் காட்சிப்படுத்தல்கள் சட்டத்துக்கு முரணானவையென பிரசைகள் அனைவருக்கும் இத்தால் தயவன்புடன் அறிவிக்கப்படுகின்றது.

கட்சி / வேட்பாளர் அலுவலகங்களை நிறுவுவது என்ற பெயரில் உண்மையான அலுவலகமொன்று இல்லாத இடங்களிலோ அல்லது அலுவலகத்திற்கு அருகிலுள்ள பெருந்தெருக்களிலோ சோடனைகள் செய்வது முற்றிலும் தடையாகும். அதேபோன்று அனுமதிபெறப்பட்ட, அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்களில் கூட பொது மக்களுக்கு தெரியத்தக்கவாறு தொலைக்காட்சி அலைவரிசைகளூடாகவோ அல்லது டிஜிடல் திரைகளூடாகவோ கட்சி / வேட்பாளர் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் சட்ட முரணனானவையென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. வாகனங்களில் கட்சி / வேட்பாளர் ஊக்குவிப்புக்காக கொடிகள், பதாகைகள், ஸ்ரிக்கர்கள் என்பவற்றின் காட்சிப்படுத்தலை மட்டுப்படுத்தல்.

தேர்தல் காலப்பகுதிக்குள் வேட்பாளர் அல்லது வேட்பாளர் சார்பாக முழு நாட்டிற்குமென நியமிக்கப்படுகின்ற தேர்தல் முகவர் பயணம் செய்கின்ற வாகனம் தவிர்ந்த வேறெந்த பொது அல்லது தனியார் வாகனத்திலும் கட்சி / வேட்பாளர் ஊக்குவிப்புக்கான கொடியொன்றையோ, பதாகையொன்றையோ காட்சிப்படுத்தல் சட்ட முரணானதென்பதும் தயவன்புடன் அறிவிக்கப்படுகின்றது.

கட்சி / வேட்பாளர் ஊக்குவிப்புக்காக பொருத்தப்பட்டுள்ள பிரசாரப் பலகைகள் / பதாகைகள் / தோரணங்கள், என்பவற்றை உடனடியாக அகற்றிக்கொள்ளுமாறு அப்பலகைகளைப் பொருத்தியுள்ள அனைவருக்கும் இத்தால் அறிவிக்கப்படுவதோடு, வேட்பாளரின் உருவம் அல்லது கட்சியின் சின்னம் மாத்திரம் மறையத்தக்க விதத்தில் சிறிய பொலீதீன் துண்டொன்றினால் மாத்திரம் மறைப்பது போதியதாகாதெனவும் அறிவிக்கப்படுகின்றது.

அதேபோன்று அரசாங்க நிறுவனங்களினால் பல்வேறு பணிகளுக்காக பொருத்தப்பட்டுள்ள பிரசாரப் பலகைகள் ஊடாக கட்சி / வேட்பாளர் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றதென தெரியவருகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அத்தகைய பலகைகளை முழுமையாக மறைப்பதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கையெடுக்குமாறு அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் அரசாங்க நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அறிவிப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு தயவன்புடன் அறியத் தரப்படுகின்றது. அதேபோன்று மேலே குறிப்பிடப்பட்டுள்ள சட்ட முரணான பிரசாரப் பலகைகள் / பதாகைகள் / ஸ்ரிக்கர்கள் போன்றவற்றை அகற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் ஊடாக மாகாண / மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் அறிவூட்டப்பட்டுள்ளனர்.

03. தேர்தல் காலப்பகுதிக்குள் ஊர்வலங்கள், நடை பவனிகளை மேற்கொள்வதை மட்டுப்படுத்தல்.

வேட்புமனுத் தாக்கல் தினத்திலிருந்து ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டு ஒரு வாரம் கழியும் வரை கட்சி / வேட்பாளர் ஊக்குவிப்புக்காக வாகன பவனிகள், மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கர வண்டி சவாரிகள் அல்லது பொதுமக்கள் ஊர்வலங்கள் என்பவற்றை மேற்கொள்ளல் முற்றிலும் தடையாகும். அத்தகைய ஊர்வலங்களைத் தவிர்ப்பதற்கும் அச்சட்டங்களை மீறுகின்றவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் ஆவன செய்யுமாறு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் பொலிஸ்மா அதிபரினால் வழங்கப்பட்டுள்ளன.

04. வேட்பாளரின் உருவப்படம், தேர்தல் சின்னங்கள் அல்லது வேறேதேனும் குறியீடு அல்லது வாக்கியம் அல்லது சித்திரம் ஒன்றைப் பயன்படுத்தி மேற்குறித்த விதத்திலான கட்சி / வேட்பாளர் ஊக்குவிப்புக்கான சட்ட முரணான காட்சிப்படுத்தலை மேற்கொள்கின்றவர்கள் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படத்தக்க தவறொன்றை இழைக்கின்றனரெனவும் அத்தகைய அனுமதியற்ற காட்சிப்படுத்தல்களை அகற்றுமாறு பொலிஸ் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதாகவும் தயவன்புடன் அறியத் தவருவதோடு, இத்தகைய அனுமதியற்ற காட்சிப்படுத்தல்களூடாக கட்சி / வேட்பாளர் ஊக்குவிப்புச் செயன்முறைகளை மேற்கொள்கின்றவர்கள் சட்டமீறல், நியாயப்படுத்தல் என்பவற்றினூடாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்குத் தேவையான சிறந்த சூழ்நிலையொன்றைப் பேணுவதற்கு இடையூறு விளைவிக்கின்ற நபர்களெனக் கருதப்பட வேண்டுமெனவும் மேலும் அறிவித்துக் கொள்கின்றேன்.

05. மேலும் இத்தகைய சட்டமுரணான செயல்கள் காரணமாக தேர்தல் தொடர்பாக மக்களின் நம்பிக்கை அற்றுப் போவதற்குள்ள சாத்தியப்பாட்டை முற்றாக நீக்குவதற்காக இத்தகைய அனுமதி பெறப்படாத காட்சிப்படுத்தல்களை உடனடியாகத் தத்தம் ஆதரவாளர்களின் மூலம் அகற்றிக் கொள்ள நடவடிக்கையெடுக்குமாறு அனைத்து முன்னணி அரசியல் தலைவர்களுக்கு ஏற்கனவே என்னால் அறிவிக்கப்பட்டுள்ளதோடு, அனைத்து சிறந்த அரசியல் தலைவர்களும், சட்டத்தை மதிக்கும் அரசியல் தொழிற்பாட்டாளர்களும் இத்தகைய பிரசாரப் பலகைகளை உடனடியாக அகற்றிக் கொள்வரென வினயமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

06. தேர்தல் சட்டங்களை வலுவாக்கம் செய்வதற்காகவும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடத்துவதற்காகவும் அனைத்து அரசியல்வாதிகளினதும், பிரஜைகளினதும் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். ஆதலால், அதற்காக தமது பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு அக்கறையுள்ள அனைத்துத் தரப்பினரிடமும் பிரஜைகளிடமும் தயவன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

**மஹிந்த தேசப்பிரிய,**
**தேர்தல்கள் ஆணையாளர்.**

குறிப்பு:

1. மேற்குறிப்பிடப்பட்ட விதத்திலோ அல்லது வேறு விதத்திலோ நிகழ்கின்ற தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக மாவட்ட செயலகத்தில் அல்லது கச்சேரியில் / மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள தேர்தல் முறைப்பாட்டு இணைப்பு நிலையத்திற்கும், தேர்தல்கள் செயலகத்தின் தேர்தல்கள் முறைப்பாட்டு விசாரணை மத்திய நிலைத்திற்கும், உரிய பொலிஸ் நிலையங்களுக்கும், மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அலுவலர்களுக்கும், பொலிஸ் தலைமையகத்திற்கும் கூட முறைப்பாடுகளைச் செய்யலாம்.
2. 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தலோடு தொடர்புடைய தவறுகள், ஊழல் பழக்கங்கள் தொடர்பான பிரிவுகள் தேர்தல்கள் திணைக்களத்தின் இணையத்தளமான www.slelections.gov.lk இல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**அந்தந்த மாவட்டத்துக்குரிய முன்மொழிவுகள் / கருத்துக்கள் / முறைப்பாடுகளை அந்தந்த மாவட்டத்தின் முறைப்பாட்டு விசாரணை நிலையங்களுக்கு அல்லது தேசிய தேர்தல் முறைப்பாட்டு நிலையத்துக்கு சமர்ப்பிப்பதற்கான தொலைபேசி மற்றும் தொலை நகல் இலக்கங்கள்.**

தேசிய தேர்தல் முறைப்பாட்டு விசாரணை நிலையம், தேர்தல்கள் செயலகம்

| தொலைபேசி | தொலைநகல் |
|---|---|
| 011-2877636/011-2877643 | 011-2877626/011-2877644 |

பொலிஸ் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவு, தேர்தல்கள் செயலகம்

| தொலைபேசி | தொலைநகல் |
|---|---|
| 011-2877625/011-2877635/011-2877648 | 011-2877624/011-2877637/011-2877650 |

| மாவட்ட முறைப்பாட்டு விசாரணை நிலையங்கள் | தொலைபேசி | தொலைநகல் |
|---|---|---|
| மாவட்டச் செயலகம், கொழும்பு | 0113883149 | 0112369142 |
| மாவட்டச் செயலகம், கம்பஹ | 0333341263 | 0332222272 |
| மாவட்டச் செயலகம், களுத்துறை | 0343747009 | 0342221522 |
| மாவட்டச் செயலகம், கண்டி | 0812236762 | 0812236762 |
| மாவட்டச் செயலகம், மாத்தளை | 0662226673 | 0662222413 |
| மாவட்டச் செயலகம், நுவரெலியா | 0523056984 | 0522222648 |
| மாவட்டச் செயலகம், காலி | 0913099018 | 0912226018 |
| மாவட்டச் செயலகம், மாத்தறை | 0413041800 | 0412222435 |
| மாவட்டச் செயலகம், அம்பாந்தோட்டை | 0473470108 | 0477225601 |
| மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் | 0213207443 | 0212228002 |
| மாவட்டச் செயலகம், கிளிநொச்சி | 0212283830 | 0212060818 |
| மாவட்டச் செயலகம், மன்னார் | 0232222203 | 0232223232 |
| மாவட்டச் செயலகம், வவுனியா | 0242222311 | 0242220793 |
| மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு | 0213204354 | 0212290037 |
| மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு | 0653065298 | 0652226874 |
| மாவட்டச் செயலகம், அம்பாறை | 0632223553 | 0632223553 |
| மாவட்டச் செயலகம், திருகோணமலை | 0263207171 | 0262050848 |
| மாவட்டச் செயலகம், குருநாகல் | 0373611203 | 0372224976 |
| மாவட்டச் செயலகம், புத்தளம் | 0323021059 | 0322265934 |
| மாவட்டச் செயலகம், அநுராதபுரம் | 0252224227 | 0252224227 |
| மாவட்டச் செயலகம், பொலனறுவை | 0272226217 | 0272226217 |
| மாவட்டச் செயலகம், பதுளை | 0552224414 | 0552224414 |
| மாவட்டச் செயலகம், மொனறாகலை | 0553593884 | 0552276245 |
| மாவட்டச் செயலகம், இரத்தினபுரி | 0452222236 | 0452222236 |
| மாவட்டச் செயலகம், கேகாலை | 0355223189 | 0352231659 |

| | | | |
|---|---|---|---|
| தேர்தல்கள் ஆணையாளர் | 0112868444 | 0112868445 | மின்அஞ்சல் |
| மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் | 0112868447 | 0112868368 | comelesl@sltnet.lk |
| மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் | 0112868446 | 0112868367 | |
| மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் | 0112868448 | 0112868448 | selection.gov.lk இணையத்தளத்தில் உட்பிரவேசித்து Tell commissioner ஊடாக அறிவிக்க முடியும். |



இந்தப் பருவகாலங்களில்
உங்கள் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்
NIPPON
அதிஉயர் வலுவுள்ள LED மின்குமிழ்கள்
18 மாத உத்தரவாதம்
நிப்போன் LED மின்குமிழ்களை பாவித்து
உங்கள் மின்சார கட்டணத்தை
90% ஆல் குறையுங்கள்
NIPPON
LED
12W LED
Ball Lamp
DISCOUNT FOR TRADE
• Lifespan - 50,000 மணித்தியாலங்கள்
• உயர்தர பிகாசமானது
• உயர் வெப்ப உருகுநிலை தொழில்நுட்பம்
• சரியான மின்னாற்றல் கொண்டது
3W - Rs 250/=
5W - Rs 380/=
7W - Rs 440/=
9W - Rs 530/=
12W - Rs 640/=
NIPPON
500W (1.5L) RS 2150/=
700W (1.8L) RS 2390/=
900W (2.2L) RS 2590/=
1100W (2.8L) RS 2900/=
1600W (4L) RS 5290/=
NPN-10SS
RS 3890/=
NPN-21TC
RS 3790/=
NPN-1010
RS 1620/=
NPN-10
RS 2440/=
NPN-24
RS 2290/=
NPN-2404
RS 1360/=
NPN-1031
RS 1590/=
NPN-110
RS 1390/=
NPN-WTRPRFR
(16L AND 21L)
16L- RS 2970/=
21L- RS 3690/=
NPN-2815
RS 2590/=
NPN-232
RS 4750/=
NPN-603CMPCT
RS 2960/=
NPN-505
RS 1690/=
NPN-505B
RS 2490/=
NPN-912
RS 990/=
NPN-MOSTRAP
RS 2930/=
NPN-0102 8 WAY
RS 1950/=
NPN-500
RS 790/=
NPN-5252
RS 990/=
NPN-104
RS 340/=
NPN-105
RS 365/=
NPN-107
RS 400/=
NPN-109
RS 510/=
NPN-110
RS 510/=
NPN-112
RS 550/=
NPN-810
RS 790/=
NPN-6033
RS 740/=
NPN-65
RS 2590/=
NPN-100
RS 2090/=
NPN-127
RS 2550/=
NPN-220A
RS 5600/=
NPN-520
RS 7990/=
NPN-560
RS 1620/=
NPN-710B
2040/=
NPN-710PL
RS 2060/=
NPN-2131
RS 1990/=
NPN-DUAL21
RS 2550/=
NPN-5221
RS 2230/=
LANKA NIPPON
#18 Keyzer Street, Colombo 11
Tel: 2437735, 5230975 Fax: 2437687
info@lankanippon.com | lankanippon.com
இந்த விலைக் கழிவு
31.12.2014 வரை

## டோகா-கட்டாரில் முதல் தர கம்பனியில் உடனடி வேலை வாய்ப்பு

| தொழில் வகை | எண் | சம்பளம் | |
|---|---|---|---|
| | | QR | SLR |
| பாதுகாப்பு சேவை உத்தியோகத்தர் | 193 | 1000 | 36,000/= |

எதிர்வரும் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் குருநாகலில் உள்ள புரடென்சியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் வெளிநாட்டு அதிபர்களால் நேர்முகத்தேர்வு நடத்தப்படுகிறது.

Ad Approval No. AL/2769/Advt 50/14

| போக்குவரத்து கம்பனியில் தொழில் வகை | எண் | சம்பளம் | SLR |
|---|---|---|---|
| பாரஊர்தி சாரதி (Heavy Vehicle) | 21 | 1700 | 61,000/= |
| இலகு ரக வாகன சாரதி (Light Vehicle) | 18 | 1400 | 50,400/= |
| பாரமேற்றி இயந்திர ஒப்பரேட்டர் (Wheel Loader) | 25 | 1800 | 64,300/= |
| அகழ்வு இயந்திர ஒப்பரேடர் (Excavator) | 23 | 2100 | 75,400/= |

எதிர்வரும் 27 ஆம் திகதி வெளிநாட்டு அதிபர்களால் குருநாகல் புரடென்சல் முகவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் நேர் முகத்தேர்வு நடத்தப்படுகிறது.

Ad Approval No. AL/2769/Advt 41/14

**நிபந்தனைகள்:** இரண்டு வருடகால ஒப்பந்தம், தங்குமிடம், மருத்துவம் இலவசம், உணவு கொடுப்பனவு, 200 QR, ஒரு நாளில் 8 மணித்தியாலம், வாரத்தில் 6 நாள்கள் வேலை இருவழி விமான பயணச்சீட்டு இலவசம் (55062)(4.3.6)

SLBFE இனால் அங்கீகரிக்கப்பட்ட 100,000 ரூபா கட்டணம் மட்டுமே. மற்றயவை எல்லாம் டோகா-கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு அமைவாக. 1QR=36/=

தொடர்புகளுக்கு: Visit Our Web : WWW.Prudentailagency.lk

Prudential Foreign Employment Agency (Pvt) LTD
No 72/1,2nd Floor, Colombo Road, Kurunegala.
Call Now : 077 457 4555, 037 494 5555





## சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

திருமதி இராசேஸ்வரி திருஞானசிவம் -அதிபர்

Congratulation

(S.L.T.S.I, S.L.P.S. 2. II)


**சேவை விவரம்**

01.தி/பேராற்று வெளி முஸ்லிம் ம.வி 08.11.1976-30.09.1978
02.மன்/ஊற்றுவாயன்குளம் R.C.T.M.S 01.10.1978-01.08.1979
03.பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி 02.08.1979-31.12.1981
04.மு/வித்தியானந்தா கல்லூரி 01.01.1982-14.03.1985
05.யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி 15.03.1985-14.05.1991
06.யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி 15.05.1991 - 02.01.1994
07.யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித். 03.01.1994-31.01.1997
08.யா/கைதடி முத்துக்குமாரசுவாமி வித். 01.02.1997-21.01.2003
09.யா/கைதடி சேதுகாவலர் வித்தி. 22.01.2003-18.12.2014

26 வருடங்கள் கணிதபாட ஆசிரியசேவையையும், 12 வருடங்கள் அதிபர் சேவையையும் (38 வருடங்கள்) ஆற்றி இன்று (19.12.2014) வெள்ளிக்கிழமை 60 ஆவது அகவையில் ஓய்வுபெறும் தங்களையும், தங்கள் குடும்பத்தினரையும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

(சி/18273)(4.3.6)

பாடசாலைச்சமூகம், பழைய மாணவர்கள்.
யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்.

## ஐந்தாவது அகவையில் (ANGRY BIRDS) அங்கிரி பேர்ட்ஸ்

பேஸ்புக்கில் ஆரம்பித்து மொபைல் சாதன அப்பிளிக்கேஷன் ஊடாக பட்டி தொட்டியெங்கும் கலக்கிவரும் விளையாட்டாக Angry Birds விளங்குகின்றது. இந்த விளையாட்டு அறிமுகம் செய்யப்பட்டு ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டன. அதனைக் கொண்டாடும் முகமாக இந்த விளையாட்டை உருவாக்கிய Rovio நிறுவனம் புதிய நிலைகளை (Level) உட்புகுத்தியுள்ளது.

இதற்கான மேம்படுத்தல் பதிப்பை இலவசமாக தரவிறக்கம் செய்துகொள்ள முடியும். தவிர (iPhone) ஐபோன்களுக்காக 99 டொலர் பெறுமதியிலும், (iPad) ஐபேட்களுக்காக 2.99 டொலர் பெறுமதியிலும் இந்த விளையாட்டை முழுமையாக தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



**தேவை**

யாழ்நகரில் அமைந்துள்ள இலத்திரனியல் வியாபார ஸ்தாபனத்திற்கு வேலைக்கு ஆள்கள் தேவை.

தொ.பே. 077 363 2963, 077 086 3615 (55048)(4.5.3.6.7)



**கிறிஸ்மஸ் திருநாளை முன்னிட்டு**

## மாபெரும் இன்னிசை மாலை

இடம் - மறுமலர்ச்சி மன்றம், காலையடி. பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம்.
நேரம் - தினமும் 4.00 மணிக்கு
காலம் - டிசெம்பர் 20, 21, 22 (சனி, ஞாயிறு, திங்கள்)



பாஸ்டர் S. சந்திரசேகரன்
யூதாவின் செங்கோல் பாடல் குழுவினர் மற்றும் வரம் பெற்ற ஊழியர்கள்

(54948)(3.7.8) தொடர்பு : 077 4912120, 077 9140844



**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்

விஜய், சமந்தா நடிப்பில்




(தினசரி 4 காட்சிகள்) 10.30, 2.30, 6.30, 9.30

எமது செல்லா சினி திரையரங்கில் உங்களது விளம்பரங்களை காட்சிப்படுத்த அழையுங்கள்: 077 326 6949


## உங்கள் போன் அடிக்கடி 'ஹாங்' ஆகுதா?



தற்போதைய உள்ள காலகட்டத்தில் ஸ்மார்ட் போனின் பயன்பாடு பெருமளவில் அதிகரித்துவிட்டது. வாங்கியபோது நன்றாகச் செயற்பட்ட ஸ்மார்ட் போன், சில நாள்கள் கழித்த பிறகு 'ஹாங்' ஆகி பயன்படுத்துபவரின் பொறுமையைச் சோதிக்க ஆரம்பித்துவிடும். இதற்கு என்ன செய்ய வேண்டும் என்று புரியாமல் பலரும் தவிப்பதுண்டு. ஆனால் சில வழிமுறைகளை பின்பற்றினால் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம்.

'ஆன்டிராய்ட்' போன் 'ஹாங்' ஆகிறதா?

1. முதலில் உங்கள் போனை சார்ஜரில் போடுங்கள். அதன் பின் அடுத்து வரும் வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்.
2. பவர் பட்டனைப் பயன்படுத்தி உங்கள் போனை ஸ்விட்ச் ஓப் செய்யுங்கள். ஒரு வேளை ஸ்விட்ச் ஓவ் ஆகவில்லை என்றால் அடுத்த முறையை பின்பற்றுங்கள்.
3. பவர் பட்டன் மூலம் உங்கள் போன் ஓவ் ஆகவில்லை என்றால் தொடர்ந்து பத்து நொடிகளுக்கு பவர் மற்றும் வால்யூம் பட்டன்களை அழுத்துங்கள்.
4. உங்களால் போனை ரீஸ்டார்ட் செய்ய முடியாவிட்டால் போனின் பற்றரியைக் கழற்றி விடுங்கள்.
5. உங்கள் போனில் அதிக மெமரியை பயன்படுத்தும் அப்ளிகேஷன்களை செய்து விடுங்கள்.
6. போன் அடிக்கடி ஹாங் ஆனால் பேக்ட்ரி ரீசெட் கொடுங்கள். இது உங்கள் போனின் பிரச்சினைகளை சரி செய்து விடும். ஆனால் இதை மேற்கொண்டவுடன் உங்கள் போனில் இருக்கும் அனைத்து தகவல்களும் அழிந்துவிடும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.


**இப்பொழுது திரையில்**




Majestic காம்பிளக்ஸ்
Cineplex Jaffna ஸ்க்ரீன்வேயார்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com



## வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதி காரியாலய திறப்பு விழா அழைப்பு



சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட பிரதான அமைப்பாளர் கௌரவ அங்கஜன் இராமநாதன் தலைமையில் வட்டுக் கோட்டை காரியாலயம் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. எனவே அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்கவும்.



காலம்: 19.12.2014 (வெள்ளிக்கிழமை)
இடம்: பிரதானவீதி, சங்கானை (கூடத்து அம்மன் ஆலயம் முன்பாக)
நேரம்: மாலை 4.30

(55056)(4.3.6) இ.அங்கஜன்

# உலகச் செய்திகள்



## ஜி.எஸ்.எல்.வி எம்கே–3 ரொக்கெட் இந்திய சோதனை வெற்றி

மனிதன் பயணிப்பதற்காக உருவாக்கப்பட்ட மாதிரி விண்கலத்துடன் அடுத்த தலைமுறைக்கான ஜி.எஸ்.எல்.வி எம்கே–3 ரொக்கெட் சோதனை முயற்சி வெற்றி அடைந்துள்ளது. இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் இஸ்ரோ விண்ணுக்கு மனிதர்களை அனுப்பி ஆய்வு செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளது. நேற்று அதன் முதல் கட்டமாக, அதிக நிறை கொண்ட மனிதன் பயணிப்பதற்கான மாதிரி விண்கலம் ஜி.எஸ்.எல்.வி எம்கே–3 ரொக்கெட் மூலம் ஏவப்பட்டது. அந்த விண்கலம் பூமியிலிருந்து 126 கி.மீற்றர் உயரத்துக்குச் சென்று 19 நிமிடத்தில் அந்தமான் கடல் அருகே கடலில் வீழ்ந்துள்ளது. கடலில் இருந்து மீட்கப்படும் அந்த விண்கலம் ஆய்வுக்குட்படுத்தப்படும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது. (ஒ–ரி)

## ஜெயலலிதாவின் பிணை நீடிப்பு

### உச்ச நீதிமன்றம் உத்தரவு

டில்லி, டிசெ.19

சொத்து குவிப்பு வழக்கில் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டு பிணையில் வெளியே வந்துள்ள தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிணையை மேலும் 4 மாதங்களுக்கு நீடிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கில் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்று பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்ட ஜெயலலிதா உள்ளிட்ட நான்கு பேருக்கும் உச்ச நீதிமன்றம் பிணை வழங்கியது.

இது குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது, ஜெயலலிதா மற்றும் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோரது பிணைக்காலத்தை உச்சநீதிமன்றம் மேலும் 4 மாதங்களுக்கு நீடிக்க உத்தரவிட்டுள்ளது. (ஒ–ரி)



## பாகிஸ்தானில் மீண்டும் வருகிறது சாவுத் தண்டனை

இஸ்லாமாபாத், டிசெ.19

பாகிஸ்தானில் முன்னர் சாவுத் தண்டனைக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த தடை மீண்டும் மாற்றம் பெற்று சாவுத் தண்டனை நடைமுறைக்கு வருகிறது என பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்தார். பெஷாவரில் நேற்று முன்தினம் அனைத்து கட்சி மாநாட்டை கூட்டி ஆலோசனை நடத்திய அவர் தெரிவித்ததாவது:

சர்வதேச நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் 2008ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட சாவுத் தண்டனை மீதான தடை நீக்கப்பட்டு தற்பொழுது மீண்டும் அது நடைமுறைக்கு வருகிறது எனத் தெரிவித்தார். (ஒ–ரி)

## ஒரே புதைகுழியில் 230 பேர் சிரியாவில் ஐ.எஸ். மூர்க்கம்

சிரியாவில் ஐ.எஸ். இயக்கத்தினரால் கொல்லப்பட்ட 230 பேரின் உடல் ஒரே இடத்தில் புதைக்கப்பட்டிருப்பதை அங்குள்ள கண்காணிப்புக்குழு கண்டறிந்துள்ளது. ஈராக் மற்றும் சிரியாவில் ஆக்கிரமிப்பு செய்துவரும் ஐ. எஸ். இயக்கத்தினர் சன்னி பிரிவினரின் தலைமையிலான தனி இஸ்லாமிய நாடு அமைக்கும் நோக்கத்தோடு ஷியா பிரிவு மக்களை நோக்கித் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில்சிரியாவில் போர் சூழல் குறித்து



கண்காணித்து வரும் ஐ.நா. மனித உரிமை ஆணையம் சிரியாவின்கிழக்கேஉள்ளஅல்–காஷ்யாவில்சுமார் 230பேரின்உடல்கள் குவியலாகபுதைக்கப்பட்டிருப்பதை அங்குள்ள பழங்குடியினமக்கள் கண்டுபிடித்துள்ளதாக அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

மேலும், ஷியா பிரிவைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பழங்குடியின மக்கள் மாயமாகி உள்ளதாகவும் அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.ஈராக்கின் வடக்கே ஸ்வாத் மற்றும் கிழக்கு சிரியா பகுதிகள் பலவற்றை ஐ.எஸ். அமைப்பினர் தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். (ஒ–ரி)

## வட இந்தியாவில் கடுங்குளிர்: 30 பேர் சாவு

டில்லி, டிசெ.19

இந்தியாவின் வடக்குப் பகுதி மாநிலங்களான காஷ்மீர், இமாச்சல்,உத்தர்காண்ட்போன்ற இடங்களில் கடுமையான குளிர் நிலவுகிறது. வட இந்திய மாநிலங்களில் குளிரால் சுமார் 30 பேர் வரை சாவடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. காஷ்மீரின் பல பகுதிகளில் குளிர் நிலை மைனஸ் டிகிரியை அடைந்துவிட்ட நிலையில், உத்தர்காண்ட், உத்தரப்பிரதேசம் போன்ற இடங்களில் வெப்பநிலை 6.6 என்ற அளவில் நிலவுகிறது. காலை வேளைகளில் கடுமையான பனிமூட்டம் நிலவுவதால் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. சில மாநிலங்களில் இரவு நேரங்களில் வெப்பநிலை 5 டிகிரிக்கும் குறைவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (ஒ–ரி)

## திருமணம் செய்ய மறுத்த பெண்கள் ஈராக்கில் கொலை

### ஐ.எஸ்.ஐ.எஸ். படுபாதகச் செயல்

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை திருமணம் செய்ய மறுத்த 150 பெண்கள், தலைதுண்டிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளை கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் தொடர்ந்து பல அட்டூழியங்களை அரங்கேற்றி வருகின்றனர். இந்த நிலையில் தங்களது இயக்கத்தில் உள்ள பெண்களை புனித திருமணம் செய்ய வேண்டும் என தீவிரவாதிகள் கட்டாயப்படுத்தியுள்ளனர்.

இதற்கு ஒப்புக்கொள்ளாத 150 பெண்களை ஈராக்கில் உள்ள அல்–அன்பர் மாகாணத்தில் வைத்து கொடூரமாக அவர்களது தலைகளைத் துண்டித்துப் படுகொலை செய்துள்ளதாக, அந்நாட்டின் மனித உரிமை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தப் படுகொலையில் கர்ப்பிணிகளும் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் கொலை செய்த அனைவரையும் ஒரே இடத்தில் தீவிரவாதிகள் புதைத்துள்ளதாகவும் தெரிய வருகிறது. (ஒ–ரி)

## சேர்ச்சிலின் ஓவியங்கள் 17 கோடி பவுண்ஸுக்கு ஏலம்


இங்கிலாந்து முன்னாள் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சிலின் ஓவியங்கள் நேற்று ஏலத்துக்கு வந்தது. அந்த ஓவியங்களை இங்கிலாந்தைச் சேர்ந்த ஒருவர் 17 கோடி ஸ்ரேலிங் பவுண்ஸுக்கு ஏலத்தில் எடுத்தார்.

இரண்டாம் உலகப்போர் சமயத்தில் இங்கிலாந்தில் பிரதமராக இருந்தவர் வின்ஸ்டன் சேர்ச்சில். இவர் 1874ஆம் ஆண்டில் சாதாரண குடும்பத்தில் பிறந்து, ராணுவத்தில் சேர்ந்து பின்னர் அரசியலுக்கு வந்தார். 1940 முதல் 1945ஆம் ஆண்டு வரை 2 முறை இங்கிலாந்து பிரதமராகப் பணியாற்றினார். அப்போது நடைபெற்ற இரண்டாம் உலகப் போரில் முக்கிய அங்கம் வகித்தார்.

சர்வதேச அளவில் வாயில் சுருட்டை வைத்தபடியே கம்பீரமாக வலம் வந்து, அனைவரும் போற்றும் கதாநாயகனாக திகழ்ந்தார். 1965ஆம் ஆண்டு காலமானார்.



ராணுவத்தில் பணியாற்றிய காலத்தில் பல்வேறு ஓவியங்களை வரைந்தார். அவரது ஓவியங்களை அவரது மகள் மேரி சோம்ஸ் சேகரித்து வைத்திருந்தார். இந்த ஓவியங்களை லண்டனில் உள்ள சோத்பே நிறுவனம் நேற்று ஏலம் விட்டது. இதில் ஏராளமான செல்வந்தர் கள் கலந்து கொண்டனர். சர்ச்சிலின் 15 ஓவியங்களும் 17 கோடி பவுண்ஸுக்கு ஏலம் போனமை குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)





## செவ்வாயில் மெதேன்வாயு

செவ்வாய்க் கிரகத்தில், உயிரி னங்கள் வாழ்வதற்கான சாத் தியக்கூறுகள் பற்றி ஆராய்வதற் காக, அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு நிறுவனம் அனுப்பிய மார்ஸ்க்யூரியோ என்ற ரோபோட் கருவி, செவ் வாய் கிரகத்தின் மேற்பரப்பில் கடந்த 2 ஆண்டுகளாக ஆய்வு மேற்கொண்டு வருகிறது. இந்தக் கருவி அனுப்பியுள்ள ஆதாரங் களின்படி, பூமியில் காணப்படு வதைப்போல செவ்வாய் கிரகப் பகுதியில் மெதேன் வாயுக்கள் அடிக்கடி வெளிப்படுவதாகவும், மேலும் செவ்வாய்க்கிரக மேற் பரப்பில் ஆர்கானிக்கெமிக்கல்ஸ் இருப்பதை நாசாவின் ஆய்வுக் கருவி கண்டுபிடித்திருப்பதாகவும் நாசாவிஞ்ஞானிகள்தெரிவித்துள் ளனர். இதனால் செவ்வாய்கிரகத்தில் முன்பு உயிரினங்கள் வாழ்ந் திருக்கக்கூடும்எனநாசாநிறுவனம் தெரிவித்துள்ளது. (ஒ – ரி)

# மீண்டும் மலர்கிறது அமெ. - கியூப உறவு

வொஷிங்டன், டிசெ.19

அமெரிக்காவும் கியூபாவும் தமது இராஜதந்திர உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ள வழிசெய்யும் முகமாக பேச்சு களை ஆரம்பிக்கவுள்ளன.

கடந்த ஐம்பது வருடங்களாக இரு நாடுகளுக்கும் இடையே இராஜதந்திர உறவுகள் இல்லாத நிலையே நிலவி வருகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக கியூபாவின்சிறைச்சாலையொன் றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அமெரிக்க அரசின் ஒப்பந்ததார ரான ஆலன் கிராஸ் விடுவிக் கப்பட்டதையடுத்து அமெரிக்கா கியூபாவுடனான தனது இரா ஜதந்திர உறவுகளை புதுப்பிப் பதற்கான பேச்சை ஆரம்பிக்க வுள்ளதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பான முறைப்படி யான அறிவிப்பை அமெரிக்க அதிபர் ஒபாமாவும், கியூபாத் தலைவர் ரவுல் காஸ்ட்ரோவும் வெளியிட்டுள்ளனர். கிராஸ் விடுதலை செய்யப்பட்டுள்ளதை அடுத்து, தமது நாட் டில் சிறை வைக்கப்பட்டுள்ள மூன்று கியூபா நாட்டுப் பிரஜைகள் விடுவிக்கப் படுவார்கள் என்று அமெரிக்கச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இருநாடுகளுக்கும் இடையே யான உறவுகள் மீண்டும் புதுப் பிக்கப்படவுள்ளதாக அறிவிக் கப்பட்டதையடுத்து, கியூபா வின் தலைநகர் ஹவானாவில் அமெரிக்கத் தூதரகம் அடுத்த சில மாதங்களில் திறக்கப்படும் என்று வொஷிங்டன் அறிவித் துள்ளது.

அதேபோல பயணம் மற்றும் வர்த்தகத் தடைகளும் தளர்த் தப்படவுள்ளதாகவும் அமெ ரிக்கா அறிவித்துள்ளது.

ஜனநாயகத்தைக் கொண்டு வரும் நோக்கில் பல ஆண்டு களாக, கம்யூனிஸ நாடான கியூபாவைத் தனிமைப்படுத்தி வைக்கும் தனது இலட்சியம் எதிர்பார்க்கப்பட்டவாறு பயன் ளிக்கவில்லைஎனவும்வெள்ளை மாளிகைவெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ஒ – ரி)

## ஒடிசாவில் நக்ஸலைட் முகாம்கள் அழிப்பு

வொஷிங்டன், டிசெ. 19

காலஹண்டி மாவட்டம் தெலன் வனப் பகுதியில் நக்ஸலைட் டுக்களது 4 முகாம்களை பாது காப்புப் படையினர் தகர்த்து அழித்துள்ளனர்.

அங்கிருந்து, துப்பாக்கிக் குண் டுகள், நக்ஸல் இயக்கப் புத் தகங்கள், சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்க உதவும் சாதனங்கள், சீருடைகள், ரேடியோ சாதனங்கள் ஆகிய வற்றையும் பாதுகாப்புப் படை யினர் கைப்பற்றியுள்ளனர்.

முகாம்களைத் தகர்ப்பதற்கு முன்னர் நக்ஸலைட் தீவிர வாதிகளுக்கும், பொலிஸாருக் கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடந்துள்ளது.

எனினும் இரு தரப்புகளிலும் எவரும் உயிரிழந்ததாக உறுதி யான தகவல்களில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ – ரி)

# பாகிஸ்தான் குண்டுவீச்சு 57 தீவிரவாதிகள் சாவு

## பெஷாவர் பாடசாலைத் தாக்குதலுக்கு பதிலடி

இஸ்லாமபாத், டிசெ. 19

பெஷாவர் பாடசாலையில் நடத் தப்பட்ட கொடூர தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் பாகிஸ்தான் நடத்திய வான்வழி தாக்குதலில் 57 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பெஷாவர் ராணுவ பாடசாலையில் தலி பன் தீவிவாதிகள் நடத்திய கண் மூடித்தனமான தாக்குதலில் 132 குழந்தைகள் உட்பட 148 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்கு தலுக்கு உலகம் முழுவதும் கண்டனம் எழுந்துள்ள நிலை யில் தீவிரவாதிகளை ஒழிப்பதற் கான நடவடிக்கை தீவிரப்படுத் தப்படும் என பாகிஸ்தான் பிரத மர் நவாப் ஷெரீப் அறிவித்தார்.



கைபர் மாவட்டத்தின் பாரா பகுதியில் மனித வெடிகுண்டுத் தாக்குதல் பயிற்சி பெற்ற தீவிர வாதிகளேபெஷாவர்பாடசாலை யில் தாக்குதல் நடத்தியது தெரி யவந்ததை அடுத்தே அப்பகுதி யில் தேடுதல் வேட்டை தீவிரப் படுத்தப்பட்டது தீவிரவாதிகள் மனித வெடிகுண்டுத் தாக்கு வதலுக்காகப் பயிற்சி பெரும் கைபர் பழங்குடியினர் பகுதி யில் பாகிஸ்தான் ராணுவம் அதிர டியாக வான்வழி தாக்குதலை யும் நடத்தியது.

இதில் 57 தீவிர வாதிகள் கொல் லப்பட்டதாகவும் தீவிரவாதிக ளுக்கு எதிரான நடவடிக்கை தொடரும் என்றும் பாகிஸ்தான் இராணுவம் தெரி வித்துள்ளது. (ஒ–ரி)

## இங்கிலாந்து திருச்சபையின் முதல் பெண் ஆயர்

இங்கிலாந்து திருச்சபை தனது முதல் பெண் ஆய்ரை நியமித் துள்ளது. வணக்கத்துக்குரிய லிப்பி லேன், ஸ்டாக்பார்ட் ஆய ராகவும் பொறுப்பேற்கவுள்ளார்.

பல நூற்றாண்டுகளாக ஆண்கள் மட்டுமே சேவையாற்ற முடியும் என்ற நடைமுறை இங்கிலாந் தின் அங்கிலிக்கன் திருச்சபை யில் கடைப்பிடிக்கப்பட்டு வந் துள்ளது. இங்கிலாந்தில் முதல் முறையாக 1994 ஆம் ஆண்டு பெண்கள் மதகுருமார்களாக நியமிக்கப் பட்டனர்.

அமெரிக்கா, தென்னாபிரிக்கா உட்பட பல நாடுகளில் செயற் படும் அங்கிலிக்கன் திருச்சபை களில் பெண்கள் ஆயர்களாக நியமிக்கப்பட்டு பொறுப்பேற் பதற்கு ஏற்கனவே அனுமதி அளிக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஒ – ரி)



## மனித வெடிகுண்டுத் தாக்குதல் ஆப்கானிஸ்தானில் 10 பேர் சாவு

காபூல், டிசெ.19

ஆப்கானிஸ்தானில், வங்கியொன்றில் தலிபான் தீவிரவாதிகள் மேற் கொண்ட மனிதவெடிகுண்டுத் தாக்குதலில் 3 பொலிஸார் உட்பட 10 பேர் உயிரிழந்தனர். அந்த நாட்டின் ஹெல்மண்ட் மாகாணத் தலைநகர் லஷ்கர் கா நகரிலுள்ள நியூ காபூல் வங்கிக் கிளையில் ஐந்து தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்

சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த பாதுகாப்புப் படையினருடன் அவர்கள் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டனர். இந்தத் தாக்குதலில் 3 பொலிஸார் உட்பட 10 பேர் உயிரிழந்ததாகவும், 6 பாதுகாப்புப் படை வீரர்கள் உட்பட 15 பேர் காயமடைந்ததாகவும் ஹெல்மண்ட் மாகாண ஆளுநரின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (ஒ – ரி)

# ஹமாஸ் மீதான தடையும் நீக்கம்: ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் தீர்ப்பு

லக்ஸம்பர்க், டிசெ. 19

ஐரோப்பிய ஒன்றியத்தின் தீவிர வாத அமைப்புகள் பட்டிய லிலிருந்து பாலஸ்தீனத்தைச் சேர்ந்த ஹமாஸ் அமைப்பை ஐரோப்பிய ஒன்றிய நீதி மன் றம் நேற்று முன்தினம் நீக்கி யுள்ளது.

இதுகுறித்து ஐரோப்பிய ஒன் றிய நீதிமன்றம் தீர்ப்பில் கூறப் பட்டுள்ளதாவது:–

ஊடகங்களிலும், இணையத் தளங்களிலும் வெளியான செய்திகளின் அடிப்படையில் தான் 2001ஆம் ஆண்டு தீவிர வாத அமைப்புகளின் பட்டிய லில் ஹமாஸ் அமைப்பு சேர்க் கப்பட்டது.

ஒரு அமைப்பை தீவிரவாதப் பட்டியலில் சேர்ப்பதற்குரிய சட் டப்பூர்வமான அணுகுமுறை கள் கடைப்பிடிக்கப்படவில்லை. தற்போதைய விதிமுறைகளின் அடிப்படையில்தான் அந்தப் பட்டியலிலிருந்து ஹமாஸ் அமைப்பின் பெயர் நீக்கப்படு கிறதே தவிர, ஹமாஸ் ஒரு தீவிரவாத அமைப்பு அல்ல என்பது இந்தத் தீர்ப்பின் பொரு ளல்ல என்றும் தீவிரவாத அமைப்புக்களின் பட்டிய லில் இருந்து ஹமாஸ் நீக்கப்பட்டாலும், அந்த அமைப் பின் சொத்து கள் முடக்கம், 3 மாதங் களுக் குத் தொடரும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றி யம் வேண்டுமா னால் இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீடு செய்யலாம் என்று அந்தத் தீர்ப்பில் குறிப் பிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையும் இதேபோன்று அண்மையில் நீக்கப்பட்டிருந் தது. (ஒ – ரி)



# பல்சுவை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### தகுதிக்கேற்பவே எதிர்பார்ப்புக்கள் அமைய வேண்டும்

பிரபஞ்சம் முழுவதையும் மதிப்பிடுவதற்கான அடிப்படை அளவு நான் அல்ல என்று கொள்வது தான் நமக்கு சிறந்த முதற்பாடமாகும். ஒவ்வொருவரையும் அவரவருடைய எண்ணங்களுக்கு ஏற்றபடியே மதிப்பிடவேண்டும். ஒவ்வொரு மனித இனத்தையும் அதன்தன் அளவுகளுக்கும் இலட்சியங்களுக்கும் ஏற்றபடிதான் மதிப்பிடவேண்டும்.

ஒரு நாட்டின் பழக்கவழக்கங்களை சூழ் நிலையையும் பகுத்தறிவையும் அடிப்படையாகக் கொண்டே மதிப் பிட வேண்டும். ஒவ்வொரு பந்தும் தனக்குத் தகுதியான குழியிலேயே போய்த் தங்குகிறது. ஒருவனுக்கு இன்னொருவனைவிட சிறந்த தகுதி இருக்குமானால் அதனையும் உலகம் கண்டுபிடித்துவிடும். பிரபஞ்சத்தில் நடந்து வரும் ஒழுங்கு முறை காரண்மாக இந்த அதிகத் தகுதி வெளிப்பட்டே தீரும். சுயவனாக ஒரு பணக்காரன் இருக்கலாம். ஆனால் அவனைப் பணக்காரனாக்கிய சில தகுதிகள் அவனிடம் இருக்கவே செய்கின்றன. நாம் பணக்காரன் ஆகவில்லை என்பதற்காக பணக்காரனுடன் சண்டை இடுவதாலோ அவனைக் குறை கூறுவதாலோ எந்தவித பயனும் இல்லை. இப்படிச் செய்வதால் எமது நிலைமை சீர்ப்பட்டு விடாது. விதியின் காரணமாக தனக்கு கிடைத்துள்ள மதிப்புக் குறைந்த சிறு வேலைக்காக குறை கூறுபவன் எதற்குமே குறை கூறும் மனப்பான்மை உள்ளவனாக இருப்பான். எப்பொழுதும் எதற்கும் குறை கூறிக் கொண்டே அவன் துன்பம் நிறைந்த வாழ்க்கையை நடத்துவான். அவன் ஆரம்பிக்கும் ஒவ்வொன்றும் தோல்வியிலேயே முடியும். ஆனால் யார் தனது பங்குக்கு வந்த கடமையை துன்பமாக எண்ணாமல் செய்கிறானோ அவனுக்கு நிச்சயம் ஞான ஒளி உண்டாகும். சிறந்த கடமைகள் தாமாகவே அவனைத் தேடி வரும்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | | | 1 | | | |
| | 6 | | 2 | 3 | 4 | 9 | | |
| | 7 | 4 | 5 | 8 | | 1 | | |
| | | 8 | 3 | 7 | | 6 | | |
| 1 | | 5 | | | | 3 | | 9 |
| | | 7 | | 9 | 5 | 8 | | |
| | | 2 | | 1 | 7 | 4 | 9 | |
| | | 9 | 4 | 2 | 6 | | 3 | |
| | | | 9 | | | | | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 6 | 5 | 9 | 8 | 4 | 1 | 3 |
| 9 | 8 | 3 | 2 | 1 | 4 | 5 | 6 | 7 |
| 1 | 5 | 4 | 3 | 7 | 6 | 9 | 8 | 2 |
| 6 | 1 | 2 | 4 | 3 | 7 | 8 | 9 | 5 |
| 5 | 4 | 8 | 9 | 6 | 2 | 7 | 3 | 1 |
| 3 | 7 | 9 | 1 | 8 | 5 | 2 | 4 | 6 |
| 2 | 6 | 5 | 8 | 4 | 1 | 3 | 7 | 9 |
| 8 | 3 | 1 | 7 | 2 | 9 | 6 | 5 | 4 |
| 4 | 9 | 7 | 6 | 5 | 3 | 1 | 2 | 8 |

## ஞானச்சுடர்



### கோயிலுக்குள் செல்லுமுன் செருப்பைக் கழற்றிப் போடுவது ஏன்?

புண்ணிய கருமங்கள் எல்லாவற்றையும் காலணி அணியாத நிலையில் செய்யவேண்டும் என்று கூறுவதுண்டு. என்றாலும் கோயிலில் நுழையும்போது செருப்பணிதல் ஆகாது என்பது கட்டாயம். சில கோயில்களில் சட்டையும் அணிவது தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் எல்லாக் கோயில்களிலும் செருப்பணிவது கட்டாயமாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தத் தடை காரணமாக சிலர் கோயிலுக்கு வெளியில் நின்று வணங்கிவிட்டுச் செல்வதையும் நாம் காண்கின்றோம். கோயில் சுவர்களுக்குட்பட்ட இடம் தெய்வபூமி என்பதே இந்துமத நம்பிக்கை. இறைவன் வேறெங்கும் நிலைகொள்ளவில்லை என்று இதற்கு அர்த்தம் கொள்ள வேண்டாம். செருப்பைக் களைந்து கோயிலுக்குள் நுழையும் பக்தரின் பாதங்கள் இயல்பாகவே காந்த சக்தியுடைய தரையில் பதிகின்றன. மனிதனின் உடல் நலத்துக்கு உத்தமமானதெனக் கண்டறிந்துள்ள பூமியின் காந்த சக்தியின் ஒழுக்கு, பாதம் தரையில் பதியும் போது உடலுக்குள் செலுத்தப்படுகின்றது. அதுமட்டுமல்ல மூலிகைகளுடைய மலர்களும் இலைகளும் கலந்த தண்ணீர் விழுந்த பூமியானதால், கோயில் சுற்றுமுள்ள மண்ணுக்கு மருத்துவக் குணங்களும் இருக்கலாம். இவற்றையெல்லாம் மனதில் கொண்டு கர்வத்தையும் காலணியையும் களைந்து இறை தரிசனம் செய்யும்போது நவீன சாஸ்திரம் விவரிக்கின்ற "மாக்னடிக் தெரபி" அல்லது காந்த சிகிச்சை நம்முள் நடக்கின்றது.

இஷ்ட தெய்வத்தை நினைத்து தியானித்து வெகுநேரத்தைக் கோயிலில் செலவழிக்கும் போது மனதுக்கும் உடலுக்கும் ஒருசேர நன்மைகள் கிடைக்கப் பெறும் என்பதில் சந்தேகம் இல்லை.

## நாளை

மார்கழி-05

சனிக்கிழமை 20.12.2014

திதி: திரயோதசி மு.ப.09.49 வரை

நட்சத்திரம்: அனுஷம்

மு.இ. 09.55 வரை

சுபநேரம்: 3.24-4.54 வரை

இராகுகாலம்: 9.24- 10.54 வரை

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்



| | மருதனார் மடம் | சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | வவுனியா | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கத்தரி | 160 | 140 | 120 | 160 | 140 | 160 | 140 | 120 | 180 |
| கரட் | 170 | 200 | 180 | 200 | 180 | 280 | 220 | 180 | 200 |
| மரவள்ளி | 40 | 40 | 80 | 40 | 40 | 50 | 80 | 15 | 15 |
| பயிற்றை | 180 | 200 | 200 | 180 | 200 | 240 | 200 | 250 | 60 |
| பாகல் | 280 | 300 | 120 | 320 | 300 | 240 | 120 | 250 | 280 |
| கருணைக்கிழங்கு | 45 | 50 | 80 | 60 | 50 | 90 | 90 | 45 | 260 |
| பெ.வெங்காயம் | 90 | 110 | 120 | 110 | 120 | 130 | 100 | 60 | 120 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 120 | 100 | 100 | 60 | 100 | 70 | 120 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 30 | 50 | 60 | 30 | 140 |
| தக்காளி | 180 | 160 | 200 | 180 | 160 | 200 | 120 | 200 | 80 |
| வாழைக்காய் | 80 | 50 | 80 | 80 | 70 | 100 | 80 | 80 | 280 |
| கீரை | 60 | 50 | 50 | 20 | 50 | 50 | 30 | 50 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 40 | – | – | 40 | 30 | 30 | 15 | 50 |
| மிளகாய் | 600 | 500 | 470 | 600 | 600 | 800 | 600 | 450 | 800 |
| புடோல் | 120 | 120 | 160 | 120 | 130 | 120 | 120 | 90 | 160 |
| கோவா | 120 | 120 | 180 | 140 | 130 | 160 | 140 | 120 | 200 |
| வெண்டி | 150 | 160 | 120 | 120 | 140 | 120 | 140 | 90 | 140 |
| போஞ்சி | 120 | 240 | 240 | 180 | 120 | 160 | 220 | 120 | 200 |
| லீக்ஸ் | 250 | 240 | 300 | 300 | 280 | 320 | 200 | 240 | 300 |
| தேங்காய் | 50 | 50 | 45 | 40 | 40 | 45 | 50 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 80 | 80 | 120 | 80 | 120 | 140 | 100 |
| தேசிக்காய் | 100 | 100 | 80 | 80 | 100 | 80 | 130 | 50 | 140 |
| வல்லாரை | 15 | 20 | – | 10 | 40 | 20 | 20 | 15 | 20 |



| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | மாதகல் |
|---|---|---|---|---|
| இறால் | 500 | 500–700 | 700 | – |
| நண்டு | 180 | 350–500 | 250 | – |
| கணவாய் | 400 | 450 | 400 | – |
| பாரை | 450 | 400 | 400 | 350 |
| சுறா | 300 | 500 | 400 | 400 |
| சீலா | 220 | 350 | 300 | – |
| விளை | 450 | 400 | 400 | 370 |
| முரல் | 250 | 300 | 300 | 250 |
| கும்பிளா | 350 | 300 | 250 | 200 |
| கிழாக்கன் | 220 | 500 | – | – |
| ஒரா | 250 | 300 | 250 | – |
| திரளி | 170 | 250 | 200 | – |
| நகரை | 170 | 200 | 150 | – |
| ஊடை | 120 | 100 | – | 100 |
| கலவாய் | 500 | – | – | 350 |

# சோதிடம்




## உங்களுக்கு எப்படி?

## 3 ஆம் திகதி பிறந்தவர்கள்

### 03

சிறந்த சிந்தனையாளர்கள். தங்களுடைய ஆற்றலை ஆக்க ரீதியாகப் பயன்படுத்தி வெற்றி காபார்கள். பொறியியல், கணிதம், விஞ் ஞானம் போன்ற ஏதாவது ஒரு துறையில் வல்லுநர்களாக வருவார்கள். சிறந்த எழுத்தாளராகவும் இருப்பார்கள். கதை, கவிதை போன்றவற்றில் அதிக ஈடுபாடு இருக்கும். 21 வயதுக்கு மேல்தான் நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

### 12

வாழ்க்கையில் தனியாகப் போராடப் பிறந்தவர்கள். தாய், தந்தையின் ஆதரவு குறைவாகவே கிடைக்கும். உறவினர்களால் பயன் இல்லை. பேச்சிலே இணையற்றவர்கள். அதிகாரமாகப் பேசி தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்வார்கள். இவர்களது பெற்றோரின் பொருளாதார நிலையும் பாதிக்கப்படலாம். மற்றவர்களுக்காகவே உழைப்பார்கள். படிப்பு, தொழில் ஆகியவற்றில் இவர்கள் சுயமாகவே போராடி முன்னேறி விடுவார்கள். வறுமையான இளமை வாழ்வைத் தவிர்க்க முடியாது! தங்கள் தகுதியை வளர்த்துக் கொண்டால் நீதிபதிகள், சட்டத்தரணிகள், பேராசிரியர்கள் ஆகிய பெரும் பதவிகள் தேடிவரும்.

### 21

எப்போதும் தங்களின் நலன் பற்றியே சிந்திப்பவர்கள். தங்களுக்குப் பிரயோசனமாக இருக்கும் தொழில்களிலேயே நாட்டம் செலுத்துவார்கள். வாழ்க்கையின் முன் பகுதியில் பல ஏற்றத் தாழ்வுகள் மூலம் நல்ல அனுபவங்களைப் பெறுவார்கள். பலமுறை தோல்விகளைச் சந்தித்தாலும்சலிக்காமல்உழைப்பார்கள். நடுவயதில் இவர்கள் பல வாழ்க்கைப் பிரச் சினைகளைச் சந்திப்பார்கள். உலகத்தில் புதிதாக ஏதாவது சாதிக்க வேண்டும் என்று நினைத்துச் செயற்படுவார்கள். அதன் மூலம் பெரும் புகழும், செல்வமும் அடைவார்கள். எழுத்தும், பத்திரிகைத்தொழிலும் நன்கு அமையும். தங்களது வாழ்க்கையின் பிற்பகுதியில், தாங்கள் பெற்ற அனுபவங்களைக் கொண்டு, ஆனந்தமான வாழ்க்கை வாழ்வார்கள். அலைபாயும் (2 எண்) வாழ்க்கையானது இவர்களதுதிட்டமிட்ட உழைப்பால் இன்ப வாழ்வாக (1 எண் ) மாறிவிடும். காரணம் சந்திரன் சூரியனுடன் சேர்ந்து மூன்றாக மாறு வதால், நல்ல பிற்கால இன்பவாழ்க்கைஉண்டு.

### 30

மிகுந்த திறமைசாலிகள், பணத்தைவிடச் சுயதிருப்தியை பிரதானமாக நினைப்பார்கள். எதையும் துருவித் துருவி ஆராயும் குணம் உண்டு. உயி ராபத்து வந்தால்கூட பயப்படாமல் சாதனை செய்ய விரும்புபவர்கள். பொருளாதாரத்தில் திருப்திகரமான நிலை இருக்காது. ஊதாரித்தனமாக பணத்தைச் செலவழித்துப் பின்பு வருந்துவார்கள். ஒற்றர்கள், தூர்கள், துப்பறிவாளர்கள் போன்றவர்கள் இந்த எண்காரர்களே. கௌரவம் எப்போதும் கிடைக்கும். தனிமையிலே சிந்திப்பதில் நாட்டம் உள்ளவர்கள். அரசியல் தொடர்பும் ஏற்படும். பலருக்கும் வழுக்கையும், நரையும் விரைவில் ஏற்படும். படிப்பறி வைக் கொடுக் கும் எண் இது.

## 4 ஆம் திகதி பிறந்தவர்கள்

### 04

இவர்கள் கரகரப்பாகப் பேசுவார்கள். பேச்சில் கண்டிப்பும், அதிகாரமும் நிறைந்து காணப்படும். இவர்களுக்குத் துணிச்சலும், பலமும் அதிகம். பொலிஸ், போர் வீரர் கள்போன்று உடல் வாகு அமையும். அடிக் கடி இவர்களுக்குச் சோத னைகள் ஏற்படும். அதைக் கண்டு கண்கலங்காமல், செயற்பட்டு வெற்றி அடை வார்கள். இளமையிலேயே திரு மணம் நடக்க வாய்ப்பு உள்ளது! குடும்ப பாரத் தைச் சுமக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படும். கணவன் மனைவி அன்யோன்யம் உண்டு! தெய்வ பக்தியும் இருக்கும்.

### 13

இவர்கள் துன்பங்களையே அனுபவிக்கப் பிறந்தவர்கள் என்பார்கள். உண்மை அதுவன்று சோதனை இல்லையேல் சாதனை இல்லை. இவர் களது இளமைக் காலப்போராட்டங்கள் எல்லாம் பிற்காலத்து வசதியான வாழ்வுக்கு அடித் தளமாக அமைந்துவிடும். காரணமில்லாமல் பலருடைய எதிர்ப்பையும், விரோதத்தையும் சம்பாதிக்க வேண்டிவரும். இவர்கள் எவருக்கு உதவுகிறார்களோ, அவரே இவர்களுக்குத் துரோகம் செய்வார்கள். கட லில் அலை ஓய்வதில்லை. அதைப்போன்றுதான் இவர்களது பிரச்சினைகளும், இருப்பினும் தங்களின் கடும் உழைப் பால் பேரும் புகழும், பெருஞ் செல்வமும், மிகச் சிறப்பாகத் தேடிக் கொள்வார்கள். எதிர்பாராமல் வரும் துன்பங்களெல்லாம் எதிர்பாராமலேயே விலகி ஓடும். ஆணவம் கொண்டு செயலாற்றினால் துன்பம் நிச்சயம். நேர்மையும், கடுமையான உழைப்புமே இவர்களை உயர்த்தி விடும்.

### 22

அதிக நண்பர்களும், நல்ல பேச்சுச் சாமர்த்தியமும் உண்டு. நிர்வாகத் திறமையும், பிடிவாதமும் உண்டு. எப்படியாவது பணம் சம்பாதிக்க வேண்டும் என்று குறுக்கு வழியில் துணிந்து இறங்கி விடுவார்கள். பின்பு அதனால் பிரச்சினைக்குள்ளாவார்கள். இவர்கள் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம். இல்லையெனில் இவரைச் சேர்ந்தவர்களே இவரைக் கவிழ்த்து விடுவார்கள். வீம்புக்காகச் சில செயல்களில் ஈடுபட்டால், தோல்விகளே மிஞ்சும். தீய நண்பர்களைத் தெரிந்து அவர்களை ஒதுக்கிக் கொள்ள வேண்டும்.

### 31


சுய திருப்தியே இவர்களுக்கு முக்கியமாக இருக்கும். பணம் இவர்களைத் தேடி வர வேண்டுமேதவிர, இவர்கள் பணத்தைத் தேடினால் கிடைக்காது. தீவிர தன்மையும் அதிகாரம் செய்வதும் இவர்கள் குணம். உலகசுகங்களை அனுபவிக்க வேண்டும் என்று விரும்புவார்கள். மனோசக்தி மிகுந்தவர்கள். ஆன்மிகம், சோதிடம், வேதாந்த ஆராய்ச்சிகளில் ஈடுபாடு உண்டு. எதிரிகளைத் துணிவுடன் சந்திப்பார்கள். உலகத்தில் உள்ள பல விடயங்களையும், இவர்கள் அறிந்து வைத்திருப்பார்கள். மற்ற மனிதர்களை உடனே எடைபோடும் சாமர்த்தியம் உண்டு. அரசியலில் ஈடுபட்டால் நல்ல பதவிகள் கிடைக்கும்.




# சமூகம் மேம்பட பெண்களின் பங்களிப்பு

■ சோபா

ஆரோக்கியமான சமூக உருவாக்கத்தில் பெண்களின் பங்களிப்பும் ஈடுபாடும் முதன்மையான இடத்தைப் பெறுவது இயல்பு. ஆனால், அனைத்து நிலைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் பரவலாக இல்லை என்பதுதான் நிதர்சனம். வேலை என்று பார்க்கும்போது தொடக்க நிலைப் பதவிகளில் பெண்களுக்குப் போதுமான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. பணிகளில் திறமையை வெளிப்படுத்தத் தேவையான பயிற்சிகளும் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. ஆனால், உயர் பதவிகளுக்குச் செல்லச் செல்லப் பெண்களின் பங்களிப்பு குறைவாக இருக்கிறது. இதனால் பெண்கள் பணிகளை இடையில் கைவிட்டு விடுகின்றனர். தனிப்பட்ட விருப்பத்தாலோ குடும்பச் சூழலாலோ பெண்கள் இத்தகைய முடிவை எடுக்கிறார்கள். பெண்களுக்கு அதிகாரம் வழங்குவதன் மூலம் சமூகம் பெருமளவில் மேம்படும். சமூகத்தில் பாலினச் சமத்துவத்தைப் பாதுகாக்கவும், பெண்களின் ஆற்றலைத் தங்கள் நிறுவனங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ளவும் சில நிறுவனங்கள் ஆர்வம் காட்டி வருகின்றன. ஆனால், தலைமைப் பொறுப்பில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் போதுமான அளவில் இல்லை.



# மாற்றமடைய வேண்டியவர்கள் யார்?

பாலியல் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுகிறவர்கள் ஆண் குற்றவாளிகள் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் இப்படி நிகழும் சம்பவங்களின் மூல காரணம் என்ன என்பதையும் யோசிக்க வேண்டும். ஓர் ஆண் குழந்தையின் மனதில் பிறப்பு முதலே ஊட்டி வளர்க்கப்படுகிற ஆணாதிக்க மனோபாவம்தான் பெரும்பாலான வன்முறைகளுக் குக் காரணமாக இருக்கிறது. ஒரு பெண் தன்னை மறுக்கும்போதோ, நிராகரிக்கும்போதோ அவ னுக்குள் இருக்கும் ஆண் என்கிற அகந்தைதான் அவனை வன்முறையில் ஈடுபட வைக்கிறது. இதை நிச்சயம் களைந்தே ஆகவேண்டும். அந்தப் பொறுப்பு ஒவ்வொரு தாய்மார்களது கைகளிலும் தான் இருக்கிறது. ஆணும் பெண்ணும் சமம் என்கிற நிலையை நோக்கி இந்த வையம் நகர்கிற நாள்தான் பெண்ணுரிமைக்கான கூக்குரல் தேவைப்படாத நாளாக அமையும்.


# விளம்பரங்கள்

## மாற்றுத் திறனாளிகள் தின விழா இன்று

பூநகரி பிரதேச செயலகத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான சிறுவர், முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் தினவிழா இன்று காலை 9 மணிக்கு பூநகரி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந் தினராக மாவட்ட உதவி அரச அதிபர் ச.கிருஷ்ணேந்திரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.தர்மரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கலும், சிறுவர், முதியோர், மாற்றுத் திறனாளிகள் கௌரவிப்பும் இடம் பெறும். அனைத்துப் பிரிவினரின் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (வ–9)

## மரண அறிவித்தல்கள்



மலர்வு 06 . 06 . 1945

உதிர்வு 16 . 12 . 2014

### இராசையா வாலசுப்பிரமணியம் (வாலை)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா வாலசுப்பிரமணியம் (16.12.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சாந்தமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவசம்பு - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், திருமதி செல்வரட்ணம் சிவமலரின் அன்புச் சகோதரரும், அன்னராஜி (ஜேர்மனி), பாலராஜ் (சுரபி - இலங்கை), காலஞ்சென்ற சாந்தராஜ், கலாராஜி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேஸ் (ஜேர்மனி), தயாளினி (இலங்கை), அசோகபாலன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனும், கதீஸ், சரீனா (ஜேர்மனி), சகானா, ஆதித்தியா, ஆதித்தன் (இலங்கை), அம்பிகா, கோகுலன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.12.2014 திங்கட்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **வா.பாலராஜ்**
**(மகன் - சுரபி)**
தொ.பே, 077 755 6003

(c 18330) (45.6.7.3)

### திருமதி ஞானம்மா சூசைப்பிள்ளை



பிறப்பு: 04.08.1925
இறப்பு: 17.12.2014

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட திருமதி ஞானம்மா சூசைப்பிள்ளை 17.12.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், ஞானமலர், ஜெயதாசன், ஜெயறாணி, சவரிமுத்து, ஞானம், மறிஸ்ரெலா, ஜெபநேசன், காலஞ்சென்ற ஜெயம் மற்றும் யூடித் நவதிரேஸ் ஆகியோரின் தாயும், யேசுதாசன், யூலியற், புஸ்பா, தர்சினி, றஞ்சன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.12.2014) சனிக்கிழமை மாலை 3 மணிக்கு சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் சில்லாலை கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்டத்தரிப்பு,
சில்லாலை.

(55064)(45.8.3.7)

தகவல்:
**பிள்ளைகள்**

### கிறிஸ்தோப்பர் நீற்றம்மா



குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ் தோப்பர் நீற்றம்மா (தங்கம்) 16.12.2014 செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை கிறிஸ்தோப்பரின் அன்பு மனைவியும், ஜோய், றோய் ஆகியோரின் அருமைத் தாயாரும், பாமா, பவிதா ஆகியோரின் பாசமிகு மாமி யாரும், ஜொய்சன், கார்லோஸ் ஆகியோரின் ஆசைப்பேர்த்தியும், அலோசியஸ், அன்னகுலம், பீற்றர்தர்மநாயகம், அன்னரஞ் சிதம், செல்வராணி, ராசகுமாரத்தி ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.12.2014) சனிக் கிழமை பி.ப. 4.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா ஆலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலிக்காக எடுத்துச்செல்லப்பட்டு, பின்னர் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

31, சென். செபஸ்ரியன் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

(55061) (1.6.3)

தகவல்:
**ஜோய், றோய்**
**(பிள்ளைகள்)**

## ஐயிரண்டின் நினைவலைகள்

**செல்வி தபேந்திரராசா ஈவிலின் சரோமினி**

மலர்வு 21.10.1991

உதிர்வு 19.12.2004




"ஆண்டவரின் கையில் - நீ
அழகிய மணி முடியாகத் திகழ்வாய்
உன் கடவுளின் கரத்தில்
அரச மகுடமாய் விளங்குவாய்"
*(எசாயா 62.3.4)*

"பசுமையாய் பறந்த காலங்கள்
பசுமையாய் நிறைந்த நினைவுகள்
பாசத்தோடு வளர்த்த உறவுகளை
பாரினில் பிரிந்திட்ட
பத்தாண்டுகள் போனதம்மா
காலங்கள் போனாலும்
கனவுகள் உறங்காதம்மா"

**என்றும் நினைவுடன்**
**அப்பா, அம்மா, தம்பி**
**பழைய பொலிஸ்ரேசன் லேன்,**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

## மரண அறிவித்தல்



மலர்வு 07 . 04 . 1947

உதிர்வு 17 . 12 . 2014

### வேலுப்பிள்ளை கனகலிங்கம்

7ஆம் வட்டாரம், சிவநகர், புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கனகலிங்கம் 17.12.2014 அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், லீலாவதியின் அன்புக் கணவரும், தர்மலிங்கம், பரமலிங்கம் (ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்), கணேசலிங்கம் (லண்டன்), திலகவதி, சோதிலிங்கம் (பிரான்ஸ்), அமராவதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நகுலேஸ்வரன், தயாநிதி (சுவிஸ்), அருள்நிதி, வசந்தினி (சுவிஸ்), நந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மானந்தம் (சுவிஸ்), சத்தியசீலன், விநாயக நாதன் (சுவிஸ்), ஜீவராசா (கெயார் நிறுவன முன்னாள் இணைப்பாளர்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற தனுஜா, கேசவன், கிரிகேசன், மார்ட்டினா, ரெல்வின், விலேனி, விலக்ஷன், விபுஷா, அக்சயா, கம்சனன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2014) சனிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே. 077 641 9969, 077 564 5746

(55040) (45.3.7)

## பளை பிரதேச சபை முகாமை அலுவலகக் கட்டடம் மீள நிர்மாணிக்கப்படும்

பளை, டிசெ. 19

பளை, இத்தாவில் சந்தியில் சேதமடைந்த நிலையில்காணப்படும்பளைப்பிரதேசசபையின்முகாமை அலுவலகக் கட்டடம் மீண்டும் நிர்மாணிக்கப் படவுள்ளது. உப அலுவலக வளாகப் பகுதியில் வெடி பொருள்கள் அகற்றும் பணிகள் முடிவடைந்துள்ளதால் அது கையளிக்கப்பட்டதும் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. முதல் கட்டமாக உப அலுவலக வளாகத்தில் நூலகத்தையும் ஆயுள்வேத மருந்தகத்தையும் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அறியப்படுகிறது.

உபஅலுவலகவளாகத்துக்கு அருகே காணப்பட்டவேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலை கட்டடம் முற்றாக அழிவடைந்துள்ளதாலும்வெடிபொருள்கள் அகற்றப்பட்டதாலும் இத்தாவில் பகுதியில் சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைக்குமான நிறுவனம் 28 மில்லியன் ரூபா செலவில் பாடசாலைக் கட்டடம் அமைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ–9)

## ஆன்மிக - சொற்பொழிவு

கரவெட்டி, டிசெ.19

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன்ஆலயசூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவைநடத்தி வரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'முருக நாமபஜனை" இடம் பெறும்.

இந்நிகழ்வைமுருகன் அடியார்கள் ஒன்றிணைந்து பக்க வாத்தியங்கள் சகிதம் நிகழ்த்துவார்கள். (வ–173)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# செய்திகள்

## காரைதீவில் விபுலானந்தருக்கு சிலை அமைக்கும் பணி ஆரம்பம்



மட்டக்களப்பு, டிசெ.19
காரைதீவு முச்சந்தியான விபுலானந்த சதுக்கத்தில் சுவாமி விபுலானந்தருக்குசிலைஅமைக்கும்வேலைத் திட்டம் நேற்று புதன்கிழமை காலை ஆரம்பமானது. கடும் மழையின் மத்தியிலும் கனரக வாகன உதவியுடன் அந்தப் பணிகள் நடைபெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

காரைதீவு பிரதேச சபை தவிசாளர் யோ.கோபிகாந்த், உபதவிசாளர் க.தட்சணாமூர்த்தி, மற்றும் செ.இராசையா, சு.பாஸ்கரன் மற்றும் கி.ஜெய சிறில் ஆகியோருடன் காரைதீவின்பொதுஅமைப்புக்களின் முக்கியஸ்தர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன்போது சிலை அமைப்பது தொடர்பான விளக்கம் இன்மையால்பல அரச அதிகாரிகள்தடைகளைஏற்படுத்த முயன்ற போது தவிசாளரின் தலையீட்டால் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டதன் பேரில் சிலையமைப்புப் பணிகள் தற்போது தடையற்று இடம்பெற்று வருகின்றன.

(வ)

## அறநெறிப் பாடசாலையின் 2 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ.19
யாழ். விசன் கிருஸ்ணா அறநெறிப் பாடசாலையின் 2 ஆவது ஆண்டு விழாவும் கட்டடத் திறப்பு விழாவும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு குறித்த பாடசாலை வளாகத்தில் இடம் பெறவுள்ளன.

குறித்த பாடசாலையின் பொறுப்பாளர் கந்தையா சுசீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், யாழ்ப்பாண பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினராக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த நிகழ்வில் குறித்த பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-ரி)

## சனிப்பெயர்ச்சி விசேட பூசை

தென்மராட்சி, டிசெ.19
சாவகச்சேரி சந்திரசேகர வாரி வனநாத சிவன் ஆலயத்தில் சனிப் பெயர்ச்சி விசேட பூசைகள் நாளை காலை 8 மணிக்கு நடை பெறும்என்று ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (வ-9)


இன்று முதல் நத்தார் மலிவு விற்பனை



Arpico, Damro, Piyastra, Nilkamal, Nipon, Phonex ஆகிய கம்பனிகளின் தளபாட பொருள்களுக்கும், மூங்கில் மரம், உருக்கு, அலுவலக, வீட்டுத் தளபாடங்கள் அனைத்துக்கும் அமோக விலை குறைப்பு

10% — 50% வரையிலான விலைக்கழிவு

கையிருப்பு உள்ள வரையே, தெரிவுக்கு முந்துங்கள்

Mangala மங்களா காட்சியறை

இல. 536, கே.கே.எஸ். வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 8367 / 021 222 8356 / 0777 286 069


### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 24.07.1919 — மறைவு 25.10.2014

வீ. குழந்தைவேலு



தோற்றம் 07.04.1928 — மறைவு 19.11.2014

கு. ஜெயலட்சுமி

கடந்த 25.10.2014 சிவபதமடைந்த அமரர் வீரசிங்கம் குழந்தைவேலு. 19.11.2014 சிவபத மடைந்த குழந்தைவேலு ஜெயலட்சுமி அவர்களது 31ஆம் நாளை நினைவு கூரும் வேளையில் இத்துயரச் செய்தியை கேட்டு உடன் வந்து உதவியோருக்கும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வழங்கியும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் போசனமளித்து உதவியவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 17.12.2014 புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியம் இன்று (19.12.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி யளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. குடும்பத்தினர்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 09.05.1943

இறப்பு 30.12.2013

அமரர் இராசலட்சுமி சுந்தரலிங்கம்

திதி: தேய்பிறை திரயோதசி (19.12.2014)

எமது குடும்ப விளக்கின் ஓராண்டு நினைவஞ்சலி இன்று (19.12.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். தாங்கள் அத் தருணம் கலந்துகொண்டு அவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுதுமலை கிழக்கு, ஈஞ்சடி, மானிப்பாய். குடும்பத்தினர்.


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


### மாநகரசபை யாழ்ப்பாணம்

**வாகனங்கள் திருத்தம், சேவிஸ் மற்றும் மின்னியல் வேலைகளுக்கான கூறுவிலை அறிவித்தல்-2015**

மாநகரசபையின் வாகனங்களுக்கு கீழ்க்காணும் வேலைகளினை செய்வதற்குரிய கூறுவிலைகள் எதிர்வரும் 31.12.2014ஆம் திகதி புதன்கிழமை பி.ப 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். 24.12.2014 ஆம் திகதிக்கு முன்னர் கொள்வனவுப்பகுதியினரால் வழங்கப்படும் படிவங்களினை பெற்று பூரணப்படுத்தி ''ஆணையாளர், மாநகரசபை யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மேலதிக விவரங்களை மாநகரசபையின் கொள்வனவுப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.


**வேலை விவரங்கள் வருமாறு**

1. மின்னியல் வேலைகள்
2. இன்ஜெக்ரர் பம் சேவிஸ் செய்தல்
3. றேடியேற்றர் திருத்தம் செய்தல்
4. வாகனங்கள் சேவிஸ், வீல் எலைமென் வேலைகள்
5. ரயர்களுக்கு காற்று அடித்தல் ரியூப் ஒட்டு வேலைகள், ரயர் மாற்றம் செய்தல்
6. கடைச்சல் வேலைகள்
7. A/C திருத்தம்.

**செ.பிரணவநாதன்**
**மாநகர ஆணையாளர்**
**யாழ்ப்பாணம்.**
**18.12.2014**

(C/18765) (10.6)

### முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 20.02.1938 — மறைவு 29.12.2013

அமரர் பொன் தெய்வேந்திரம்

(மூத்த உறுப்பினர் உரும்பிராய் காளிஅம்பாள் ஆலயம்)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
இருந்து உரும்பிராய் மக்கள், அடியார்களின் மனதில்
இடம்பிடித்த பெரும் மகன் ஆவார்.
ஆண்டொன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

காளிகோயில் நிர்வாக சபையினர்
பலாலி றோட், உரும்பிராய்

(55071)(10.6)

### காணவில்லை



உரும்பிராய் மேற்கு, உரும்பிராயைச் சேர்ந்த சின்னத்துரை கருணாகரன் (காந்தன்) என்பவரை 01.12.2014 ஆம் திகதியில் இருந்து காணவில்லை. வீட்டில் இருந்து புறப்பட்டவர் வீடு திரும்பவில்லை. கட்டைக் காற்சட்டை, சேட், கைப்பை ஒன்று வைத்திருப்பார். மேற்படி முதியவரைக் கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 160 1893, 021 321 2936**

(55046) (4.6.3)

### வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் வரவு செலவுத்திட்டம் - 2015

1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 168 ஆம் பிரிவுற்கிணங்க வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் 2015 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு 2014.12.18 ஆம் திகதி தொடக்கம் 2014.12.26 ஆம் திகதிவரை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இதனை அலுவலக நேரத்தில் தலைமை அலுவகம், சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்களிலும், சுன்னாகம், உடுவில், ஏழாலை பொது நூலகங்களிலும் vsps.lk என்ற எமது இணையத்தளத்திலும் பார்வையிடலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

தி.பிரகாஷ்
தவிசாளர்,
வலி.தெற்கு, பிரதேசசபை, சுன்னாகம்.
2014.12.18

(சி.18276) (45.36.7)

# பருத்தித்துறை பிரதேச சபையின் உள்ளூராட்சி வார விழா

பருத்தித்துறை பிரதேச சபையின் உள்ளூராட்சி வார விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அல்வாய் திக்கம் கலாசார மண்டபத்தில் சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரக பதில் தூதர் எஸ். தட்சணாமூர்த்தியும், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் சி.திருவாகரனும் கலந்துகொள்வார்கள். (வ–173)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கூட்டுறவுக் காப்புறுதியின் வரலாற்றில் என்றுமில்லாதவாறு யாழ்/கிளை புதிய சரித்திர தடம்பதித்து காப்புறுதி விற்பனையின் 102 % பூரணப்படுத்தி 2014 ஆம் ஆண்டுக்கான காப்புறுதிக் கிளைத் தரப்படுத்தல் நாடளாவியரீதியில் 4 ஆம் இடத்தைத் தக்க வைத்துள்ளது.
இவை அனைத்தும் எமது காப்புறுதியில் புதிதாக உள்வாங்கப்பட்ட

### B.அலன்கியூமர்

சிரேஷ்ட முகாமையாளரின் நேரடி நெறியாள்கையின் கீழ் பொறுப்பெடுத்து நான்கே மாதங்களுக்குள் ஓர் ஆண்டுக்கான விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் இலக்கு பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்பது நிதர்சனம் ஆகின்றது.
கூட்டுறவுக் காப்புறுதியின் யாழ் கிளை 2014 ஆவணி மாதத்தில் புதிய பரிமாணத்தில் புதிய இடத்தில் புதிய உத்வேகத்தில் தனது விற்பனை மேம்படுத்தல் மற்றும் விற்பனைக்குப் பின்னான சேவை எனப் பன்முகப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் சேவைகளை உள்ளடக்கியதாக முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டங்களை ஒன்றிணைந்து ஒழுங்கமைத்து செயல்வடிவம் தந்த வரலாற்று நாயகனை எம்மகத்தே தந்த பெருமை இறைவனையே சாரும்.

**வெற்றி நாயகனின் சாதனைகள்.**

15 வருட காலமாக இருந்து வந்த வரலாற்றை மாற்றியமை.
42 ஆவது இடமாக இருந்த யாழ்.கிளையை 4 ஆவது இடத்திற்கு உயர்த்தியமை.
4 பணியாளர்களை வெளிநாட்டு சுற்றுலாப் பயணத்திற்கு தகுதியாக்கியமை.
5 பணியாளர்களை விருதுக்கு தகுதியாக்கியமை.

(2015 ஆம் ஆண்டுக்கான விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை 19.12.2014 இன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துள்ளது.)

இவர் மேலும் பல வெற்றிகளையும் பல பதவி உயர்வுகளையும் இனிவரும் காலங்களில் பெறவேண்டும் என வாழ்த்துகின்றோம்.



சிரேஷ்ட முகாமையாளரோடு
விற்பனை முகாமையாளரும்
மற்றும் வெளிக்கள
உத்தியோகத்தர்கள்

**யாழ்.வ/கூட்டுறவுக்காப்புறுதி நிறுவனம்.** (55047)(4.3.6)

## பிறந்தநாள் வாழ்த்து

19
12
2014



ஜேர்மனி Frank Fort இல் வசிக்கும் சசிகரசர்மா அபர்ணா தம்பதியரின் செல்வப் புதல்வர்கள்

**அஸ்வத், ஸ்வாகத்**

இருவரும் 19.12.2014 இன்று தமது முதலாவது பிறந்ததினத்தை ஜேர்மனியிலுள்ள தமது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார்கள். இவர்கள் Frank Fort சித்தி விநாயகர், ஏழாலை அத்தியடிவிநாயகர் அருளால் எல்லா வளங்களும் பெற்று நீண்ட ஆயுளுடன் வாழ்க என தாத்தா, அம்மம்மா, அப்பம்மா, அருண்மாமா, அனுமாமி அனைவரும் வாழ்த்துகின்றனர்.

HAPPY BIRTH DAY

"வாரணாஸ்யம்" ஆலடி ஒழுங்கை,
பலாலி வீதி, ஊரெழு மேற்கு.

(55052) (4.3.6)
தகவல்:
தி-சோமநாதக்குருக்கள்

## சேவைநலன் பாராட்டு

### கந்தையா முதலிக்குட்டி



எமது பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியராக சேவையாற்றி எமது மாணவர்களை கோட்ட, வலய, மாகாண, தேசிய மட்டங்களில் விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றச்செய்து சாதனைகள் படைத்து இன்று (19.12.2014) வெள்ளிக்கிழமை ஓய்வுபெறும் ஆசானை மனமுவந்து பாராட்டுவதுடன், அவர் ஓய்வு காலத்தில் சகல வளங்களுடன் ஆரோக்கியமாக நிம்மதியுடன், நீண்ட ஆயுளுடன் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**சேவை விவரம்**

20.03.1990 இல் இருந்து 01.03.2000 வரை யா/வரணி ம. வி
02.03.2000 இல் இருந்து 18.12.2014 வரை யா/சந்திரபுர ஸ்கந்தவரோதயா ம.வி

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிகழகம்
யா/சந்திரபுர ஸ்கந்தவரோதயா ம.வி
மட்டுவில், சாவகச்சேரி. (51852)(3,7,8)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### சட்டத்தரணி நாகேந்திரன் பார்த்திபன்

**கடந்த 17.12.2014 இல் இலங்கை ஜனநாயக சோசலிக்குடியரசின் உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட** இவர் 2010 ஆம் ஆண்டு சட்டக்கல்லூரி நுழைவுப்பரீட்சையில் தேர்ச்சி பெற்று தனது சட்டக்கல்வியைத் தொடங்கியிருந்தார்.

2011 ஆம் ஆண்டு ஆரம்ப ஆண்டுப் பரீட்சையில் 1st Class சித்தியைப்பெற்றதுடன் தமிழ்மொழி மூல மாணவர்களில் ஆகக்கூடிய புள்ளிகளைப்பெற்றமைக்காக சட்ட மாணவர் தமிழ் மன்றத்தினால் வழங்கப்படும் திருச்செல்வம் ஞாபகார்த்த பரிசினையும் பெற்றுள்ளார்.

2012 ஆம் ஆண்டு இடைநிலை ஆண்டுப் பரீட்சையில் 2nd Class சித்தியைப் பெற்றதுடன் தமிழ்மொழி மூல மாணவர்களில் ஆகக்கூடிய புள்ளிகளைப்பெற்றமைக்காக சட்ட மாணவர் தமிழ் மன்றத்தினால் வழங்கப்படும் செல்வநாயகம் ஞாபகார்த்த பரிசினையும் பெற்றுள்ளார். அத்தோடு Jurisprudence பாடத்திலும் Law of Obligations II பாடத்திலும் மும்மொழிகளிலும் ஆகக்கூடிய புள்ளிகளைப்பெற்றமைக்காக கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப்பேரவையால் வழங்கப்படும் பாடத்திற்கான பரிசில்களையும் பெற்றுள்ளதோடு, மேற்குறிப்பிட்ட இரு பாடங்களிலும் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றமைக்காக வழங்கப்படும் அம்பலவாணர் ஞாபகார்த்த பரிசினையும் ரட்ணசபாபதி ஞாபகார்த்த தங்கப் பதக்கத்தினையும் வென்றுள்ளார்.

2013 ஆம் ஆண்டு இறுதி ஆண்டுப் பரீட்சையில் 2nd Class சித்தியைப் பெற்றதுடன் தமிழ்மொழி மூல மாணவர்களில் ஆகக்கூடிய புள்ளிகளைப்பெற்றமைக்காக சட்ட மாணவர் தமிழ் மன்றத்தினால் வழங்கப்படும் அமிர்தலிங்கம் ஞாபகார்த்த பரிசினையும் பெற்றுள்ளார்.

மேலும் மூன்று ஆண்டுப் பரீட்சைகளிலும் சிறந்து விளங்கியமைக்காக சட்ட மாணவர் இந்து மகா சபையினால் வழங்கப்படும் பயிலுநர் ஆண்டு மாணவர்களுக்கான குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த பரிசினையும் பெற்று பெற்றோர்க்கும் பிறந்த மண்ணிற்கும் பெருமை சேர்த்துள்ளார். இவர் சட்டத்துறையில் சிறந்து விளங்கி மக்களுக்கு சிறப்பாக சேவைசெய்ய எல்லாம் வல்ல மல்லாகம் பழம்பதியானை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**குறிப்பாக:** சட்டத்துறை மாணவர்களைக் கௌரவித்து ஊக்குவிப்பதற்காக மதிப்பிற்குரிய தலைவர்களினதும் பெரியார்களினதும் ஞாபகார்த்தமாக விருதுகளை வழங்கிவரும் அவர்தம் குடும்பத்தினர்க்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

Congratulations

**கே.கே.எஸ்.றோட், மல்லாகம்.**

*வாழ்த்துவோர்:*
மைத்துனர் - தனபாலசிங்கம் அகிலன் *(Farm Manager, New Zealand)*
அக்கா - காயத்திரி அகிலன் (சட்டத்தரணி)
மருமகன் - அகிலன் லதுர்ஷன்.

(55055)(45.3.7)

செய்தி

# முன்பள்ளி ஆசிரியருக்கான கொடுப்பனவு அதிகரிப்பை நிராகரித்தது கொழும்பு அரசு

## வடக்கு மாகாண 'பட்ஜெட்' இரண்டாம் நாள் விவாதத்தில் கல்வி அமைச்சர் குருகுலராஜா தெரிவிப்பு

- வறிய பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதியுதவி
- முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 4 ஆயிரம் கொடுப்பனவு
- ஆசிரிய உதவியாளர்களுக்கு மாதாந்தம் 13 ஆயிரம் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிசெ. 19

வடக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கு வடக்கு அரசு எடுத்த நடவடிக்கையை, கொழும்பு அரசு நிராகரித்துள்ளது என்று தெரிவித்துள்ள வடக்கு கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, அதனால் ஆயிரம் ரூபா மாத்திரமே மேலதிகமாக கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் இரண்டாவது வரவு – செலவுத் திட்டம் மீதான விவாதம் இரண்டாவது நாளாகவும் நேற்று நடைபெற்றது. கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மீதான குழு நிலை விவாதம் நேற்று மாலை இடம்பெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில், கல்வி அமைச்சுக்கு 2 மில்லியன் ரூபாவும், மாகாண கல்வி திணைக்களத்துக்கு ஒரு மில்லியன் ரூபாவும், விளையாட்டுத் திணைக்களத்துக்கு ஒரு மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில் கல்வித் திணைக்களத்துக்கு 278 மில்லியன் ரூபாவும், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துக்கு 6 மில்லியன் ரூபாவும், விளையாட்டுத் திணைக்களத்துக்கு 19 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வித்துறைக்கான ஒதுக்கீடானது பாடசாலைக்கான புதிய கட்டடங்களை அமைத்தல், புதிய ஆசிரிய விடுதிகளை அமைத்தல், சேதமுற்ற பாடசாலைக் கட்டடங்களை திருத்துதல், சேதமடைந்த ஆசிரியர் விடுதிகளைத் திருத்துதல், வலயக் கல்விப் பணிமனை நிர்மாணித்தல், பாடசாலை மாணவர்களின் வகுப்பறைத் தளபாடத் திருத்த வேலைகள், பாடசாலைகளுக்கான புதிய தளபாடக் கொள்வனவு, பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவு ஆகியவற்றுக்குப் பயன்படுத்தப்படும்.

விளையாட்டுத் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட மூலதன நிதியானது விளையாட்டு மைதான புனரமைப்புக்குப் பயன்படுத்தப்படும். கலாசாரத் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியானது, இசைக் கருவிகளின் கொள்வனவுக்காகவும், கலாசார மண்டபங்களின் புனரமைப்பு வேலைகளுக்காகவும், ஆவணக் காப்பகத்தை உருவாக்கவும் பயன்படுத்தப்படவுள்ளது.

**மாகாண் கல்வி அமைச்சு**

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயற்பாடுகளுக்காக 325 மில்லியன் ரூபா கோரிய போதும், 210 மில்லியன் ரூபாவே வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு 178 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

மாற்றுத் திறனாளிகளுக்கு 20 மில்லியன் ரூபா கோரப்பட்ட நிலையில், 7.1 மில்லியன் ரூபாவே வழங்கப்பட்டது. இதில் விசேட தேவைக்குரியவர்களுக்கான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும், போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான உதவி மானியமாக 4 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இளைஞர் விவகாரத்தை கையாள்வதற்கு 16.7 மில்லியன் ரூபா கோரப்பட்டபோதும் எதுவும் வழங்கப்படவில்லை.

மனிதவள முகாமைத்துவத்துக்கு 6 மில்லியன் ரூபா கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு அது குறைக்கப்பட்டு 4.8 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு கலாசாரத் திணைக்களத்துக்கு 68 மில்லியன் கோரப்பட்டது. வழங்கப்பட்ட தொகை 43 மில்லியன் ரூபா. கடந்த ஆண்டை விட 3 மில்லியன் ரூபா குறைத்தே வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் 3 லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 3 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. இதனை 6 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க கேட்டோம். இதற்கு 144 மில்லியன் ரூபா தேவை. ஆனால் கொழும்பு அரசின் நிதி ஆணைக்குழு 94 மில்லியன் ரூபா மாத்திரமே வழங்கியுள்ளது. அதனால் ஆயிரம் ரூபா அதிகரிப்பு மாத்திரமே செய்ய முடியும். (ந–5)

விளம்பரத் தொடர்புகளுக்கு
உதயன்
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### ஸ்ரீமான் பொன்னுத்துரை தர்மபாலன்

(ஓய்வு பெற்ற கிராம சேவகர், தரம் – 01)

பிறப்பு – 14.09.1946
இறப்பு – 17.12.2014



அல்வாய்வடமராட்சியைப்பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீமான் பொன்னுத்துரை தர்ம பாலன் கடந்த (17.12.2014) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை – நல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், குகனேஸ்வரியின் அன்புக் கணவரும், Dr. தாரினி, பவித்திரா (Assistant manager) இன் அன்புத் தகப்பனாரும், Dr. ஜெயமலர், Dr. புஸ்பமலர், ரஞ்சிதமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், Dr. Tedor wickremaratchi, Dr. ராமச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக ஞாயிற்றுக்கிழமை (21.12.2014) அன்று கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பின்னர் திங்கட்கிழமை 22.12.2014 காலை 8 மணிக்கு கல்கிசை மயானத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

மகிந்தபாலா, 591,
Galle Road,
Mt lavaniya, Sri lanka.
T.P-0777035544

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் இராசரெத்தினம்



வேலணை, சிற்பனை முருகமூர்த்தி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் 43/1 பூநகரி லேன் கொக்குவில் மேற்கு கொக்குவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாக் கியம் இராசரெத்தினம் நேற்று (18.12.2014) வியாழக்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

43/1, பூநாரி லேன்,
கொக்குவில் மேற்கு.

தகவல்:
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### செல்வி விக்னேஸ்வரி கந்தையா



சங்கிலியன் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி விக்னேஸ்வரி கந்தையா நேற்று (18.12.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-முத்தம்மா தம்பதியரின் அன்பு மகளும், விக்னேஸ்வரனின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2014) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

23A, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

(55024)
(10)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 18 - 04 - 1946



இறப்பு 17 - 12 - 2014

### திரு பொன்னுத்துரை சச்சிதானந்தன்

தெல்லிப்பளை மகாதனையை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திரு பொன்னுத்துரை சச்சிதானந்தன் அவர்கள் 17-12-2014 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை- விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சீனிவாசகம்- அன்னம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்றவர்களான சரோஜினிதேவி, ஜெயசீலன், இந்திரா, விசாகமலர் மற்றும் மகேந்திரன், தெய்வேந்திரன், ஜெயகுமாரி ஆகியோரின் அன்புச்சகோதரனும், இந்திராவின் அன்புக்கணவரும் ஸ்ரீபரா (France), ஸ்ரீஜெயன்(பணிப்பாளர்-Rock Engineering Pvt Ltd - Colombo) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவேந்திரன் (France), ஸ்ரீசத்யசாயினி ஆகியோரின் மாமனும் சிவானி, அபிஷன், ஸ்ரீநிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் (20.12.2014) சனிக்கிழமை காலை 10.00 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (21-12-2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் ஆரம்பமாகி பிற்பகல் 1.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி – 0773557274
0767557274

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி தையல்நாயகி (பவளம்) கணபதிப்பிள்ளை



திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் அராலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. தையல் நாயகி (பவளம்) கணபதிப்பிள்ளை (ஆசாரியார்) நேற்று (18.12.2014) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகர் –இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்–பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிவசுப்பிரமணியம், புனிதவதி, லீலாவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சறோஜினிதேவி, இராசேந்திரம், காலஞ்சென்ற முரளீதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ரகுராமன், தேனுகா, சித்திராங்கன், ரவிசங்கர், லதாங்கினி, ஷாருகேசன், நிஷாகரன் (கனடா),துளசி, சோபிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நாகரஞ்சிதம், அன்னபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், கனகராசா சிவனடியார், மாணிக்கவாசகர், தங்கம்மா, நாகம்மா, முத்தம்மா, நடராசா, பவளக்கொடி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அராலி கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி தெற்கு,
அராலி

தகவல்: க.சிவசுப்பிரமணியம் (மகன்)
(ஆசாரியார்)

# செய்திகள்

# மைத்திரிபால மற்றொரு மஹிந்த

## தமிழ் மக்கள் அமைதி காப்பதே நல்லது என்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



கொழும்பு, டிசெ, 19

பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால இன்னொரு மஹிந்த ராஜபக்ஷ தான். பெயரளவில் மட்டுமே வேறுபட்டவர். எனவே நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் அமைதியாக இருப்பது நல்லது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பு குயீன்ஸ் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சியின் நிலைப்பாட்டை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பிரதானமாக இரு வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தமிழ் இனப்படுகொலையை அனுமதித்தவர். அதற்கான கட்டளையை பிறப்பித்தவர். தொடர்ந்தும் கட்டமைப்பு சார்ந்த இனவழிப்பை மிகத் தீவிரமாக முன்னெடுப்பவர். 30 வருட காலப் போரின் பின்னர் சிங்கள மயமாக்கலில் ஈடுபடுபவர். காணி பறிப்புக்கள் மூலமாகச் சிங்கள மயமாக்கலைத் தீவிரமாக முன்னெடுப்பவர். வடக்கு–கிழக்கு மக்களின் பொருளாதாரப் பலத்தை அழித்து பொருளாதார ரீதியில் தென்னிலங்கையில் தங்கி வாழும் நிலையை உருவாக்கியவர். யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தினூடாகவும் சிங்கள மயமாக்கலை மேற்கொள்பவர். இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டே தமிழ் மக்கள் மஹிந்தவைத் தோற்கடிக்க முடிவாக உள்ளனர். மக்களைப் பொறுத்தவரை மஹிந்தவின் கொள்கைகள் தமிழர்களின் அழிவுக்குத்தான் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

தற்போது மக்கள் மத்தியில் உள்ள கேள்வி மஹிந்த அரசுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக யாரைத் தெரிவு செய்யப் போகின்றோம் என்பதுதான். பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால ஒற்றை ஆட்சி முறைக்குள் தான் தீர்வு, சமஷ்டிக்கு இடமில்லை, புத்த சமயத்துக்கு முன்னுரிமை, போர்க்குற்றங்கள் தொடர்பில் மஹிந்த அரசின் தலைமைகள், இராணுவத்தினர் மீது சர்வதேச விசாரணை இல்லையென வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். அரசியல் அனுபவம் எங்கள் கட்சிக்கு இருக்கின்றது. அதன் மூலம் தமிழர்களுக்கு அரசியல் எதிர்காலம் என்பது இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. மஹிந்த ஆட்சியை கவிழ்ப்பதற்கு எங்களால் தெரிவு செய்யப்படுபவரும் அதே கொள்கைகளுடன் வந்தால் ஆட்சி மாற்றம் எவ்வாறு நடக்கும். அப்படி நடைபெற்றால் அது வெறும் ஆள் மாற்றமே அன்றி ஆட்சி மாற்றமில்லை.

தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தபின் தமிழர்களுக்கு நியாயமான தீர்வு கொடுக்கப் பொது எதிரணி முயன்றால் சிங்கள மக்கள் ஆட்சியைக் கவிழ்க்க முற்படுவார்கள்.

எனவே தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாறாமல் புத்திசாலித்தனமாக இந்தத் தேர்தலில் ஒதுங்கியிருப்பது சிறப்பானது. தமிழ் தேசிய கூட்டமைப்பு இதுவரை தங்கள் முடிவை வெளியிடாமைக்குக் காரணம் அவர்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புவது தான். புத்திசாலித்தனமாக அமைதியாக இருந்து இறுதியில் தங்கள் முடிவை வெளியிடுவார்கள். ஆட்சிமாற்றம் வேண்டும் என்று ஒரு மஹிந்த ராஜபக்ஷவை நிராகரித்து இன்னொரு மஹிந்தவை ஆதரிப்பதில் ஒரு பயனும் இல்லை–என்றார். (த–10)



## மைத்திரியின் பரப்புரை மேடைக்குத் தீ வைப்பு

### காலி மாவட்டத்தில் சம்பவம்

கொழும்பு, டிசெ.19

காலி மாவட்டத்திலுள்ள வந்துறம்ப நகரில் கடந்த 17ஆம் திகதி இடம்பெறவிருந்த ஜனாதிபதி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்துக்காக அமைக்கப்பட்டிருந்த மேடை மற்றும் சோடனைகளுக்குத் தீ வைக்கப்பட்டுள்ளதுடன், அங்கிருந்துள்ள ஒலிபரப்புச் சாதனங்களும் சேதப்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இரு ஜீப் வண்டிகளில் வந்த இனந்தெரியாதோர் இந்தச் செயலைச் செய்துள்ளனர் என்று பந்தேகம பிரதேச சபையின் பிரதேச சபை உறுப்பினர் பிரேமலால்லியனகே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். தாக்குதலை மேற்கொண்டுள்ள குழுவினர் அவ்விடத்துக்கு வந்திருந்த வேளையில் அங்கு ஒலிபரப்புச் சாதனங்களைப் பொருத்திக் கொண்டிருந்த மூவர் காணாமற் போயுள்ளனர் என்றும் அவர் தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

ஜீப் வண்டிகளில் வந்திருந்தோர் ஒலிபெருக்கிச் சாதனங்களை எடுத்து வந்திருந்த லொறிக்கும் தீ வைத்துள்ளனர். மேடையில் அலங்கரிக்கப்பட்டிருந்த சோடனைகள் பிய்த்தெறியப்பட்டு பெற்றோல் ஊற்றித் தீயிடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பயத்தின் காரணமாகத் தப்பியோடியிருந்த ஒலிபெருக்கிச் சாதனங்களைப் பொருத்திக் கொண்டிருந்த மூவரும் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் சம்பம் தொடர்பாக அவர்களிடமிருந்து தகவல்கள் பெறப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே மைத்திரிபால சிறிசேன கலந்துகொள்ளவிருந்த பின்னதுவ பரப்புரைக் கூட்டம் நடக்கவிருந்த இடத்துக்கும் கடந்த 17ஆம் திகதி அதிகாலையில் சந்தேகத்துக்கிடமான இரு ஜீப் வண்டிகள் வந்ததாகவும் அந்த நேரத்தில் அந்த இடத்தில் ஏராளமான ஆதரவாளர்கள் அலங்கரித்துக் கொண்டிருந்ததால் அந்த இரு வாகனங்களும் திரும்பிச் சென்றதாகவும் மாகாண சபை உறுப்பினரான விஜேபால ஹெட்டியாராச்சி மேலும் தெரிவித்திருந்தார்.

அந்த இரு வாகனங்களும் காலி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சரொருவர் பயன்படுத்தும் வாகனங்களே என்பதைத் தெளிவாக இனங்கண்டு கொண்டிருந்ததாகவும், இதே வாகனங்களில்தான் வந்துறம்ப தாக்குதலை மேற்கொண்டிருந்த குழுவினர் வந்திருந்தார்களா எனச் சந்தேகம் நிலவுவதாகவும் அதுபற்றி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்ததாகவும் ஹெட்டியாராச்சி மேலும் தெரிவித்திருந்தார். (ந–22)

## போர் வெற்றிப் பிரசாரம் காலியில் இடைநிறுத்தம்

கொழும்பு, டிசெ 19

காலியிலுள்ள ரியூசன் வகுப்புக்கள் தோறும் போர் வெற்றி தொடர்பாக மாணவர்களுக்கு அறிவுறுத்தும் இராணுவத்தின் செயற்றிட்டத்தை கடந்த 15ஆம் திகதியில் இருந்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் காலி மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பிமல் இந்திரஜித் தெரிவித்தார்.

இந்த செயற்றிட்டம் ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனாதிபதி மஹிந்தவின் பிரதி பிம்பத்தை அதிகரிக்கும் விதத்தில் கொண்டு செல்லப்படுவதாக கிடைத்த முறைப்பாடொன்றுக்கு அமைய இதற்குத் தடைவிதித்துள்ளதாக உதவித் தேர்தல் ஆணையாளர் கூறினார்.

காலி தேர்தல் அலுவலகத்துக்குக் கிடைத்திருந்த அந்த முறைப்பாட்டுக்கு அமைய உடனடியாகச் சம்பந்தப்பட்ட இடத்துக்குச் சென்ற அதிகாரிகள் குறித்த நிகழ்ச்சியை நிறுத்த உத்தரவிட்டனர்.

இந்த நிகழ்ச்சி இளைஞர், யுவதிகளை இராணுவத்தில் இணைத்துக் கொள்வதை மேம்படுத்தும் திட்டம் என அதற்குப் பொறுப்பான இராணுவ அதிகாரியினால் தமக்குத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் ஜனாதிபதித் தேர்தலில் தாக்கம் ஏற்படுமா எனக் கண்டறிவது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், சம்பவம் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இந்திரஜித் மேலும் தெரிவித்தார். (த–22)

## 101 கிலோ கஞ்சா கடத்திய இந்தியர் மூவருக்கு பிணை

யாழ்ப்பாணம், டிசெ. 19

இந்தியாவிலிருந்து 101 கிலோ கிராம் கஞ்சாவை இலங்கைக்குக் கடத்தி வரும்போது கைது செய்யப்பட்டுத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 3 பேரும் யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

குறித்த 3 பேர் சார்பிலும் யாழ். மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த மேல்நீதிமன்ற ஆணையாளர் நேற்றுப் பிணை அனுமதி வழங்கினார்.

கடந்த வருடம் மே மாதம் 2 ஆம் திகதி இந்தியாவைச் சேர்ந்த நான்கு பேரும் யாழ்.வேலணையைச் சேர்ந்த 2 பேருமாக 6 பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் 101 கிலோ 800 கிராம் கஞ்சாவை இலங்கைக்குக் கடத்திய குற்றச்சாட்டில் நெடுந்தீவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

விளக்கமறியலில் இருந்து வந்த நிலையில் பல மாதங்களுக்கு முன்னர் வேலணையைச் சேர்ந்த 2 பேரும் யாழ்.மேல் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். ராமேஸ்வரம் பாம்பன் புதுக்கோட்டையைச் சேர்ந்த சேகர் ஜெயச்சந்திரன் சில மாதங்களுக்கு முன்னர் யாழ். மேல் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஏனைய 3 பேரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று அவர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ராமேஸ்வரம் பாம்பன் பகுதியில், தேக்குவாடியைச் சேர்ந்த பத்மநாதன் ராஜா, கே.கே.நகரைச் சேர்ந்த பேச்சிமுத்து சக்திமுருகன் மற்றும் வேலு பாலமுருகன் ஆகியோரே நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அவர்கள் தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையிலும், தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான இவ்விரண்டு ஆள் பிணைகளிலும் அவர்களில் ஒவ்வொருவர் இலங்கையை வசிப்பிடமாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

(த–4)

## ஹுனைஸுக்கு சிலாவத்துறையில் பெரும் வரவேற்பு

மன்னார், டிசெ.19

மன்னார் மாவட்டத்தின், முசலிப் பிரதேச சமூகத்தின் ஏற்பாட்டில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக்குக்குப் பெரும் வரவேற்பு நிகழ்வொன்று நடத்தப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை மாலை சிலாவத்துறையில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.

"இந்த நிகழ்வுக்கு மன்னார் எருக்கலம்பிட்டி, புதுக்குடியிருப்பு போன்ற கிராமங்களில் இருந்து வந்த மக்களை வடக்கு மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் அச்சுறுத்தி இடைமறித்த கோழைத்தனமான செயலை வன்மையாகக் கண்டிக்கின்றேன். இந்த நிகழ்வில் கலந்து கொண்டால் இனிவரும் காலங்களில் குறித்த கிராமத்திற்கு எவ்வித அபிவிருத்திப் பணிகளையும் தான் செய்ய மாட்டேன் என்றும் மீறிச் சென்றால் வாகனங்கள் சேதப்படுத்தப்படும் என்றும் அவர் அச்சுறுத்தியுள்ளார்" – என்று ஹுனைஸ் பாருக் அங்கு உரையாற்றினார்.

நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முசலி பிரதேச சபையின் முன்னாள் வேட்பாளர் றஸ்மி அப்துல் ரஸீத் கட்சியிலிருந்து விலகி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதற்காக தெரிவித்து ஹுனைஸ் பாரூக்குடன் இணைந்து கொண்டார்.

(ந-56)



# தீர்வு அறிவிப்பவருக்கே ஆதரவு

### சித்தார்த்தன் தெரிவிப்பு

வலி.வடக்கு, டிசெ.19

இனப் பிரச்சினைக்கும், தமிழ் மக்களின் நடைமுறைப் பிரச்சினைகளுக்கும் தீர்வை முன்வைக்கும் வேட்பாளருக்கே ஆதரவு வழங்கப்படும் என்று கூறியுள்ளார் புளொட் அமைப்பின் தலைவரும், வடக்கு மாகாண சபை உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைக்கும் வேட்பாளருக்கே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஆதரவை வழங்கும். இது தொடர்பில் தமிழ்க் கூட்டமைப்பு ஆராய்ந்து முடிவெடுக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடுதிரும்பியதும் இது குறித்து முடிவெடுக்கப்படும்– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களும் தமது பரப்புரைகளின் போது தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சாதகமான கருத்துக்களை கூறவில்லை. மாறாக, எதிர்மறையான கருத்துக்களையே தெரிவித்து வருகின்றனர். சிங்கள பெரும்பான்மையின மக்களின் வாக்குகளை பெறுவதற்காகவே இவ்வாறு எதிர்மறையான கருத்துக்களை இருபெரும் வேட்பாளர்களும் தெரிவித்து வருவதாகவே தெரிகின்றது."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"எதிர்மறையான கருத்துக்களை கேட்கும் சிங்கள மக்கள் தீர்வுக்கு இணங்கமாட்டார்கள். கடந்தகாலங்களில் இத்தகைய அனுபவங்களை நாம் பெற்றுள்ளோம். இந்த நிலையில் தீர்க்கமாக ஆராய்ந்தே தமிழ் தேசியக் கூட்டமைப்பு முடிவு எடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கும், அவர்களது நடைமுறைப் பிரச்சினைகளுக்கும் ஒரு நியாயமான தீர்வை முன்வைக்கக் கூடியவருக்கே கூட்டமைப்பு ஆதரவை வழங்க முடியும்."– என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"திட்டமிட்ட குடியேற்றங்களைத் தடுக்கும் வகையிலும், மீள் குடியமர்வை மேற்கொள்ளும் வகையிலும், செயற்படக் கூடியவருக்கே ஆதரவு அளிக்க முடியும். இத்தகைய பிரச்சினைக்கான தீர்வை தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிப்பவருக்கே ஆதரவு வழங்கும் சூழல் காணப்படுகின்றது."– என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ந-86)



## பொது எதிரணி வென்றால் பௌத்தருக்குச் சாவுமணி

### எச்சரிக்கின்றது பொது பல சேனா அமைப்பு

கொழும்பு, டிசெ, 19

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணி வெற்றி பெற்றால் இலங்கையில் வாழும் சிங்கள பௌத்தர்களுக்குச் சாவு மணி அடிக்கப்படும். இலங்கையிலும் ஐஎஸ்ஐஎஸ் அமைப்பு தலைதூக்கலாம். எனவே புலனாய்வுப் பிரிவினர் உஷாராக இருக்க வேண்டும் – இவ்வாறு கூறியுள்ளது பொதுபல சேனா அமைப்பு.

கொழும்பு, கிருலப்பனையில் அமைந்துள்ள அந்த அமைப்பின் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அந்தக் கட்சியின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து ஊடாக இலங்கைக்கு எதிரான சதித்திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. கோடிக்கணக்கான பணமும் பொது எதிரணிக்கு வந்து சேர்கின்றது. எனவே ஜனாதிபதித் தேர்தலில் இந்த அணி வெற்றி பெற்றால் அது சிங்கள பௌத்தர்களுக்கு நல்லதல்ல.

பொதுஎதிரணியைசுற்றிமுஸ்லிம், கிறிஸ்தவ அடிப்படைவாதச் சக்திகளே உள்ளன. புத்தர் மனித மாமிசம் உட்கொண்டார் எனப் பரப்புரை செய்த தௌஹீத்ஜமாத் அமைப்பு உட்பட முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புக்களும் கிறிஸ்தவ அடிப்படை வாத அமைப்புக்களுமே பொது எதிரணிக்கு ஆதரவு வழங்குகின்றன. இது மிகவும் பயங்கரமானது.

இந்தியாவிலும் உலகிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். முஸ்லிம் பயங்கரவாதம் வியாபித்துக் கொண்டு வருகின்றது. இலங்கையின் கிழக்கில் முஸ்லிம் பயங்கரவாத அமைப்புக்கள் தலைதூக்கி வருகின்றன என்று அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏயும் எச்சரிக்கை விடுத்துள்ளது. தொழில் செய்யாமல் கஷ்டப்படாமல் பணம் உழைக்கக் கூடியதுதான் பயங்கரவாதம். எமது உளவுப் பிரிவினர் உஷாராக இருக்க வேண்டும்"– என்று அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் பொதுபல சேனாவின் தேசிய அமைப்பாளர் விதாரன்தெனியே நந்ததேரர், நிர்வாகப் பணிப்பாளர் கலாநிதி டிலந்த விதானகே ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-10)

## முடிவை அறிவித்தோர் பாராட்டுக்குரியவர்கள்

### உலமா கட்சி கூறுகின்றது

கொழும்பு, டிசெ.19

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமது தெளிவான முடிவை அறிவுத்துள்ள அமைச்சர் அதாவுல்லா மற்றும் அமைச்சர் ஹிஸ்புல்லா ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள் என்று தெரிவித்துள்ளது உலமா கட்சி.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அந்தக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் ஒன்றில் கருத்துத்தெரிவிக்கும்போதே அதன் தலைவர் கலாநிதி முபாறக் அப்துல் மஜீத் மௌலவி இவ்வாறு தெரிவித்தார்.

"ஓர் அரசியல் கட்சி அல்லது அரசியல்வாதி முடிவொன்றை எடுத்தால் அதில் தெளிவாகவும், உறுதியாகவும் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாது தடுமாற்றம் கொண்டவர்களால் மக்களுக்கான உறுதியான அரசியலை ஒருபோதும் முன்னெடுக்க முடியாது. எமது முடிவில் வெற்றியும் வரலாம் தோல்வியும் வரலாம். அது இறைவன் புறமுள்ள விடயம். மனிதர்களாகிய நாம் உள், புறக் காரணிகளை வைத்து ஆராய்ந்து முடிவெடுத்தால் அதில் உறுதியாக இருக்க வேண்டும்"– என்று அவர் தெரிவித்துள்ளார்.

"சில முஸ்லிம் கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பதை முடிவெடுத்து விட்டு, அதை அறிவிக்கத் தைரியமில்லாது தினமும் ஐந்து நட்சத்திர விடுதிகளில் கூட்டம் கூடி மக்களை ஏமாற்றுகின்றனர். இத்தகையவர்களால் எவ்வாறு மக்களுக்கான துணிச்சல் மிக்க அரசியலைக் கொண்டு நடத்த முடியும்?"– என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

"அந்த வகையில் அமைச்சர் அதாவுல்லாவும் அமைச்சர் ஹிஸ்புல்லாவும் தமது நிலைப்பாடுகளை தெளிவாக மக்கள் முன் வைத்துள்ளனர். மக்களை ஏமாற்றாமல் அரசியல் செய்வோரை பாராட்டுவது நமது பண்பாடாகும்"– என்றும் அவர் குறிப்பிட்டார். (ந-10)

## ஹக்கீமின் ஆதரவு தேவையில்லை முஸ்லிம்களின் ஆதரவு எமக்குண்டு

### ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.19

இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்களின் ஆதரவு எப்போதும் எங்களுக்கு உண்டு. ஹக்கீமின் ஆதரவை நாம் கணக்கெடுக்கவும் இல்லை. கண்டுகொள்ளவும் இல்லை. – இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

"அமைச்சர் ஹக்கீமின் ஆதரவு தொடர்பாக அலட்டிக்கொள்ளவில்லை. முஸ்லிம்களின் ஆதரவு பொது எதிரணியினருக்குத்தான் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. தான் சார்ந்த சமூகத்தின் மீது எவ்வித அக்கறை இல்லாத அமைச்சர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம். உண்மையில் அவர் இன்று முஸ்லிம் சமூகத்தினரால் நிராகரிக்கப்பட்டு விட்டார். மதில் மேல் பூனை போல் எங்கு அதிக தொகை கிடைக்கும் பாயலாம் என்ற கொள்கையே ஹக்கீமின் கொள்கையாகும். முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு எமக்கு தேவையில்லை."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தனது முடிவை அறிவிப்பதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இழுத்தடித்து வருகின்றது. அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே லக்ஸ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"75 சதவீத முஸ்லிம்கள் பொது எதிரணியினரையே ஆதரிக்கின்றனர். கடந்த காலங்களில் 200 முஸ்லிம் பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டன. இது தொடர்பான அறிக்கையை ஐ.நா. சபைக்கு ஹக்கீம் கையளித்தார். அத்தோடு அளுத்கமவில் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஆணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என அரசை வலியுறுத்தினார். ஆனால் இன்று வரை இது தொடர்பில் எதுவுமே இடம்பெறவில்லை. முஸ்லிம்கள் மேலும் மேலும் ஹக்கீமை நம்பத் தயாரில்லை. நிராகரித்து விட்டனர். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல்களில் அவரது ஆதரவு தேவையில்லை"– என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-10)

# செய்திகள்

## கூட்டமைப்பின் மௌனம் சந்திரிகாவின் திட்டமே

### கடுமையாகச் சாடுகின்றது அரசு

கொழும்பு, டிசெ.19

சந்திரிகாவின் ஆலோசனையின் பிரகாரமே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனம் காக்கின்றது என்றும், இருதரப்புக்குமிடையில் இரகசிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது என்றும் அரசு குற்றஞ்சாட்டியது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் டிலான் பெரேரா இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

"13ஆம் திருத்தச் சட்டத்துக்கு நான் ஆதரவாளன். ஆனால், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையின் கீழே அது நடைமுறையில் இருக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் சந்திரிகாவுக்கும் இடையில் இரகசிய உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. இவற்றை நிறைவேற்றுவதற்கு சந்திரிகாவும் உடன்பட்டுள்ளார்.

இதனால் நாட்டை மீண்டும் பயங்கரமான நிலைக்குக் கொண்டுசெல்லவே இந்தக் கூட்டணி முயற்சிக்கின்றது."– என்று அவர் கூறியுள்ளார்.

"தேர்தல் அறிவிக்கப்பட்ட போது சுமந்திரன், மைத்திரிபாலவுக்கு ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்திருந்தார். ஆனால், தற்போது தீர்மானம் எடுக்கவில்லை என்று தெரிவிக்கின்றனர்.

வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மஹிந்தவை போர்க் குற்றச்சாட்டுகளுக்காக மின்சாரக்கதிரையில் அமர்த்துவதாக வடக்கில் பரப்புரை செய்துவருகின்றனர். "– என்றும் அவர் தெரிவித்தார்.

"த.தே.கூ. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை என்று மக்களை ஏமாற்றமுற்படுகின்றது.

த.தே.கூ. மைத்திரியை ஆதரிப்பதாக ஏற்கனவே முடிவு எடுத்துவிட்டது. எனினும், சந்திரிகாவின் உடன்படிக்கைக்கு அமைய அவர்கள் அதனை வெளிப்படையாகத் தெரிவிக்க மாட்டார்கள்.

காரணம், அவர்களுடைய உடன்படிக்கை தொடர்பில் தெற்கு மக்கள் அறிந்துகொண்டால் ஒரு வாக்கேனும் பொது எதிரணிக்குக்கிடைக்காது என்பதனாலாகும்."– என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கக்கூடிய சக்தி மஹிந்த ராஜபக்ஷவுக்கே உள்ளது. அவரே இறுதியாக நிறைவேற்று ஜனாதிபதியாக இருப்பார். ஏனெனில், அவர் அடுத்த பதவிக் காலத்தில் அதனை முடிவுக்குக் கொண்டு வருவார்" – என்று அவர் அங்கு மேலும் கூறியுள்ளார்.

(ற–சி)

## அரசை கைவிட்டு வெளியேற 20 அமைச்சர்கள் இணக்கம்

### ராஜித சேனாரத்ன எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.19

அரசில் இருந்து வெளியேற 20 அமைச்சர்கள் இணங்கியுள்ளனர் என்றும் அவர்களில் தம்புள்ளையில் அழும் அமைச்சரும் ஒருவர் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன.

"எம்முடன் வருவதாக கூறி குறித்த அரசியல்வாதி அழும் போது மக்கள் அவரது கண்ணீரைத்துடைக்கநேர்ந்துள்ளது. அதேவேளை தானே முதலில் வெளியேறுவேன்என்று அமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார். எனினும் அரசில் இருந்து வெளியேற அவர் தற்போது அஞ்சுகிறார்"– என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காணி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோனையே ராஜித சேனாரத்ன தம்புள்ளையில் அழும் அமைச்சர் என கூறியுள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் இதுவரை பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து அரசில் இருந்து 111 மக்கள் பிரதிநிதிகள் விலகியுள்ளனர்.

இவர்களில் 4 பேர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், மூன்று பேர் பிரதியமைச்சர்கள், 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பதுடன் ஏனையோர் மாகாண சபைகள் மற்றும் ஏனைய உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள்.

இதனைத் தவிர தேர்தல் தொகுதிகளில் அரசியல் செல்வாக்கு மிக்க தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் முன்னாள் மக்கள் பிரதிநிதிகள் பலர் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து எதிரணியில் இணைந்துள்ளனர். எனினும் எதிர்க்கட்சிகளில் இருந்து 24 பேர் மாத்திரமே அரசில் இணைந்துள்ளனர். (ற)

## மைத்திரியின் பேச்சை விளம்பரப்படுத்த தடை



கொழும்பு, டிசெ.19

வேட்பாளர் ஒருவரின் அனுமதியின்றி அவரது முன்னைய கருத்துகளை, மற்றைய வேட்பாளரின் பரப்புரைக்கு விளம்பரமாகப் பயன்படுத்த வேண்டாம் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ஊடகங்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தான் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் இருந்த போது அமைச்சராக இருந்து பேசிய கருத்துக்களில் சிலவற்றைத் தெரிவு செய்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பரப்புரைக்கு விளம்பரமாக பயன்படுத்துவதை நிறுத்துமாறு பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தேர்தல்கள் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்ததை அடுத்தே இந்த அறிவிப்பை ஆணையாளர் ஊடகங்களுக்கு விடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கு முன்னர் அரசியல்வாதி ஒருவரால் வேறு ஒரு வேட்பாளர் தொடர்பில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் மற்ற வேட்பாளரின் பரப்புரைக்காகவோ, விளம்பரத்துக்காகவோ பயன்படுத்துவதாயின் தொடர்புபட்ட அரசியல்வாதியின் அனுமதியுடனேயே அது இடம்பெற வேண்டும். கருத்து வெளியிட்டவரின் அனுமதியின்றி வெளியிட வேண்டாம் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ஊடகங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ற)

## சிகரெட் விநியோகம் தொடர்பில் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.19

உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைய சிகரெட் பெட்டிகளில் 60 சதவீத எச்சரிக்கை அறிவித்தலின்றி புகைபொருள் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி முதல் இந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் தற்சமயம், நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## பொறுப்பற்ற பொலிஸாருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

### பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.19

தேர்தல் பதாகைகள் மற்றும் சுவரொட்டிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காத பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித்ரோகண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"இன்னும் சில இடங்களில் பதாகைகள். சுவரொட்டிகள் அகற்றப்படாமல் இருக்கலாம். அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எனினும் அவற்றை அகற்றுவதற்கு எந்தவொரு பொலிஸ் அதிகாரியும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பாராயின் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பொலிஸ் மாஅதிபரின் ஊடாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு இது தொடர்பாக கடுமையான அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. வன்முறைகள் மற்றும் குழப்பநிலைகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.


தேர்தல் வாக்களிப்பு மையங்கள் ஒவ்வொன்றிலும் தலா இரண்டு ஆயுதம் தரித்த பொலிஸ் அதிகாரிகளைப் பணியில் ஈடுபடுத்துவதற்கு எண்ணியுள்ளோம்.

பொதுவாக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கைத்துப்பாக்கிகளே வழங்கப்படுகின்றது. ஆனால் இந்த முறை ஜனாதிபதி தேர்தலின் போது அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் 'ரி–56' ரக துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளன."– என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு மூன்றாவது முறையாகவும் பதவி நீடிப்பு

எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதியுடன் சேவையில் இருந்து கட்டாய ஓய்வுபெற வேண்டிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்கவுக்கு மீண்டும் 6 மாத சேவை நீடிப்பை வழங்குமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பரிந்துரைத்துள்ளார் என்று பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதனடிப்படையில், இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் வரலாற்றில் மிக நீண்டகால சேவை நீடிப்பைப் பெற்றவர் என்றசாதனையை அனுர சேனாநாயக்க படைத்துள்ளார். அனுர சேனாநாயக்கவுக்கு மீண்டும் சேவை நீடிப்பு வழங்கப்படுவதைப் பொலிஸ் மா அதிபர்



எதிர்த்துள்ள போதிலும், சேவை நீடிப்புக்கான அமைச்சரவையின் அனுமதியை பெறுவதற்காக ஜனாதிபதியே நேரடியாக அமைச்சரவை பத்திரத்தை தாக்கல் செய்ய உள்ளார் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

பாதுகாப்புச் செயலாளர் உட்பட ராஜபக்ஷவினருக்கு மிக நெருக்கமான அனுர சேனாநாயக்கவுக்கு ஏற்கனவே மூன்று முறை சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. இலங்கை அரச சேவையில் ஓய்வுபெறும் வயதான 60 வயதையும் தாண்டியுள்ள அனுர சேனாநாயக்க இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பணியாற்றும் வயது முதிர்ந்த அதிகாரி எனக் கூறப்படுகிறது. (ற)

CIMA
Chartered Institute of Management Accountants

WISDOM BUSINESS ACADEMY | JAFFNA

12 | THE LARGEST CIMA BUSINESS SCHOOL IN SRI LANKA



# CIMA 2015

## WISDOM is ready for the new revolution... Are you..?

| | |
|---|---|
| Syllabus | Changed |
| Assessment | Changed |
| Delivery | Changed |
| Course Fee | Not Changed |

**Operational Level Commencement Dates:**
- OTQ Teaching: 27th December 2014
- Case Study Teaching (May 15' Exam): 14th March 2015

**Management Level Commencement Dates:**
- OTQ Teaching: 27th December 2014
- Case Study Teaching (May 15' Exam): 15th March 2015

**Strategic Level Commencement Dates:**
- OTQ Teaching: 27th December 2014
- Case Study Teaching (August 15' Exam): 6th June 2015

A special discussion with CIMA after results students about your future path with CIMA 2015 syllabus.
Date - 20.12.2014
Time - 9.30 a.m onwards
Place - Wisdom Academy, Jaffna.

We are ready..!
Call us to guide you better
021 2 220 727, 021 7 200 777
www.wisdombusiness.com

Sagittarius.Aim

Wisdom Business Academy - Jaffna
The Specialist in CIMA Education
154 A/1, Navalar Road, Jaffna.
E: info@wisdombusiness.com
Telephone: 021 2 220 727, 021 7 200 777
ROBERT GORDON UNIVERSITY ABERDEEN



## இன்று முதல்

# மாபெரும் நத்தார் நிகழ்ச்சி 2014

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் அமைந்துள்ள திடலில் டிசம்பர் மாதம் 19ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. இதில் மாபெரும் நத்தார் தோரணம், நத்தார் மரம், அலங்காரமாக வடிவமைக்கப்பட்ட மாட்டுத்தொழுவம் கரோல், சங்கீத நிகழ்ச்சி மற்றும் ஒவ்வொரு நாள்களும் இலங்கையில் மிகப்பிரசித்தி பெற்ற இசைக்குழுவினால் முன்னெடுத்துச் செல்லப்படும் இசை இரவு நடைபெற உள்ளது.

## பிரவேசம் இலவசம்

நிகழ்ச்சி நடைபெற உள்ள இடத்தில் சிறு கடைகள் பெற்றுக் கொள்ள வேண்டுமானால்

**விவரங்களுக்கு: 076 690 7496**



**டிஜிட்டல் திரைகளில் விளம்பரம் செய்ய வேண்டுமானால்: 076 690 7375**

**டிசம்பர் மாதம் 25ஆம் திகதி நாடு முழுவதும் தேசிய ரூபவாஹினி, நேத்ரா அலைவரிசைகள் மூலம் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும்.**

(பி18734)(12.3)

# தொடர்ச்சிகள்

# அடுத்தாண்டு பட்ஜெட்டில் பயனுள்ள விசேட திட்டங்கள்

## நேற்றைய குழுநிலை விவாதத்தில் சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 19

வவுனியா, சாவகச்சேரியில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவு ஸ்தாபிப்பு மாங்குளத்தில் வடக்கு மாகாண புனர்வாழ்வு வைத்தியசாலை நிர்மாணம் கல்மடுநகர் பிரதேசத்தில் மூலிகைக் கிராமம் அமைக்கப்படும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சால், அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் பல்வேறு விசேட திட்டங்களும், வைத்தியசாலைகளுக்கான சத்திரசிகிச்சை கூடங்கள் அமைப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் வடக்கு மாகாணத்துக்குரிய 5 ஆண்டுகால சுகாதாரத் திட்டமும் சபையில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

வடக்கு மாகாண வரவு – செலவுத் திட்டம் மீதான விவாதம் நேற்று முன்தினம் புதன் கிழமை தொடக்கம் நடைபெற்று வருகின்றது. நேற்று மதியம், சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூக சேவைகளும் புனர்வாழ்வளித்தலும், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சு மீதான குழு நிலை விவாதம் இடம்பெற்றது.

இதில் கடந்த ஆண்டு செய்யப்பட்ட வேலைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்களைச் சமர்ப்பித்து அமைச்சர் ப.சத்தியலிங்கம் உரையாற்றினார். அதில் அவர் பின்வரும் முன்மொழிவுகளைச் சமர்ப்பித் தார்.

**சுகாதாரத் திணைக்களம்**

மல்லாவி, புதுக்குடியிருப்பு, முருங்கன் பிரதேச வைத்தியசாலைகளுக்கு 20 மில்லியன் ரூபா செலவில் சத்திர சிகிச்சை விடுதி அமைக்கப் பட்டு ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்த நடவடிக்கை.

வவுனியா மாவட்டத்தில் கணேசபுரம் பகுதியில் புதிய ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவு அமைக்க 15 மில்லியன் ரூபாவும், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் விசேட வைத்திய நிபுணர்களுக்கான வைத்திய விடுதி மற்றும் உளநல விடுதி அமைக்க 50 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு. சுகாதார கட்டமைப்பு மேம்பாட்டிற்கு 285.14 மில்லியன் ரூபாவும், தாய் சேய் நல சுகாதாரம் மற்றும் போசாக்கு மேம்பாட்டுக்கு 37.05 மில்லியன் ரூபாவும், தொற்று நோய்களை கட்டுப்படுத்தல் மற்றும் தடுத்தலுக்கு 11.7 மில்லியன் ரூபாவும், தொற்றா நோய்களை கட்டுப்படுத்தல் மற்றும் தடுத்தலுக்கு 26.17 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்க 200 மில்லியன் ரூபாவும், சாவகச் சேரி வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்க 115 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் 2017 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்படும்.

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு கட்டத் தொகுதியொன்று அமைக்க 60 மில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் மருத்துவ சிகிச்சை விடுதித் தொகுதி அமைக்க 80 மில்லியன் ரூபாவும், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் மருத்துவ சிகிச்சை விடுதித் தொகுதி அமைக்க 138 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீட்டுக்கான முன்மொழிவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**மாங்குளத்தில் புனர்வாழ்வு வைத்தியசாலை அமைக்க 70 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.**

சுதேச மருத்துவத் திணைக்களம்

யாழ்.மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு அமைக்க 7 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. உள்ளக விடுதி அமைக்க, கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலைகள் ஒவ்வொன்றுக்கும் 7 மில்லியன் ரூபாவும், கொடிகாமம் கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலைக்கு 5 மில்லியன் ரூபாவும், யோகபுரம் வைத்தியசாலைக்கு 3 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்மடுநகர் பிரதேசத்தில் மூலிகைக் கிராமம் அமைக்க 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

சமூகசேவைகள் திணைக்களம்

போருக்கு முன்னர் இயங்கிய முதியோர் இல்லம் மற்றும் மாற்றுவலுவுள்ளோர் இல்லங்கள் அனைத்தையும் புனரமைப்புச் செய்தல்.

உளநல நெருக்கீட்டிற்குச் சிகிச்சை பெற்று குணமாகிய மக்களுக்கான தனியான அரச வாழிடம்.

சிறுவர் நன்னடத்தை திணைக்களம்

சிறுவர் இல்லங்களிலுள்ள ஆதரவற்ற பிள்ளைகளுக்கு பரிமாண நன்கொடையாக ஆயிரம் ரூபா மாதாந்தம் வழங்குதல் அத்துடன் தனிப்பட்ட நன்கொடையாக துணிமணிகள் கொள்வனவு செய்தல், சமையல் உபகரணங்கள் வாங்குதல், தளபாடங்கள் கொள்வனவு செய்தல் போன்றவற்றுக்கு ஒரு லட்சம் ரூபாவையும், கட்டங்கள் புனரமைப்புக்கு 2 லட்சம் ரூபாவையும் வருடாந்தம் வழங்குதல். நீதிமன்றங்களால் பொருத்தமான நபராக தீர்மானிக்கப்படுவர்களின் சிறுவர்களுக்கான கொடுப்பனவாக ஆயிரம் ரூபா மாதாந்தம் வழங்குதல்.

அமைச்சர் ப.சத்தியலிங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி முன்மொழிவுகள் ஏகமனதாக உறுப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அத்துடன் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பலரும், சுகாதார அமைச்சின் செயற்பாடுகளை பாராட்டிக் கருத்துக்களையும் வெளியிட்டனர். (ற–5)

---

### மைத்திரிபாலவுடன்

குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் விதத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

சிலாபத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கூட்டமைப்பு – மைத்திரி இரகசிய உடன்படிக்கை குறித்து மஹிந்த தெரிவித்திருந்தார். நேற்று அம்பாறை மாவட்டத்தி லுள்ள ஆலையடிவேம்பு பிரதேச சபையில் அரசியல் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே மஹிந்தவின் குற்றச்சாட்டுக்குச் சுமந்திரன் பதிலளித்தார்.

நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், ரெலோ இயக்க செயலாளர் நாயகம் ஹென்றி மகேந்திரன், கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் செயலாளருமான துரைராஜ சிங்கம் த.கலையரசன், இராஜேஸ்வரன் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

செய்தியாளர் சந்திப்பில் சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டமைப்புக்கும் மைத்திரிபாலவுக்கும் இடையே இரகசிய ஒப்பந்தம் இருக்கிறது என்றும் அதற்குத் தன்னிடம் ஆதாரங்கள் இருக்கின்றன என்றும் மஹிந்த ராஜபக் ஷ கூறியிருப்பது முழுக்கமுழுக்கப் பொய். இதுவரைக்கும் நாங்கள் எவருடனும் எந்த ஒப்பந்தமும் செய்யவில்லை. தான் பாமர சிங்கள மக்களிடையே வாக்குகளைப் பெறவேண்டும் என்ற கபட நோக்கத்தோடு வெறும் பொய்களை பரப்பி வருகின்றார் மஹிந்த.

ஒப்பந்தம் குறித்த ஆதாரங்களை உரிய நேரம் வரும்போது அறிவிப்பதாகவும் சொல்லியிருக்கின்றார். நான் அவருக்குச் சவால் விடுக்கிறேன். உரிய நேரம் இதுதான். எங்கே முடிந்தால் ஒப்பந்தம் தொடர்பான ஆதாரங்களைப் பகிரங்கப்படுத்துங்கள் பார்க்கலாம்.

வெறும் பொய்களைச் சொல்லியே வாக்குத்தேடும் ஜனாதிபதியினை இந்த நாடு பெற்றிருப்பதனை இட்டு கடும் மனவேதனை அடைகிறோம் – என்றார் சுமந்திரன். (உ–40)

### யாழில்

ஜனாதிபதியின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் இடம்பெற்றிருந்தது. இந்தக் கூட்டங்களை முடித்துக்கொண்டு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று இரவு யாழ்.மாவட்டத்துக்கு வந்திருந்தார். உயர்பாதுகாப்பு வலயத்தினுள்ள தல்செவன விடுதியில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதேச சபை உறுப்பினர்களைச் சந்தித்து அவர் கலந்துரையாடியுள்ளார்.

இதன் போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தான் வெல்லுவேன் என்றும் உறுப்பினர்களை நம்பிக்கையாக, தனக்காக தேர்தல் பரப்புரை வேலைகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அத்துடன் எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதி, யாழ்.மாவட்டத்தில் இடம்பெறவுள்ள தேர்தல் பரப்புரைக் கூட்டங்களுக்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் அவர் பணித்துள்ளார் என்று தெரியவருகின்றது.(ற–5)

### தீவிரம்

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சராசரியாக 5 பேருக்கும் குறைவானவர்களே டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வந்தனர் என்றும், தற் போது அந்த எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது பெய்துவரும் மழையை அடுத்து டெங்கு தொற்றுக்குள்ளாவது அதிகரித்துள்ளது என்று தெரிவித்துள்ள சுகாதாரப் பகுதியினர், அனைத்து சுகாதார வைத்திய பிரிவில் இருந்தும் டெங்குத் தொற்றுக்கு உள்ளானவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர்.(ற–4)

### வடக்கில்

என்றும் சுட்டிக்காட்டினார்.

"நான் அதிகமாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பணியாற்றியுள்ளேன். வவுனியா தெற்கு பிரதேச சபைப் பகுதிக்குச் சென்றபோது, அங்குள்ள மிகவும் நல்ல இளைஞர் ஒருவர், "ஏன் வெளியிலிருந்து கொண்டுவந்து இங்கு குடியேற்றுகின்றீர்கள்?" என்று கேட்டார். இது குறித்து மீள் குடியேற்ற அமைச்சிடம் நான் விசாரித்தபோது, "இது எமது அமைச்சால் இடம்பெறும் செயல் அல்ல. வேறு நபர்கள்தான் இதைச் செய்கின்றனர்" என அமைச்சிலிருந்து தகவல் கிடைத்தது. வெளியிலிருந்து எவரையும் குடியமர்த்த மாட்டோம் என நாம் உறுதியளித்துள்ளோம். "– என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்பு – 07இலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'நாமல் கம' என வடக்கில் ஒரு கிராமத்துக்கு பெயரிடப்பட்டுள்ளது. எதற்கு அந்தப் பெயர் வைக்கப்பட்டுள்ளது? அது தவறு. நாமலுக்கு என்ன நடந் தது? வடக்கிலுள்ள அனைவரும் இது தவறு எனக் கூறுகின்றனர். அங் குள்ள சிங்கள மக்களும் இதைத்தான் கூறுகின்றனர். – என்றும் அவர் தெரிவித்தார்.

"மேலதிக இடங்களை எமது பிள்ளைகளுக்குக் கொடுங்கள். அல்லது தமிழ், முஸ்லிம் மக்களுக்கு வழங்குங்கள். ஏன் வெளியிலிருந்து மக்களைக் கொண்டுவந்து குடியமர்த்துகின்றீர்கள்" என்று கேட்கின்றனர். மக்களுக்கும், நாடாளுமன்றத்துக்கும் அறிவிக்காமல் மிகவும் இரகசியமான முறையில் இது செய்யப்படுகின்றது" – என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(ற–சி)

### பொலிஸார்

மயங்கிச் சரிந்துவிட்டார். அவரை ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்துச் சிகிச்சை மேற்கொண்டபோதும் அவர் உயிரிழந்துவிட்டமை உறுதி செய்யப்பட்டது.

விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த பூநகரி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலநறுவை செவனகல பகுதியைச் சேர்ந்த பண்டாரலாகே புண்ணியரத்ன (வயது 25) என்பவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 13 ஆம் திகதி பூநகரி பொலிஸ்நிலையத்திலிருந்து பொலிஸ் அத்தியட்சகரது அலுவலகத்துக்குச் சென்றுகொண்டிருந்தபோது எதிரே வந்த வாகனத்துடன் விபத்துக்குள்ளானார். அவர் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டன. (ற–4)

### கூட்டமைப்பு

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எமது தேசிய அரசில் ஒற்றுமையும் சமத்துவமுமே நிலை நாட்டப்படும். தேசிய அரசில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உண்மையான ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம். பொது எதிரணியின் வெற்றியில் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் பங்கெடுக்கும் என நம்புகின்றோம். சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து அனைத்து மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் அரசொன்றினை உருவாக்குவதே பொது எதிரணியின் பிரதான இலக்கு. நாட்டைச் சரியான பாதையில் வழி நடத்தவேண்டும். மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். அதற்காகவே நாம் ஆட்சி மாற்றத்துக்கான போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட தமிழ்ப் பிரதிநிதித்துவம் சரியான முடிவை எடுக்கும் என எமக்கு நம்பிக்கை உண்டு. அதேபோல் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவமும் தற்போது சரியாகச் செயற்படவேண்டும் என வலியுறுத்துகின்றோம். எமது தேசிய அரசில் சிங்களப் பிரதிநிதித்துவத்தின் ஒத்துழைப்பு எவ்வாறோ அதே போல் தமிழ் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவமும் மிகச் சரியானதாகவும் உதவக் கூடிய வகையிலும் அமைய வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகள் எமது தேசிய அரசில் உண்மையானதாகவும் ஆதரவாகவும் செயற்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு– என்றார். (த–10)

### ஜனாதிபதி

என்றும் அவர் கூறியுள்ளார்.

ஊழல், மோசடி மிக்க இந்த குடும்ப ஆட்சிக்கு முடிவுகட்ட சிங்கப்பூர் அல்ல, நரகத்திற்குச் சென்று பேச்சு நடத்தவும் தயார் என்றும் தெரிவித்துள்ளார்.


கொழும்பு – 07இலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

"சிங்கப்பூரில் பேச்சு நடத்தப்பட்டு சூழ்ச்சி இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. இந்த அரசின் ஆட்சிக்கு முடிவு கட்ட சிங்கப்பூர் அல்ல, நரகத்திற்கும் சென்று பேச்சு நடத்த நான் தயாராகவே உள்ளேன். நாம் சிங்கப்பூரில் எவ்வித பேச்சும் நடத்தவில்லை. எமது இந்தத் திட்டத்துக்கான அரைவாசி நடவடிக்கை நாடாளுமன்றத்துக்குள்ளேயே இடம்பெற்றது. அத்துடன், ஏனைய அரைவாசி நடவடிக்கை ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் இடம் பெற்றது. அதைவிடுத்து, இந்தத் திட்டம் குறித்து வேறெங்கும் பேச்சு நடத்தப்படவில்லை. எமக்குள்ள ஜனநாயக உரிமைகளுக்கமையவே இந்தப் பேச்சு இடம்பெற்றது.

நான் சிகிச்சைகளுக்காக சிங்கப்பூர் சென்றேன். அதுபோல சரத் பொன்சேகாவும் சிகிச்சைக்காக சிங்கப்பூர் வந்தார். அதைவிடுத்து, எந்தப் பேச் சும் சிங்கப்பூரிலோ அல்லது வேறெந்த வெளிநாட்டிலோ இடம்பெறவில்லை" – என்று அவர் தெரிவித்தார்.

(ற–சி)

# விளையாட்டு



## திருமணத்துக்கு முன் சேர்ந்திருக்க திட்டமிட்ட அனுஷ்கா, கோஹ்லி

இந்திய கிரிக்கெட் அணியின் வீரர் விராட் கோஹ்லியும், அவரது காதலியான நடிகை அனுஷ்கா சர்மாவும் சேர்ந்து வாழ முடிவெடுத்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய கிரிக்கெட் அணியின் துணை அணித் தலைவராக இருப்பவர் விராட் கோஹ்லி. இவரும் பிரபல ஹிந்தி நடிகை அனுஷ்கா சர்மாவும் காதலித்து வருகின்றனர்.

இந்நிலையில் இவர்கள் திருமணத்துக்கு முன்னே சேர்ந்து வாழப் போவதாக பிரபல ஆங்கில பத்திரிக்கை ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளது.

அனுஷ்காவும், கோஹ்லியும் பிரபல்மாக இருப்பதால் இருவருக்கும் நேரம் கிடைப்பதில்லை. அதனால் இருவரும் தங்களுக்குக் கிடைக்கும் நேரத்தை ஒன்றாகச் செலவிட அனுஷ்கா தனது அடுக்கு மாடிக் குடியிருப்பின் பக்கத்தில் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தியுள்ளார்.

சமீபத்தில் இருவரும் தங்களின் விடுமுறை நாள்களை பார்சிலோனாவில் செலவிட்டனர். ஆனால் இது பற்றி ஊடங்களுக்குத் தெரியாமல் பார்த்துக் கொண்டனர்.

அதேபோல விராட் இலங்கை தொடரில் கோஹ்லியின் ஆட்டத்தைப் பார்க்க அனுஷ்கா சென்றிருந்தார். அப்போது சதம் அடித்த கோஹ்லி அனுஷ்காவுக்குப் பறக்கும் முத்தம் கொடுத்தார்.

மேலும் சமீபத்தில் பிரபல தொலைக்காட்சி ஒன்று அனுஷ்காவை, விராட் கோஹ்லியின் பெற்றோர்கள் ஏற்றுக் கொண்டதாகவும், விரைவில் திருமணம் நடக்க விருப்பதாகவும் தெரிவித்திருந்தது. (த)

# ஓய்வு குறித்து முடிவில்லை



ஒரு நாள் கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெறுவது குறித்து நான் இன்னமும் தீர்மானிக்கவில்லை என இலங்கைஅணியின்சகலத்துறை வீரர் திலகரட்ன டில்ஷான் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 7ஆவதும் இறுதியுமான போட்டி கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் இடம் பெற்றது.

இந்தப் போட்டியில்இலங்கை அணி 87 ஓட்டங்களால் வெற்றி பெற்றது தொடரை 5:2 என கைப்பற்றியது.

இந்தப் போட்டியில் 101 ஓட்டங்களைப்பெற்றடில்ஷான் போட்டியின் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டதோடு தொடரின் ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து ஊடகவியலாளர்களைச் சந்தித்த டில்ஷான் தனது ஓய்வு குறித்து கருத்து கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தத் தொடரில் நூறு ஓட்டங்களைப் பெற்றது சிறப்பானதொன்றாகும். இந்தத் தொடரில் சகலத்துறையில்சிறப்பாகச்செயற்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இளைய வீரர்கள் சிறப்பாக விளையாடுகின்றனர். இவர்களுடன் சேர்ந்து உலகக் கிண்ணத் தொடரை வெல்வது தொடர்பான சிந்தனைகளே உள்ளன. மேலும் ஒரு நாள் அரங்கில் நான் ஓய்வு பெறுவது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை. எனது உடல் நிலை நன்றாகவே உள்ளது.

எதிர்வரும் உலகக் கிண்ணத் தொடருக்கு பின்னர் எதுவரை என்னால் விளையாட முடியுமோ அதுவரை விளையாடுவேன். அதற்குப் பின்னரே ஒரு நாள் அரங்கில் ஓய்வு பெறுவது குறித்த தீர்மானத்தை எடுப்பேன்– என்றார். ஒரு நாள் அரங்கில் 300 போட்டிகளில் விளையாடியுள்ள டில்ஷான் துடுப்பாட்டத்தில் 18 சதங்கள் 41 அரைச் சதங்கள் அடங்கலாக 9004 ஓட்டங்களைக் கடந்துள்ளார்.

2012 பெப்ரவரி 28 ஆம் திகதி ஆஸ்திரேலியா ஹோபார்ட் மைதானத்தில் இந்தியாவுக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் ஆட்டமிழக்காது 160 ஓட்டங்களைப் பெற்றதே அவர் ஒருநாள் தொடரில் பெற்ற அதிகூடிய ஓட்ட பிரதியாகும்.

மேலும் பந்து வீச்சில் 300 போட்டிகளில் பங்குபற்றி 93 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளதோடு களத்தடுப்பில் 109 பிடியெடுப்புக்களை எடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த)

## ஜெமி கோவ் ஓய்வு

நியூஸிலாந்து அணி வீரர் ஜெமி கோவ், தான் சகல வித கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். கிரிக்கெட்டை தாண்டி தனக்கு நல்ல தொழில் வாய்ப்புக் கிடைத்தமையே தான் விலக காரணம் என ஜெமி கோவ் தெரிவித்துள்ளார். டொயாட்டோ நிறுவனத்தில் ஜெமி கோவ்வுக்கு உயர் பதவி ஒன்று கிடைத்துள்ளது. இந்த நிலையில் 33 வயதான அவர் தன் எதிர்காலத்தை கருத்தில் கொண்டும், தன்னுடைய குடும்பத்தைகருத்தில்கொண்டும் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார். நியூஸிலாந்து அணியில் இலங்கை அணிக்கு எதிரான போட்டியில் ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் மூலமாக சர்வதேசக் கிரிக்கெட் அறிமுகத்தை மேற்கொண்ட ஜெமிகோவ், 19 டெஸ்ட்போட்டிகளில் விளையாடி 772 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். 41 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 1,046 ஓட்டங்களைப் பெற்றுள்ள அதேவேளை– 5 20/20 சர்வதேசப் போட்டிகளில் 56 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். உள்ளூர்ப்போட்டிகளில் விளையாடி வந்த இவர் 2011ஆம் ஆண்டுக்குப்பின்னர்நியூஸிலாந்துஅணிக்காகவிளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த)



## நியூஸிலாந்து அசத்தல்



நியூஸிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான நான்காவது ஒருநாள் சர்வதேசப் போட்டி நேற்று முன்தினம் புதன்கிழமை அபுதாபியில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணி அபாரமாக துடுப்பெடுத்தாடியபோதிலும் 7 ஓட்டங்களினால் நியூஸிலாந்து அணி வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதன்பிரகாரம், கனே வில்லியம்ஸனின் அதிரடி துடுப்பாட்டத்தின் உதவியுடன், 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 299 ஓட்டங்களைக் குவித்தது. நியூஸிலாந்து அணிசார்பில் கனே வில்லியம்ஸன் 123 ஓட்டங்களையும் மார்டின் குப்தில் 58 ஓட்டங்களையும் அதிகூடியதாகப் பெற்றுக்கொண்டனர்.

பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சாளர்களான மொஹமட் இர்பான் 2 விக்கெட்டுக்களையும் சொஹைல் தன்வீர், அன்வர் அலி, ஷஹீட் அப்ரிடி ஆகியோர் தலா ஓர் விக்கெட்டைக் கைப்பற்றினர்.

300 என்ற இமாலய வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 292 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 7 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக் கொண்டது. பாகிஸ்தான் அணிசார்பில் யூனுஸ்கான், பொறுமையாக துடுப்பெடுத்தாடி 103 ஓட்டங்களைக் குவித்து ஆட்ட மிழந்தார். அதிரடியாக ஆடிய அப்ரிடி 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

நியூஸிலாந்து அணி சார்பில் டானியல் வெற்றோரி 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் நாயகனாக நியூஸிலாந்துஅணியின்கனேவில்லியம்ஸன்தெரிவானார். 5 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் 4 போட்டிகளின் நிறைவில் இரு அணிகளும் தலா 2 வெற்றிகளைப் பதிவு செய்துள்ளனர். (த)

19 DEC 2014

# செய்திகள்

## மேசைப்பந்தாட்ட நிகழ்வுகள் இன்று

சர்வதேச மேசைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட தரம் 1 பயிற்றுநர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்த யாழ்.மாவட்டத்தைச் சேர்த்த 20 பேருக்குமான சன்றிதழ் வழங்கும் நிகழ்வு மற்றும் இலங்கை மேசைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 13 பாடசாலைகளுக்கு மேசைப்பந்தாட்ட மேசை வழங் கும் நிகழ்வு ஆகியன இன்று வெள்ளிக் கிழமை யாழ்.மத்திய கல்லூரி றொமெய்ன் மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதனைத்தொடர்ந்து 8 வயது, 10வயது, 12வயது, 15வயது, 18வயது, 21 வயது ஆண் பெண் இருபாலாருக்குமான தேசிய மட்ட மேசைப் பந்தாட்டப் போட்டி இடம் பெறவுள்ளது.

இன்று வெள்ளிக் கிழமை பெண்களுக்கான போட்டியும், நாளை சனிக் கிழமை ஆண்களுக்கான போட்டியும் இடம்பெறவுள்ளன. மேற்படி போட்டியில் 300க்கு மேற்பட்ட வீரவீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(த–23)


**விசேட கருத்தரங்கு**

★ ஆசிரியர் தெரிவுப் பரீட்சைக்கு
சனி, ஞாயிறு
9.00 - 1.30 வரை

★ கிராமசேவை வினைத்திறன்
சனி ஒரு மணி

**யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு**
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)
075 4164564



**காணி விற்பனைக்கு**

மருதனார் மடம் கே.கே.எஸ். வீதியில் பிரதேச சபைக்கு முன்பாக 2 ஆவது காணி 2 பரப்பு விற்பனைக்கு உண்டு

தொடர்பு : 077 861 9891


## நியூசிலாந்து பறந்தது இலங்கை கிரிக்கெட் அணி

இலங்கை கிரிக்கெட் அணி நேற்றுக் காலை நியூசிலாந்து பயணமானது.நியூசிலாந்து அணியுடன் 7 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக இலங்கை அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி கிறைஸ்ட் சேர்ச்சில் தொடங்குகிறது. இதற்கு முன்பு குயின்ஸ்டவுணில் இரு அணிகளும் எதிர்வரும் 21 ஆம் திகதி பயிற்சிப் போட்டியில் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)


**பாராட்டி அகமகிழ்கின்றோம்**

எமது பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை புரியும் **இராசரத்தினம் பரணிகரன்** அவர்கள் 17.12.2014 அன்று பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கொழும்பு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பொது நிர்வாக முதுமாணி பட்டம் பெறுவதையிட்டு அவரை வாழ்த்துவதுடன், நாமும் அகமகிழ்கின்றோம்.



**தலைவரும், அனைத்து உத்தியோகத்தர்களும்**
**உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்**
**பிரதேச செயலகம்-பூநகரி.**

Best Wishes



**சமையல்காரர் (Cook) தேவை**

யாழ். நகரில் முதல்தர நிறுவனமான Tilko Hotel லின் வெள்ளைக் கடற்கரையில் (சாட்டி) அமைந்துள்ள Restaurant இற்கு 5-10 வருட அனுபவம் மிக்க சமையல்காரர் தேவை. கடல் உணவு சமைப்பதில் வல்லுனராக இருத்தல் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
T.P: 070 250 2505
E.mail:- tilko.tilak@gmail.com

(53075) (10)



**INFORMATION TECHNOLOGY PARK**
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Telecommunication & Information Technology

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, SriLanka.

Office : 021 222 3641
Fax No : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

JANUARY BATCH
- Dip.in Microsoft Office
- Dip.in Desktop Publishing
- Dip.in Information Technology
- Dip.in Computer Programming

Online Course
- Dip.in PC Application & Office Management

Languages
- VB.Net
- PHP
- C Sharp
- Java

Workshops
- Internet & e-mail
- Webpage Designing & Development

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் | 24-01-15 |
| வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் | 23-01-15 |

CENTRE FOR INFORMATION TECHNOLOGY
-Executive Officer-



NEW SCIENCE WORLD

**Navalar Road - Brown Road Junction, Jaffna.**

Web :- www.Physicsocian.com E.Mail :- info@Physicsocian.com Telephone :- 077 3364055

G.C.E (A/L) 2017 SCIENCE STREAM

| தமிழ்மொழி மூலம் | | English Medium | |
|---|---|---|---|
| பௌதீகவியல் | திரு. R. குமரன்<br>திரு. R. குகன் | Physics | Mr. R. Kumaran |
| இரசாயனவியல் | திரு. டயஸ்<br>திரு. T. சிவகுமார் | Chemistry | Mr. Dias |
| உயிரியல் | திரு. S. பொன்திவாகரன்<br>திரு. V. உமாசங்கர் | Biology | Mr. V. Umashanger<br>(Famous Biology Teacher-Colombo) |

ஆரம்பம் :- 23.12.2014 - செவ்வாய் காலை 07.00 மணி

க.பொ.த (உ/த) 2016 உயிரியல்
மாதாந்த தொடர் போட்டிப் பரீட்சை-கார்த்திகை 2014
# திரு. S. பொன்திவாகரன் # திரு. V. உமாசங்கர

| Index No. | Full Name | School Name | Marks | Rank |
|---|---|---|---|---|
| J/8100/B | ரதினி சண்முகலிங்கம் | V.G.H.S | 93 | 1 |
| J/8203/B | கோபிதா பவளகுமாரன் | V.G.H.S | 92 | 2 |
| J/8289/B | தமிழினி கங்காதரன் | V.G.H.S | 90 | 3 |
| J/8001/B | பிரவீனா இராகவன் | V.G.H.S | 87 | 4 |
| J/8037/B | நிதர்சினி இராமச்சந்திரன் | V.G.H.S | 87 | 4 |
| J/8397/B | லக்சிகா சேனாதிராஜா | V.G.H.S | 87 | 4 |
| Kn/8308/B | விவிரா சிம்மேந்திரன் | K.C.C | 86 | 7 |
| J/8304/B | கஜன்சிகா விமலச்சந்திரன் | V.G.H.S | 85 | 8 |
| J/8301/B | தமிழ்செல்வி சுரேந்திரன் | V.G.H.S | 84 | 9 |
| J/8185/B | ஜஸ்மினி பிறேமதாஸ்குமாரசிறி | V.G.H.S | 83 | 10 |
| J/8102/B | கார்த்திகா புவனேஸ்வரன் | I.C.M.V | 82 | 11 |
| J/8195/B | நிசாந்தினி விஜயகுமார் | V.G.H.S | 82 | 11 |
| J/8131/B | சீவரத்தினம் கோவர்த்தனன் | J.H.C | 81 | 13 |
| J/8368/B | லக்சன்யா புவனேஸ்வரகுமார் | H.F.C | 81 | 13 |
| J/8064/B | டிலக்ஷி ரூபகுமார் | U.G.C | 80 | 15 |
| Kn/8366/B | திலக்சனா பாலேந்திரன் | K.M.V | 80 | 15 |
| J/8118/B | ஞானச்சந்திரன் கஜீவன் | S.J.C | 79 | 17 |
| J/8095/B | சிவசத்தியராஜன் பிறையாளன் | J.H.C | 78 | 18 |
| J/8269/B | கியானி சிவஞானம் | V.G.H.S | 78 | 18 |
| J/8080/B | சந்திரமௌலீசன் கௌரிபாலன் | S.J.C | 77 | 20 |
| J/8097/B | தேவசேனா விஜயகுமார் | V.G.H.S | 77 | 20 |
| J/8341/B | ஸ்ரீலாஷா இராமகிருஷ்ணன் | C.G.C | 77 | 20 |
| J/8092/B | குலசநாதர் லிவின்டன் | S.J.C | 76 | 23 |
| T/8407/B | மலிக் முகமது காலித் | T.A.A.C | 76 | 23 |
| J/8442/B | கஜிசியா பேரின்பநாயகம் | M.L.C | 76 | 23 |
| J/8020/B | தனபாலசிங்கம் நிதர்சன் | M.H.C | 75 | 26 |
| J/8162/B | கபிலா துரைராசா | V.G.H.S | 75 | 26 |
| J/8351/B | நட்சயா உதயகுமார் | V.G.H.S | 75 | 26 |
| J/8360/B | கோகுலப்பிரியா கணேசலிங்கம் | V.G.H.S | 75 | 26 |
| J/8487/B | நிஷானா கமலநாதன் | K.H.C | 75 | 26 |
| J/8124/B | கோவிந்தமூர்த்தி கண்ணன் | J.H.C | 73 | 31 |
| J/8354/B | அபிராமி ரவிந்திரன் | V.G.H.S | 72 | 32 |
| J/8235/B | மிருஷா தர்மகுலசிங்கம் | V.C.H.S | 71 | 33 |
| J/8158/B | ஆன்தமிழினி கிப்றிட் அன்ரன் | C.G.C | 70 | 34 |
| J/8026/B | பவதாரணி சிவராஜா | V.G.H.S | 68 | 35 |
| J/8103/B | கஸ்தூரி செந்திற்செல்வன் | V.G.H.S | 68 | 35 |
| J/8190/B | தயேந்தினி ரகுநாதன் | V.G.H.S | 68 | 35 |
| J/8199/B | லௌசியா சுந்தர் | V.G.H.S | 68 | 35 |
| J/8099/B | கஸ்மிலா பத்மநாதன் | V.G.H.S | 67 | 39 |
| J/8125/B | தர்மராஜா சாருதன் | J.H.C | 66 | 40 |
| J/8139/B | மகேந்திரராஜா மாதுரன் | J.H.C | 66 | 40 |
| J/8163/B | கஜானா இரங்கநாயகம் | V.G.H.S | 66 | 40 |
| J/8094/B | தர்சிகா கந்தசாமி | H.F.C | 65 | 43 |
| J/8206/B | கிருஷாந்தி ஜெயராசா | P.G.H.S | 65 | 43 |
| J/8370/B | வினோஜா நித்தியானந்தன் | V.G.H.S | 64 | 45 |
| J/8410/B | இராமநாதன் டனுகரன் | S.J.C | 64 | 45 |
| Kn/8375/B | ரவீந்திரநாத் சிவலக்ஸன் | K.M.V | 64 | 45 |
| J/8081/B | காயத்திரி பஞ்சாட்சரம் | V.G.H.S | 64 | 45 |
| J/8322/B | பிரகாலினி சிவானந்தம் | V.G.H.S | 64 | 45 |
| J/8021/B | பிரவீனா சுரேஷ்சாந் | V.G.H.S | 63 | 50 |
| J/8086/B | சத்தியேந்திரா குபேந்திரா | S.J.C | 61 | 51 |
| J/8329/B | லக்சிகா ஜெயக்குமார் | K.H.C | 61 | 51 |
| J/8164/B | விதுஜனா பஞ்சாபிகேசன் | K.H.C | 61 | 51 |
| J/8018/B | கோலமுகி வேதநாயகன் | V.G.H.S | 60 | 54 |
| J/8201/B | டிலக்ஷனா சண்முகநாதன் | S.J.M.V | 60 | 54 |


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.